UNIVERSAL
LIBRARY
OU_208157
UNIVERSAL
LIBRARY

கழக வெளியீடு - ௪௨௫

# சங்க கால வள்ளல்கள்

(இரு நாடகங்கள்)

## முதற் புத்தகம்

திருவாளர் சிவ. குப்புசாமிப் பிள்ளை அவர்கள்
எழுதியது

திருநெல்வேலி, தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்,
திருநெல்வேலி :: சென்னை.

**First** Edition November 1946.

[Copy–right]

Published by
THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS
:: PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD., ::
TIRUNELVELI & MADRAS.

Q. H. MS-95-B. 1100 Copies-11-1946

Printed at the Rajan Electric Press, Madras.

# பதிப்புரை

*வள்ளல் பொருளிடம் காலம் வரையாது*
*கொள்வருள மேற்கொடுப்பர் கூர்ந்து.*

ஒரு நாடும் மொழியும் நலம்பெற, அந்நாட்டின் வரலாற்று உண்மைகளைச் செம்மையாக அறிதல் வேண்டும். அவ்வரலாற்றுள்ளும் முதன்மையாவன, செந்நாப் புலவரும், முறைகோடா மன்னரும், பிறர்க்கெனவாழும் பெருவள்ளல்களும் செய்த அருஞ் செயல்களே.

வள்ளல்கள் என்பார் எதையும் வரையாது கொடுக்கும் வாய்மையர். வரைதல் என்பது ஒதுக்கிவைத்தல். பொருள், இடம், காலம், கொள்வோர் முதலிய பகுதிகளை ஓர் எல்லைக்கு உட்படுத்தி வழங்குவாரும் உளர். அவ்வாறின்றிப் பொருளை அளவில்லாமலும், இடமும் காலமும் வரையறுக்காமலும், வேண்டும்போதெல்லாம் வேண்டிய அளவுக்குமேல் பலர்க்கும் தன்பயன் கருதாது கடமையாகக் கொடுப்பது வரையாது கொடுத்தல்.

அவ்வாறு கொடுத்த வள்ளல்கள் பலர். அவருள் கடைஎழு வள்ளல்கள் என்பார் பாரி, ஓரி, மலையமான், அதியமான், பேகன், ஆய், நள்ளி என்ப. இவர்கள் வரலாற்றை நம் கழக வழியாக நாடக வடிவில் தக்காரைக் கொண்டு எழுதுவித்து வெளிப்படுத்துங் கருத்து உடையோம்.

அவற்றுள் இப்பொழுது வள்ளல் அதியமான், பேகன், என்னும் இருவர் வரலாறுகளும், திரு சிவ. குப்புசாமிப் பிள்ளை அவர்களால் எழுதப்பெற்று வெளிவருகின்றன. மற்றவையும் தொடர்ந்து வெளிவரும்.

இயல், இசை, நாடகம் என்ற மூன்றனுள் நாடகமே மக்கள் உள்ளத்தில் பொருள்களை உள்ளவாறு நன்கு பதிவிக்கும் சிறந்த கருவியாகும். ஏனென்றால், ஒரு பொருளை இயல் மொழியால் உணர நம் மனம் செவியைத் தூண்ட வேண்டும். அதே பொருளை இசை மொழியால் உணர நேரின் செவியே மனத்தைத் தூண்டும். நாடக வாயிலாகவெனின் செவியொடு காணும் கண்ணும் கூடி மனத்தைத் தூண்டி அப்பொருளை நன்கு பதிவிக்கும்.

இந்நூலை மாணவர், ஆசிரியர், பெருமக்கள் எல்லாரும் வாங்கிக் கற்றுப் பயன் எய்தி, எங்கள் முயற்சிக்கு ஆக்கம் அளிக்குமாறு வேண்டுகின்றோம்.

நவம்பர், 1946<br>சென்னை.

தென்னிந்திய சைவ சித்தாந்த<br>நூற்பதிப்புக் கழகத்தார்.

# சங்க கால வள்ளல்கள்

## [முதற் புத்தகம்]

---

## வள்ளல் அதியமான் நெடுமானஞ்சி

தமிழ் நலம் பேணித் தந் நலங் கருதாப் பொன்மொழிப் புலவர்களால் பாடப்பெற்று, இரவலர், கூத்தர், பாணர் ஆகிய எவருக்கும் இல்லை யென்னாது கொடுத்து, வீரமும் வென்றியும் ஒருங்கே திகழுமாறு வாழ்ந்து வந்த, தமிழ் நாட்டுக் குறுநிலமன்னர் ஒரு சிலருள், வள்ளல அதியமான் நெடுமானஞ்சியும் ஒருவனாவன். பொன்னும், புவியும், அணியும், ஆடையும், தேரும் களிறும, உணவும் பிறவும் நல்கி, மாநிலஞ் சுருங்க நீடிசை நிறீஇய கடை வள்ளல்கள், இவனுடனே எழுவராவர்.

அஞ்சி, அதிகமான், அதியமான்-நெடுமானஞ்சி என்ற பல பெயர்களும் இவனுக்குண்டு: முடியுடைத் தமிழ் மன்னர் மூவருள் ஒருவனாகும் சேரனது மரபிற் றோன்றியவன்; இளமைப் பருவந்தொட்டே, அறிவு ஆண்மை, இரக்கம், ஈகை, உண்மை, ஊக்கம், எழில் நலம் முதலாய பல வாய்ப்புக்களுடன் கற்றலும் கேட்டலும் மிக்குடையான்: மேலும் அதிகை நகரில், வாழ்ந்த மழவர் என்ற வீரமரபினருக்குத் தலைவனுமாவான்.

இவனது வாழ்க்கை இவ்வாறாக, குதிரைமலை (குத்திராயமலை) என்பது கொங்குநாட்டின் வடபாலுள்ளது. அதனைச் சார்ந்துள்ளது தகடூர் (தருமபுரி) என்னும் ஓரூர். அங்குச் சேரர் மரபில் வந்த வேந்தன் ஒருவன் ஆண்டு வந்தான். எதிர்பாரா வகையில், பின் தோன்றல்களின்றி அவன் விண்ணொடு சென்றான். குடிகளைக் காக்கும கொற்றவன் இன்மையால் தகடூர் குழப்பம் கொண்டது. தலைவராதற்குத் தகுதியுடையார் எவரும் அவண் அதுபோது இல்லை. அச்செய்தியை 'அதிகைநகர்-அஞ்சி' அறிந்தான்: தக்க துணை வலியுடன் தகடூர்சென்றான்: அமைதியை நிறுவினான். ஆவன புரிந்து அதன் தலைமையை ஏற்றான். அது முதல் 'அதிகமானஞ்சி' தகடூரையே தன் இருக்கையாகக் கொண்டு, அதிகையையும் குதிரைமலை நாட்டையும் ஒருங்கே ஆளத் தொடங்கினான்.

தகடூரில், 'எழினி' காட்சிக் கெளியனாகிக், கடுஞ்சொல்லும் கையிகந்த தண்டமு மற்று, ஈதலினால் இசைபட வாழ்ந்து, செங்கோலோச்சுவதை யறிந்த நந்தமிழ் மூதாட்டியாகும்-ஔவையார், அவனைக்காணுமாறு அங்கு வந்தார். அதிகனும் ஔவையை அன்புடனே வரவேற்றுப், பன்னாள் அவருடன்அளவளாவி யிருந்து பலபரிசுகளுடன் பிரியா விடைநல்கி அவரைப் போக்கினான். ஒருநாள் எழினி, தின்றவரை நெடுநாள் வாழ்விக்கும் தீம் நெல்லிக்கனி ஒன்றை, மிகவும் அரிதிற் பெற்று மகிழ்ந்து, தனது இல்லம் குறுகிய போது, நீர்வேட்கை மிகுதியும் பெற்றவராக ஔவையார் அவண் இருக்கக் கண்டான். அவர்மீது அவன் கொண்ட பேரன்பினால், எவரும் பெறுதற்கியலாத அந் நெல்லிக்கனியை அவரிடம் தந்து, உடனே அதனை உண்ணுமாறு செய்து, பின்னர் அதனுண்மையைக்

கூறினன். அஃதுணர்ந்த ஔவையார் முன்னையினும் அவனிடத்து மிகுந்த அன்பு கொண்டார்; அவனது உலப்பிலாக் கொடைத்திறனை வியந்தார்; அவன் நல்லிசை யாண்டும் பரவுமாறு, அழகிய தமிழ்ப் பாமாலைகள் பல யாத்தார். அதிகனும் ஔவையைத் தன் தாயினும் பெரிதுமதித்து அவரை வழிபட்டு அன்பு பாராட்டினன். இத்தகைய செயற்கரிய செயலாலும், ஔவையார், பொன்முடியார், அரிசில்கிழார், பரணர் போன்ற பெரும்புலவர்களின் நலங்கிளர் புகழுரையாலும் 'அதியமான் நெடுமானஞ்சி'யின் புகழ், தமிழ் நாடு முழுவதும் பரவியது. மேலும், அதிகமான் தன்பாற் பிணக்குற்றிருந்த 'காஞ்சித்தொண்டைமான்' எனும் மன்னன்பால் ஔவை மூதாட்டியைத் தூது போக்கி அவனது நட்பினையுங் கொண்டான். இவை யாவும் தமிழ் மூவேந்தர்க்கு அதிகனிடம் அழுக்காற்றை வளர்த்தன. 'இருங்கோவேள்மான்,' 'எருமையூரன்' 'திதியன்' 'பொருநன்' என்ற அந்நாளின் குறுநில மன்னர்கள் நால்வரும் அதிகனிடம் பகைமை கொண்டு மூவேந்தரது படைத்துணை பெற்றுத் தகடூரை முற்றுகையிட்டனர். அறிந்தான் அதிகன்; சீற்றம் மிகக் கொண்டான்; நொடிப்பொழுதில் தம வீரரைத் திரட்டிப் படை கூட்டிப் போர்மேற் சென்றான். பகைவரது படைகள் கதிரவன் ஒளிமுன்னர்க் காய்ந்தொழியும் பனித்துளி யொத்தன. அதிகமான் வெற்றிவாகை சூடினன். அந்நிலையில், அவன் மனைவி ஓராண்மகவை ஈன்றாள். எனினும் தன பகைவர்மீது கொண்ட சினம் தணியாதவனாயிருந்ததை யுணர்ந்த ஔவையார், அவன் சினம் தணிவித்து அவனை மகிழ்வுறச் செய்தார்.

பின்னர்ப் பலநாள் செல்ல, அதியமான் நெடுமா ணஞ்சிக்கும், கடையெழுவள்ளலுள் ஒருவனை திருக் கோவலூரை யாண்டு வந்த 'மலையமான்' திருமுடிக் காரி என்பவனுக்கும் பகைமை நேர்ந்தது திருமுடிக் காரியுப் சிறந்த வீரனுவான். எனினும அதிகமான் வீர ருள் வீரனுதலால் அவனது நாட்டை முற்றுகையிட்டு வென்று அதனைத் தன் நாட்டுடன் சேர்த்துக்கொண் டான். காரி பெருஞ்சேரலிரும்பொறை என்னும் சேரமன்னனிடம் சென்று அவனது துணையை நாடி ஞன். அவனும் காரிக்கு உடன்பட்டுத் தனது பெரும் படையுடன் திடீரெனத் தகடூரை முற்றுகையிட் டான். தன்னை யொட்பார் யாருமில்லை யெனக் கருதிப் படைவலியை மிகுக்காது அரசியலிலேயே உளங் கொண்டிருந்த அதிகன் உளங்கவன்ருன். தன்னு லாயமட்டும் தன் படைஞரை ஊக்கிப் பெருஞ் சமர் புரிந்தான். என்செய்யினும ஊழ்வினை வலித்து நின்ற மையால் பெரும் வள்ளல் அதியமான்-நெடுமானஞ்சி இரும்பொறை வாளுக்கு இலக்காகி மண்ணுட்டரசை நீக்கி விண்ணுடு நோக்கிச் சென்ருன். அதிகன் இறந்த பிறகு தகடூர்ப் பெருமக்கள் ஒன்றுகூடி அதிகன் மகன் பொகுட்டெழினிக்கு முடி சூட்டித் தகடூர்ப் பெருநகர் நல் லரசும் வலிமிகு படையும் பொருந்தக் குடிகளைப் புரந்து ஆண்டு வந்தனர்.

நலம்! நலம்!! நலம்!!!

## முதல் இயல்—காட்சி க.

நாடக உறுப்பினர் :—அம்பலவாணர்; கிளிவண்ணன்; பிறைமுடியார்; குடிமக்கள் நால்வர்.

இடம் :—தகடூரில் முருகன் திருமுன்.

காலம் :—மாலைப்பொழுது.

[தகடூர்ப் பெருமக்கள் தங்கள் நாட்டின் குழப்பம் நீங்க, முருகன் திருமுன் கூடியிருந்து ஆம் நெறி யறிதல்.]

பிறைமுடியார்—:(தனித்திருந்து) அன்பு நிறைந்த அரும் பொருளே! தண்ணளி ததும்பும் தனிப்பெரும!! உலகெலாம் நிறைந்த எம் உயிர்நிலையே!! நாவார வாழ்த்தியவர்க்குக் கையார அளித்துவந்த எம தலைவனின் மரபு இவ்வாறாகவோ துன்புற வேண்டும்? என்னே, இக்காலத்தின் கொடுமை! நின் செயலை அளக்க எவரால் ஆகும்?---(பெரு மூச்செறிந்து வாளா, சற்று நிற்றல்)—ஓ! அதோ என் நண்பர் கிளிவண்ணனார் வருகின்றார். அவருக்கு இத் தகடூரின் நிலைமை நன்கு தெரியும். அவருடன் இதுபற்றி உசாவி அறிவேன். (கிளி வண்ணன் அண்மையில் வருதல்) வாருங்கள்! கிளிவண்ணரே, வாருங்கள்!! வாருங்கள்!!! நம் நகர்க் குழப்பம் எவ்வாறுளது? தங்கட்கு எட்டாத செய்தி எதுவும் இராதே.

கிளிவண்ணன்:—என்ன பிறைமுடியாரே! எனக்கு எட்டியதால் ஆய பயன் என்? இன்று நம் முருகன் திருமுன்னர்க் கூட்டம் கூடி, நகர வமைதியின் பொருட்டு ஒரு முடிவு செய்வதென நம் தலைவர் கருதியுள்ளார். இதோ காண்மின்! நம் அமைதித் தலைவர் திருவாளர் அம்பலவாணனார் வருகின்றார்!

நம்மூர்ப் பெருமக்களும் சூழ வருகின்றார்கள். நாமும் அவருடன் கலந்து ஆவன புரிவோமே?

**பிறைமுடியார்**:—ஆம்! ஆம்!! அதுவும் நன்றே. நானும் அவ்வாறுதான் கேள்வியுற்று இங்கு வந்தேன்.

[அம்பலவாணர் தகடூர மக்கள் சூழ வர, யாவரும்பணிதல்.]

**கிளி வண்ணன்**:— (பணிவுடன்) வருக, எம்பெரியோய், வருக! வருக!! அடியேன் வணக்கம். என்னே, நம்நகருக்கு உற்ற தாழ்வு! தங்கள் போன்ற பெரியோர்கள் இருக்கும்போதே இவ்வாறு துன்பங்கள் வந்தால்...அம்மம்ம! பிறகு சொல்லவும் வேண்டுமோ? நம் தலைவர் தகடூர் நாயகன், நாம் எதிர் பாராதவாறு விண்ணாடு புரக்கச் சென்ற இச்சிறு நாள் எல்லைக்குள் நம் தலைவன் பிரிவால் நம் உளம் நைந்து ஊறுபட்டிருக்கும் இதுபோது, யாரோ ஒரு சில வஞ்சகர்களின் சூழ்ச்சியால், நாடு நிலை கலங்கிக் குழப்பம் பெற்றுத் தடியெடுத்தவன் தண்டற்காரனாக மாறியிருப்பதன் கொடுமையை, என்னென்பது! அழுக்காறும் பேராசைப்பித்தும் தலைக்கேறிய அவர்களது தீச்செயல்கள் நம்மவர்க்கு எத்தகைய துன்பம் தருகின்றன. காண்மின்! ஆதலால், பெரும! தாங்கள் இவ்விடரினை இன்னே களைந்தெறிதற்குரிய முறையினை நன்கு கருதி, எமக்கு வழங்குதல்வேண்டும்.

**முதற் குடிமகன்**:— (வணக்கத்துடன்) பெருந்தகவோய்! நம் மன்னர்பிரான், மாநிலம் தாங்கியபோது, பசுவும் புலியும் ஒரு துறையில் படிந்து நீரருந்திய அந்நாள் கெட்டு, இன்று அன்பராகுநர் யாவர்; அல்வழிப் படருபவர் யாவர் என அறிய வியலாதவாறு நம் நாடு உளது. சிறந்த அறிவு மிக்க சான்றோராகிய தங்க

ளது கண் முன்னேயே இவ்வடாச் செயல்கள் நிகழு வதை நோக்கின், நம் நகரை இவ்வாறு தவிக்க ஏற் பாடு செய்த அக்கொடியவர்கள், ஏதோ மறைவாகப் பிறரது பற்றுக்கோடு பெற்றே இத்தீவினைகளைப் புரிவ தாகக் கருதுகின்றேன். இத்தகைய இடுக்கண் வந்த விடத்துத் தங்களை யல்லாத பிறர்பால் எங்கள் உள்ளம் செல்லவில்லை.

**இரண்டாவது குடிமகன்:** — (தொழுது--வீரத்துடன் நின்று) உயர்குடித் தோன்றலே! எங்காது நிலை தாங்கள் அறியாதது அன்று. நாட்டின உரிமையைக் காப்பதன் பொருட்டும், நம் வழித் தோன்றல்களின் நன்மையை நாடியும், மானம், ஒப்புரவு, தாளாண்மை, தொண்டு இவற்றையே தம் பணிகளாகக்கொண்ட இளமையும் உடல் வலிமையும் உளத்திட்பமும் ஒருங் கே பொருந்திய ஓர் ஆயிரத்துக்குமேற்பட்ட இளை ஞர்கள், தாங்கள் தலையசைப்பின், இன்னே, இத்தகரு ரைத் தவிக்கவிட்ட அத்தந்நலமாக்களைப் படை முகத்து வாள் முனையில் பார்த்து நிற்க விழைகின்றார் கள். ஆதலால், எம் அண்ணலே, இன்றே தங்களது ஆணையை அவர்கட்கு அளியுங்கள்.

**அம்பலவாணர்:**—இளைஞர் தலைவ! நீவிர் யாவரும் நம் நாட்டிடைக் கொண்டுள்ள அளவுகடந்த அன் பினைப் பாராட்டுகின்றோம். மேலும், போர்முனையில் நமக்கு மாற்றலராக வுள்ளவர்களை வீழ்த்தவேண்டும் என்ற வீரமொழிகள், தங்களைப்போன்றவருளத்தில் தோன்றுதல் மிகவும் பொருத்தமேயாகும். எனினும் நம் நாடு இதுபோது இருக்கும் நிலையில் அஃது ஆகாத செயலே யொழிய வேறில்லை. நிற்க, நாம் இன்று தொட்டுப் போருக்கு வேண்டுவன செய்து, படைதிரட்

டிச் சமர் முறுக்குவதற்குள் ஒரு திங்கள் ஆகிவிடும். எனவே நம் பகைவர்கள் இத் தகடூரைப் பற்றித் தவிடுபொடியாக்கி, நம்மை அடிமைக் குழியிற் றள்ளி நம் செல்வங்கள் அனைத்தையும் கொள்ளைகொண்டு போவார்களென்பது திண்ணம். மேலும், நமக்குள், ஒற்றுமையுணர்ச்சியும் தந்நலமின்மையும் இது போது பாழ்பட்டுக் கிடப்பதால், நாம்போர் குறித்துக் கருதாது, வேறு நெறியிற்படரவேண்டும்.

**கிள்ளிவண்ணன்:**—ஆமாம். போர் என்றால் பொருளல்லவோ செலவழிகின்றது. பொருளழிந்தாலும் நம் நாடு இருக்கும் நிலையில் வெற்றிக்கு உறுதி கூற யாரால் ஆகும்?

**பிறைமுடியார்:**—நீங்கள் கூறுவதுபோல் போர், போர் எனச் சொல்வதால் ஏற்படும் இன்னல்கட்கு எல்லையே இல்லை. நம் கருத்துக்கு மாறுபட்டவர் இருப்பின் அவர்களிடம் இனிமை பயக்கும் முறையில் நடந்து அமைதி நிலவச் செய்யலாம். ஆதலால் தாங்கள் உளங்கொண்ட கருத்தினை அறிவியுங்கள். உடனே ஆவன புரிந்து, நாட்டின் குழப்பத்தை ஒழிப்போம்.

**அம்பலவாணர்:**—அன்பர்களே! என் கருத்து, இப்பொழுது நமக்குள் இருக்கும் ஒற்றுமைக் குறைவை நீக்குதற்பொருட்டே யாகும். நமக்குள் இருக்கும் பிளவை மிகுதிப்படுத்துவதற்கு நம்நாட்டு முடியுடை வேந்தர் மூவரும் முனைந்து நிற்கின்றனர். அவர்கள் மறைவாகக் கலாம் விளைப்பவர்கட்குத் துணையாக இருந்து, அவர்களை ஊக்குகின்றார் என நம் ஒற்றனொருவன் அறிவிக்கின்றான். ஆதலால், நாம் ஒன்று கூடி எவ்வாறாயினும் நம் நாட்டில் குழப்பம் விளைவிப்

பவர்களை அடக்கி, நாட்டில் நன்முறை வழங்குதற்குற்ற முறையையே கொள்ளவேண்டும்.

**சிவிவண்ணன்:**—ஆம்! தலைவ! அதற்கு ஆம் வழியினையே விரைவிற் கொள்ளுவோம்.

**அம்பலவாணர்:**—நம்முள் ஒன்றுகூடிக் கலாம் விளைவிப்பவர்களை யடக்க இயலாது; ஆதலால், நம் நாட்டுடன் தொடர்புள்ளவனும், உறவினனும், பெரும் வள்ளலுமாகிய அதிகைநகரின் தலைவனும், திருமகளும் கலைமகளும் ஒருங்கே பெற்ற, சீர்மிகு அதிகமானெடுமானஞ்சியிடம் சென்று, நங் குறையினை அறிவித்து, நமக்குத் துணைபுரியுமாறு இறைஞ்சுவோமாயின், அவனது வருகையைக் கேட்ட இவர்கள், அவனது வெற்றிமலிந்த ஆண்மைமிகும் படைககஞ்சி, இடியொலி கேட்ட நாகமென ஒடுங்குவர் என்பது திண்ணம். மேலும் நம்நாட்டின் குழப்பம் நீக்கப்பெற்றதும் நம் தகடூர் நாயகற்குப் பின்வழி இன்மையால், அவ் 'அஞ்சி'யையே மன்னனைக் கொள்வோமாயின் நம்மனோர் செய்த பேற்றைக் கூற எவரால் ஆகும். இக் கருத்துப்பற்றி நீவிர் என்ன கூறுகின்றீர்களோ, அதுவே எனது கருத்துமாகும்.

**பிறைமுடியார்:**—அம்பலக்கூத்தரே! உங்கள் கருத்து மிகவும் போற்றத்தக்க தொன்றும். நாம் தலைவனில்லாது வருந்துமிந் நிலையில், 'கண்ணின்றிக் கவலும் குருடனுக்குக் காணும் ஒளியளித்த கடவுளே போல் தாங்கள் உலகம் வரினும் வழங்கக் குறைபடா வள்ளன்மை மிக்க எழினியைக் குறித்தீர்கள். அத்தகையானை மன்னனைக் கொள்ள எம் மனம் மிகுந்த மகிழ்ச்சியுடன் களிக்கின்றது.

**கிளிவண்ணன்:**—தாங்கள் கூறியது முற்றும் பொருத்தமே. எனினும் நம்மிடை வந்து வதிவதற்கு அவர் உடன்படுவாரோ வெனும் ஐயம்தான் எனக்கு எழுகின்றது.

**அம்பலவாணர்:**—நாம் ஒன்றுபட்டு விரும்பின், அவர் வருவதற்குப் பின்னிடார். நாம் அவரிடத்துக் காட்டும் அன்பினால் யாவும் எளிதிற் பெறலாகும்; அதற்கு ஐயமே வேண்டுவதில்லை. ஆதலால், நாம் அனைவரும் இன்று மாலையே அதிகைக்குச் சென்று, எழினியிடம் நம் நிலையைக் கூறி, விரைவில் நம் நாடு நலம் பெற, எழினியையே தலைவனாகக் கொள்வோம்; எழுந்திருங்கள்; செல்வோம் விரைவில். நாம் கொண்ட இவ்வினை முட்டின்றி முடியுமாறு, முருக வேளை நாம் அனைவரும் போற்றி வணங்குவோமாக.
(யாவரும் முருகனைப் பாடி வழிபடுதல்.)

எதிரி லாத பத்தி தனைமேவி
இனிய தாள் நி னைப்பை இருபோதும்
இதய வாரி திக்குள் உறவாகி
எனது ளேசி றக்க அருள்வாயே
கதிர காம வெற்பில் உறைவோனே
கனக மேரு ஒத்த புயவீரா
மதுர வாணி உற்ற கழலோனே
வழுதி கூன் நி மிர்த்த பெருமாளே.

இயல் க—காட்சி க முடிவு.

## இயல் க—காட்சி உ.

**உறுப்பினர்** :—பரணர், பொன்முடியார், அதிகைமுதல்வன், அமைச்சன், எழினி, காவலன், அம்பலவாணர், கிளிவண்ணன், நகர்முதல்வன்.

**இடம்** :—அதிகையில் எழினியின் கோயில்.

**பொழுது** :—காலைப்பொழுது.

(தகடூர் மக்கள் அதிகை நகாததலைவன் அஞ்சியைத் தங்கட்குத் துணையாமாறு வேண்டுதல்.)

**பரணர்** :—உலகம் சுருங்குமாறு புகழ் பரப்பும் உயர்ந்தோய்! வரையாது கொடுக்கும் வள்ளலே! யானை, தன் கொம்புகளுக்கிடையே, தான் உண்ணுதற்குரிய கவளத்தை வைத்துக்கொண்டு பொழுது போக்கினும், பின்னர்த்தவறாது அக் கவளத்தை அஃது உண்டு விடுவதுபோல, நின்னை யடைந்த புலவர், பாணர், இரவலர் எவரும், 'பரிசிலும் நம் கையகத்தே உளது. நெஞ்சே! நீ வருந்த வேண்டா. இவன் தாள் நீடுவாழ்க' என நினைந்து நீ காலம் நீட்டித்தாலும், உன்பால் உறுதிகொண்டு, நாளும் பழுமரம் நாடிய பறவைபோல நின்னை நாடி வந்த வண்ணமாகவே இருக்கின்றனர். ஆதலால் கருந்தன மின்றிக் கவலை யுற்றுக் கலங்குவார்க்குக் களைகணு யுள்ள நீ, நீடு வாழ் வாயாக!

**பொன்முடியார்** :—மலர்ந்த தும்பை யணிந்த பரந்த மார்பையுடைய வீரர் தலைவ! விரிந்த வெண்காந்தள் மலர், இலை தழைத்த குளவியுடனே மணக்கும் மலைச சாரலிலுள்ள சினம் மிகும் புலி சீறின், அதனை எதிர்க்க வல்ல மான்கூட்டங்களும் உண்டோ? உலகம் உவப்பப் பலர்புகழ் செஞ்ஞாயிறு தோன்ற முற்படின், வானத்

தின் எந்தத் திசையிலாவது செறிந்த இருள் நிலைக்க இயலுமா? அவைபோல் பெரும! நீ போர்க்களத்திற் புகின், நின் முன் நின்று ஆர்த்து எழும் வலிமையுடைய வீரரும் இந்நானிலத்தும் உண்டோ?

அவைக் முதல்வர் :—நன்மணம் உற்ற பொன்மலர் போல் கல்வியிற் சிறந்த கட்டழக! தந்தையர்க்குத், தமது இளமை மிக்க சிறுபிள்ளைகளின் மழலை ததும்பும் மொழிகள் யாழின் ஓசைபோல இசையினால் இன்பமும் செய்யாது, உரிய காலத்தோடும் சேர்ந்தும் இராது, பொருளும் அறிய வாரா நிலையினவாயினும், அச்சொற்களே அவர்கட்கு மிகுந்த இன்பத்தைத் தருகின்றன. அஃதொப்ப, உடல் நலம் பொருள் நலம், படைநலம், ஆட்சிநலம் யாவும் பெற்றிருந்தும் கல்விநலம் கனிந்த பெரியாரின் அமுத மொழியினை உண்டாலன்றி நினது நெஞ்சம் அமைதியுறுததாயிருக்கின்றது, என்பதை நன்குணர்ந்த நின் குடிமக்கள் யாவரும் கல்வித்துறையிற் படிந்து கற்றல் கேட்டல் இவற்றுள் மனங்கொண்டு, அறிவு விளக்கம் பெறுகின்றனர்.

அமைச்சன் :—ஆட்சிநலம் பெருக, கோல் கோடாது நன்முறை செலுத்தும் மாண்பு மிக்க மன்ன! நம் நாட்டின் குடிமக்கள் யாவரும் பசி, பிணி, பகையின்றிக் கல்வியும் செல்வமும் மிக்குடையராய், இன்புற்று வாழ்கின்றனர். மேலும், பரணர் பெருமான், பொன்முடியார், நம் நாட்டு முதல்வர் ஆகிய இம்மூவரும் மாட்சிமிக்க தங்கள் வென்றியும் புகழும் விளங்கக் கூறினர். தங்களது மன்னுயிர் ஓம்புந் திறன், நம்நாட்டு முடியுடை வேந்தர் மூவருக்கும் பொருமையை விளைவித்துள்ளதெனில் எம்மனோர் தங்களது

பெருமையைக் கூறல் இயலுமோ! திருவருள், எல்லாம் வல்ல, தங்களது ஆட்சிநலன், நீடு நிலவ, அருள்புரிவதாகுக.

அஞ்சி :—அறிவுசால், அன்புமிக்க பெருந்தகையீர்! நீங்கள் அனைவரும், எனது புகழை, மிகுதிப் படவே கூறினீர்கள். நமது வழிபடு முதல்வனும் முருகனது திருவருள், நீவிர் கருதிய அனைத்தும் எளியனுக்கு எளிதில் வந்துறத் துணைபுரியுமாக. உங்களது உறுதுணையைப் பற்றி, அவனது அருள்வழி நின்று எனது கடைமையை யான் இனிது புரிய மறவேன் என்பது திண்ணம்.

காவலன் :—(வணங்கி நின்று) எளியாரைப் புரந்து வலியாரை வாட்டி, குடிநலம் ஓம்பும் கொற்றவ, வாழி இ! தங்களது கழலடி எனது முடியை அழகு செய்யுமாக. பெரும! நமது தலைவாயிலிலே, தகடூர்ப் பெருமக்கள் ஒரு சிலர் கூடி நின்று தங்களது திருவருட்காட்சியை விரும்பி வேண்டுகின்றனர்.

அஞ்சி :—நல்லது. காவல அவர்களை விரைவில் இவண் அழைத்து வருக.

காவலன் :—தங்கள் திருவாணைப்படி (வணங்கிச் செல்லுகிறான். அம்பலவாணர், தகடூர்ப் பெருமக்களுடன் உள் நுழைந்து வணங்குதல்.)

அஞ்சி :—வருக! தகடூர்ப் பெருமக்களே! வாருங்கள்! வாருங்கள்! இவண் அமருங்கள் (தகடூரார் இடத்தமர்தல்) நீவிர் யாவரும் இவண் எழுந்த நிகழ்ச்சி யாதோ? உங்களது தலைவரும் பிறரும் நலந்தானே?

அம்பலவாணர் :—கொடியவரை வாட்டி, அன்பரைப் புரக்கும் கொன்றைமலர் புனைவோனின் அருள் நிலைப் பட்டகோவே! எங்களது வணக்கம் உங்கட்கு

உரியதாகுக. எங்கள் தலைவன் 'தகடூர் நாயகன்', தாயை இழந்த சேய்போல யாங்கள் இவ்வுலகி லிருந்து நெடுந்துயரெய்துமாறு விட்டு, இறைவன் திருவடியை நாடிய செய்தி தாங்கள் அறிந்திருக்க லாகுமே?

அஞ்சி:—(வியப்பும் துக்கமும் தோன்ற) ஆ! என்ன! என் நண்பன் 'தகடூர் நாயகன்' இறந்தா பட்டான்! இச்செய்தியை யான் அறியேனே! என்ன! இவ்வுலக வாழ்க்கை! கல்வி நிறைவும் பெருந் தன்மை யும், மனவலியும் ஒளித்த மாக்கருணை, ஏனோ அவற்கு இவ்வுலக வாழ்க்கையைத் தந்திலது..........அவன் செயலை எவர் அறிவர். பின்னர் என்ன நிகழ்ந்தது?

அம்பலவாணர்:—பெரும! மன்னன் மண் நீத்த அன்றே, அவரது கற்புடைத தேவியும் அவருட னேயே விண்ணோடு சென்றாள். அவர்கட்குப் பின், எங்கட்கு, நாடாள்வார் எவரும் இன்மையால், குடி மக்களுள் பிளவு ஏற்பட்டு, நாட்டின் ஆட்சியைக் கைப்பற்ற, அவரவரும் முயலுகின்றனர். தனியாட்சி யின்மையால் தாந்தோன்றிகளாய பல தறிதலைகளி னால் ஏற்படும் இன்னல்கட்கு அளவேயில்லை. நாட் டின் நலங்கருதி யாங்கள் கொண்ட முயற்சிகள் அனைத்தும் விழலுக்கு இறைத்த நீராயின. ஆதலால், அருள்வடிவாய அண்ணலே! தாங்கள் எம்முடன் போந்து, எம்மூரிலுள்ள இழிதகவுடைய அறிவற்ற சிற்றினஞ் சூழ்பவரை அடக்கி, நாட்டில் அமைதியை நிலைநாட்டவேண்டும், என்ற விண்ணப்பமே முதலாவ தாகும். மன்னுயிரனைத்தையும் தன்னுயிரென மதிக் கும் மாண்புடை இறைவனை, தாங்கள் அமைதியை நிறுவி ஆண்டிருந்து ஆட்சியைச் செலுத்தாவிடில்,

மறுபடியும், அம்மதியிலா மக்களால் கலாம் பல விளையும் என்பது உறுதி. ஆதலால் எங்கள் வேண்டுகோட் கிரங்கித், தங்களது அரசிருக்கையாகத் தகடூரைக் கொண்டு, இடர்ப்படும் எங்களையும் புரந்து, அருளல் வேண்டும், என்பது வேண்டுகோளாகும்.

**கிளிவண்ணன்** :—நிறைமதிச் செல்வ! இங்கு எம்முடன் வந்த இவ்வம்பலவாணரே, எங்கள் ஊரின் தலைமைப் பெருங்குடியினிற் பிறந்த முதல்வர் ஆவர். அன்னவரே இதுபோது எங்கட்கு உற்ற பெருந் துன்பங்களை யெல்லாம் துடைப்பதற்கு முயன்று வருகின்றார். எம் நாட்டு ஆன்றோர் பலரும், அவர் வழியே நிற்பர். ஆதலால் தாங்கள் அவரது வேண்டுகோட் கிணங்கி எம்மைப் புரக்க அருள்புரியுமாறு வேண்டுகின்றோம்.

**தகடூர் நகர் முதல்வன்**:—மாண்புநிறை மன்ன ! இங்குள்ள அம்பலவாணரும் அவர்தம் நட்பிற்குரியவராக நிற்கும் இக்கிளிவண்ணனும் எங்களூரின் உயிரும், உடலும் போன்றவர் ஆவர். உடலுக் குற்ற பிணி போல, எம் தலைவன் 'தகடூர் நாயகன்' மறைவிற்குப் பின், எங்கள் நகரில் குழப்பமும் சீர்கேடும் தோன்றி யுள்ளன. தக்க மருத்துவராய தலைவர் இல்லாது தவிக்கும் எங்கட்கு, வாணாள் வளர்ச்சியை மிகுக்கும் மருத்துவ நாதரை யொப்பத் தாங்கள் இருக்கின்றீர்கள். தங்கள் துணைவலி எங்கட்கு என்றும் வேண்டற்பாலதேயாம். ஆதலால், தாங்கள் எங்கள் எளிய வேண்டுகோட்கு மறுத்துரைக்காது, மனம் கொள்ளும் வண்ணம், பலகாலும் எம் நகர்க் குடிமககள் சார்பாக நாங்கள் தங்களை இன்று இறைஞ்சுகின்றோம்.

அஞ்சி:—தகடூர் மக்களே! நீங்கள் கூறிய அனைத்தும் எம் கருத்துக்கு வந்தது. யானும் உங்கட்கு ஒரு சிறிது கடமைப்பட்டுமுள்ளேன். உங்கள் தலைவன், தகடூர்நாயகன் சேரமரபின் தொடர்புடையவன்; யானும் அவ்வாறே அம்மரபில் வந்தவன். மேலும், அவன் என் உழுவலன்பனும் ஆவன். ஆதலால் அவன் நாட்டிற்கு ஏற்பட்ட இன்னல்கள் பலவும், இவ்வதிகை நாட்டிற்கும் ஏற்பட்டதே போன்றதாகும். நீவிர் அனைவிரும் அதற்காகக் கவலற்க. உங்களுடன் எம் நாட்டு அணித்தலைவரை இன்னே அனுப்புவேம். அவரைக் கொண்டு நீவிர் ஆவன விரைவிற் செய்யுங்கள்; யாமும் அவண் விரைவில் இருப்போம்.

அம்பலவாணர்:—வாழிய, வள்ளால், வாழிய நின்னருள்! யாவும் தங்கள் அருள் மொழிப்படி, இனிதே எய்துக.

அஞ்சி:—ஏடா! வாயிற் காவல. நீ விரைந்து சென்று நம் அணித் தலைவரை இங்கு அழைத்துவருக.

காவலன்:—தங்கள் திருமொழிப்படி. (வணங்கிச் செல்லுதல்)

அஞ்சி:—அம்பலவாணரே! யான் உங்கள் தலைவனுதற்கு உரிய துணை யாவும் நும் போன்றார்பாலே செவ்விதில் அமையுமெனக் கருதுகின்றேன். ஏனெனில் நாட்டின் அமைதியைப் பெரிதும் கருதியுள்ள உங்களைப் போன்றவர்களாலேதான், அதன் நலங்கள் யாவும் புரக்கப் படுவதோடு, அதற்கு வேண்டிய அமைதிகள் யாவும் நிலைநிறுத்த வியலும்.

**அம்பலவாணர்:**— பெருந்தகையாள! எங்களது தொண்டு, தங்கட்கு என்றும் உளதாகும். தங்கட்குத் துணையாக, யாங்கள் அனைவரும் ஒருமுகமாகக் கூடி நின்று, எங்களது உடல, பொருள், ஆவி இம்மூன்றையும் அளிப்போம். நாட்டில் நலங்காண யாங்கள் எத்தகைய துன்பமும் ஏற்றுக்கொண்டு, அதன் முற்போக்கி லீடுபட்டு உளமார உழைக்க எத்துணையும் பின் வாங்கோம். பெரும! யாங்கள் கூறும இஃது என்றும் உறுதியே.

**அஞ்சி:**—நன்று அவ்வாறே ஆகுக!! (காவலனை நோக்கல்.)

**காவலன்:**—(வணக்கமாக) மன்னர் பெரும! நம் அணித் தலைவர் இதோ வருகின்றார். (அணித்தலைவர் அவையிற்போந்து அதிகனை வணங்குதல்.)

**அணித்தலைவர்:**— (பணிவுடன்) எம் பெரும! போற்றி! எளியரின் துணையே, போற்றி!! தாங்கள் எளியனைக் கருதியது எதற்கோ? அறியேன்.

**அஞ்சி:**—கருணாகர! நீ விரைந்து நம்படையோடு இவ்வம்பலக் கூத்தருடன் தகடூர் சென்று, அங்குக் கலகம் மிகுந்த இடங்களை யறிந்து, மக்கட்குச் சேதமின்றிக் குழப்பத்தை யடக்க, வேண்டுவன புரிக!

**அணித்தலைவன்:**—தங்கள் கருத்துப்படியே ஆவன புரிகின்றேன். வணக்கம் பெரும! சென்று வருகிறேன்.

**அஞ்சி:**—அம்பலக் கூத்தரே! கிளிவண்ணரே! குடி மக்களே! நீங்கள் அணித்தலைவர் கருணாகரரைக் கொண்டு நகரின் நலத்தை நாடுங்கள். யாமும் ஒல்லையில் அவண் வருவேம். சென்று வாருங்கள். கவலை

சிறிதும் கொள்ளற்க: அறமே என்றும், வெற்றி பெறும். (யாவரும் நின்று பணிதல்.)

இயல் க—காட்சி உ. முடிவு.

---

## இயல் க – காட்சி ௩.

**உறுப்பினர்:**—அம்பலவாணர், பிறைசூடியார், கருணாகரத் தேவர், பொதுமக்கள், அதியமான், பணியாளன்.

**இடம்:**—தகடூர் அரசர் மன்றம்.

**பொழுது:**—காலைப்பொழுது.

[அஞ்சி, தகடூரைத் தன் வயமாக்கி அதியமான் நெடு மானஞ்சி யென்ற பெயருடன் ஆட்சிபுரிதல்.]

**அம்பலவாணர்:**—(முன்னே இருப்பவர்களை நோக்கி) தாய்நாட்டுத் தனிப் பெருமக்களே! எனது அன்பு மிக்க தோழர்களே!! நமது நாடு ஒரு சிறுகால வெல்லைக்குள், நம் பகைஞர்களின் கொடுமைகளாலும், நம் நாட்டவரின் ஊழ்வலிப்பயனாலும் அடைந்துள்ள அலலலல்களை அறியாதார் எவரும் இங்கு இல்லை எனலாம். நாம் பெரிதும் துன்பத்தால் துவண்டு வாடித் துயருற்ற நாளில், 'வழுக்கு நிலத்தின் ஊன்று கோல் போல' நமக்குப் பெருந்துணையா யமைந்தவர்கட்கு நாம் எவ்வாறு கடமைப் பட்டுள்ளோம் என்பதை இவண் விரித்துக் கூற வேண்டியதன்று. 'இடியொலி கேட்ட அரவென'க் கணையொலியால் நம் மாற்றலர்கள் அஞ்சுமாறு, தன் திறனைக் காட்டிய திருமிகு கருணாகரத்தேவர் இன்றேல் நம நிலை யாதாயிருக்கும்? ஆதலால், அன்பர்களே! நம் நன்றியைக் காட்டு முகத்தால், நாம் அனைவரும் ஒன்று கூடி இவ்வீரரின் வெற்றி நாளும் ஓங்க, வாழ்த்துவோமாக.

**பிறை சூடியார்**:—வாழ்க, நம் கருணாகரர்! (யாவரும்—வாழ்க, வாழ்கவே!)

**அம்பலவாணர்** :—பெரியோர்களே! இதுபோது, நம் நாட்டுக் குற்ற நன்மைகள் நம் கருணாகரத் தேவரால் வந்தனவாயினும், அன்னவர் இங்கு வருதற்கு ஆணை தந்தவர் ஆர், என்பதை நாம் நினைக்கவேண்டாமா? நம் நாட்டின அன்பரும், கருணாகரத்தேவரின் தலைவரும், அதிகைப் பெரும்பதியின் அண்ணலுமாய, மாண்புமிக்க, அஞ்சி மன்னரை, நாம என்னென்று கூறுவது? நம் தகடூர் நாயகரின் பிரிவினால், நாம் உற்ற துன்பத்தை அறிந்தவுடனேயே, 'மெய்தாக்கும வியன்கோலடிடைக் கைக்கு, கடிது சென்று காக்கும்' தொப்பவும் சேய் படுந் துயருணர்ந்த தாய்போலவும் வேண்டுவன புரிந்து நம் நாடும், நகரும், பீடும் பெருமையுங் கொள்ளுமாறு நம்மைப் புரந்த அப்பெருமானை நம் அன்னை என்பதா, அப்பன் என்பதா, ஆசிரியன் என்பதா, அரசன் என்பதா அல்லது நம் ஆண்டவன் என்றுதான் சொல்வதா?

**பிறைசூடியார்**:—பெரும! தாங்கள் கூறிய ஐவரது பண்பும் இங்கு நமது அஞ்சி மன்னரின் ஓர் உருவிலேயே தோன்றுவதாக அவரை நம் "ஐம்பெருங் குரவராய அண்ணல்" என்றழைப்போமே.

**அம்பலவாணர்**:—நன்கு மொழிந்தார், பிறைசூடியார். ஆதரவில்லாத நமக்கு, இந்நாளில் அஞ்சிப் பெருமான், நம் ஐம்பெருங்குரவராகவே அமைந்துள்ளார். எனது நாட்டுப் பெருமக்களே! அஞ்சிப்பெருமான் நமது தகடூர் நாயகற்கு உற்ற நண்பராவார்; உறவினருமாவர்; இன்னும் சேரர் தொல்குடித் தொடர்பும் உற்றவர். வீரருள் வீரராகவும்,

தொன்மை மரபில் செம்மையராகவும், கற்றல் கேட்டலிற் சிறந்தவராகவும் நெறிமுறை வழுவா நியதியராகவும உள்ள அஞ்சிமன்னரைப போலத் தகுதி பெற றுரொருவரை நாம் எவ்வளவு முயன்றாலும பெற இயலாது. ஆதலால், நாம் அனைவரும் ஒரே உளத்துடன் மிகுந்த மகிழ்ச்சியோடு நம் நகருக்கு அவர்களைத் தக்க சிறப்புக்களுடன் வரவேற்று, அவர்களையே நமது நாடடிற்கும் என்றும் உற்ற தலைவராக ஏன் கொள்ளுதல் கூடாது?

**பிறைசூடியார்** :—அம்பலவாணப் பெருமான் கருத்தின் படியேய ஆகுக.

**பொதுமக்கள்** :—ஆம்! ஆம்!! அதுவே நன்று! அதுவே நன்று!!

**கருணாகரர்** :—தகடூர்ப் பெருமக்களே! உங்களது ஒற்றுமை மிகுந்த உளத்துக்கும், உங்கள் தலைவரின் கருத்துக்கு மாறுகொள்ளாத் தகுதிக்கும் ஏற்பவே நீங்கள இதுபோது உங்கள் தலைவரைத் தேர்ந்துள்ளீர்கள். நீங்கள் விரும்பிய தலைவர், அதிகையின் அண்ணல் நெடுமான் அஞ்சி, கிடைத்தற்கரிய பெருந்தகையாளர் ஆவர். எனவே அவரது ஆட்சியினால் இததகடூர்ப் பெருமக்களனைவரும் நடுவூர் மரம் பழுத்தாலன்ன பெரும் பய னெய்துவர். தகைமைசால் பெரியீர்! மன்னன் இவண் வருதற்கு உற்ற பொழுதும் நெருங்குகின்றது. யாம் அனைவரும் அவரது வருகை மேல் மனங்கொண்டு அதற்கு ஆவன புரிவோமாக.

**அம்பலவாணர்** :—நன்று கருணாகர! அஞ்சிவேந்தர் எமது நாட்டுரிமையைப் பெறுதற்குற்ற மணிமுடி, வாட்படை, பூந்தார், செங்கோல் ஆய யாவும் இதோவுள்ளன. மன்னர் வருகைதான் வேண்டும்.

ஓர் இளைஞன் :—பெரும! நமது அஞ்சி யண்ணல்!! ஆண்டுக் காண்மின், காவலர் முன்வர அன்பர் புடை சூழ வருகின்ற காட்சியை!

அம்பலவாணர் :—மகிழ்ந்தேம்! மகிழ்ந்தேம்!! எம் பெருமான் அஞ்சியின் வருகையால் எமக்கு எக்குறையும் வாரா திருக்குமாக. அன்பீர், நாம் யாவரும் அஞ்சி மன்னர் இவண் அணுகியதும் நமது வாழ்த்தொலியால் அவரது உள்ளம் களிகூர வரவேற்போமாக. (அஞ்சி அவையுட் புகுதல்; 'அம்பலவாணர் முன்சென்று வணங்க' யாவரும் பணிதல்) அதிகை நகர் அண்ணல், அஞ்சி மன்னர் வாழ்க!

பொதுமக்கள் :—வாழ்கவே!! (அஞ்சி மகிழ்ச்சியுடன் அரசு கட்டிலில் அமர்தல்)

அம்பலவாணர் :—வாழ்க! எம்பெரும! வாழ்க நின் சுற்றம்!! தங்கள் வருகை எமக்கு நல்வரவாகுக. எம் அண்ணல்! யாங்கள் விண்ணப்பித்த எளிய சிறு மொழியைப் பெரிதெனக் கொண்டு, தங்கள் படை முதல்வர் கருணாகரரால் எமது துன்பத்தைத் துடைத்துய, இன்னும் தாங்களே நேரிற் போந்து எமது நாட்டின் ஆட்சியை உளநிறைவுடன் ஏற்றும் எம்மைப் புரக்க வந்த தங்களது அருட் செயலை யாங்கள் என்னென்பேம்! எமது மகிழ்ச்சியை விரித்துரைக்கும் நெறி எங்கட்குப் புலப்பட்டிலது. யாங்கள் தங்களுக்கு என்றும் அமைதியும், பணிவும் நிறைந்த குடிமக்களாகித், தங்கட்கு எல்லா நலனும் பெருகத் துணை நிற்பதோடு, தாங்கள் நீடிய வாணாளும் நிறைந்த புகழும், செல்வமும் பெற்று வாழ எங்கள் வழிபடு கடவுள் முருகவேளை வழுத்துவது தவிர வேறொன்றறியேம். பெரும! தாங்கள் எங்களைப் புரப்பதற்

குற்ற அறிகுறியாக இதோ இவண் உள்ளனவாய இம் மணிமுடி, செங்கோல், வாட்படை, நெடுந்தார், ஆய வற்றை இத்தகடூர் மக்களின் வேண்டுகோட் கிணங்கி மறுக்காமல் இனிதே ஏற்றருள்வீர்களாக (யாவையும் மன்னன்பால் வழங்கியதும்) பொது மக்களே! நாம இனிக் கவலை கொள்ளவேண்டுவதில்லை. நமக்கு ஏற் படும் நன்மை தீமை என்பன யாவையும் கண் காணிக்க நமது வேந்தர் இதோ வீற்றிருக்கின்றார். நமது கடமை அவர் கருத்தின்வழி நின்று, அவரது ஆணைக்கு அடங்குவதேயாகும். நமது கடன் அவற் குப்பணி செய்து கிடந்தால், அவரது கடன் நம்மைத் தாங்குதலாக அமையும. ஆதலால் மன்னுயிர் ஓம்பு தலை தன்னுயிர்க் கடனாக் கொண்ட எமது வேந்தர்— தகடூர் புரக்க வந்த அஞ்சிப் பெருமான் இறைவ னருளால நல்வாழ்வு பெற்றுச், சீரும் சிறப்பும் மிக,நம் மிடை நெடுநாள் வாழ்வாராக! (மலர்மாலை சூடுதல்).

அதியமான் அஞ்சி:—தகடூர்ப் பெருங்குடிகளே தாங்கள் என்னை உங்கள் தலைவனாகப் பணிவுடன் ஏற் றுக்கொண்டமைக்கு யான் மிகவும் பெருமை கொள்ளுகின்றேன். உங்களது வரவேற்பு எனக்கு என்றும் என் உள்ளத்தினின்றும் நீங்கவியலாத ஓர் இன்பத்தையும் மகிழ்ச்சியையும், என் கடமையைக் குறிக்கும் உணர்ச்சியையும் தருகின்றது. எனது வாழ்வு சிறக்கவும எனது குடிகளாகிய உங்களது நலங்கள் பெருகவும், நம் இருவரது உறையுளாகும் இந்நாடு செழிக்கவும், எல்லாம் வல்ல இறையருளால் எனது ஆட்சி பல்வகையானும் நன்றே அமைவ தாகுக

இயல் க—காட்சி—௩, முற்றும்.

## இயல் உ—காட்சி க.

**உறுப்பினர் :—ஆதன் ; ஔவையார்.**
**இடம் :—தகடூர் நெடுவழி.**
**பொழுது ;—நடுப்பகல்.**

(ஆதன் துணையால் ஔவையார் தகடூரை அறிந்து செல்லுதல்.)

**ஆதன்:**—(நெடுவழியின் ஒருபுறத்திலிருந்துகொண்டு) அடடா! என்ன அருள்!! கொடையாளிகள் என்று பெயர் தாங்கி இவ்வுலகில் எத்துணையோ செல்வர்கள் உள்ளார்கள். பாரதம் நடந்த நாளில்கூட 'கன்னன்' என ஒரு வள்ளல் இருந்தானும், அவன் என்னென்னவோ வெல்லாம தாராளமாகத் தந்தானும். அவற்றை நாம் நேரிலா கண்டோமா; ஏதோ நூல்களில் எழுதி வைத்திருக்கிறார்கள். இன்றைக்கு நம் கண்களுக்கு முன்னே, என்ன அன்பு; என்ன மகிழ்ச்சியோடு கூறுகின்ற சொல்; அடடா! என்னைக் கண்டதும் எவ்வளவோ விருப்பத்தோடு என் பெயரைச் சொல்லி அழைத்து, எங்களூர்ச் செய்திகளையெல்லாம் கேட்டுக் கொண்டார். என்னமோ, இப்படிப்பட்ட இடத்தில் எனக்கும் ஒரு நட்பு ஏற்பட்டது; ஏழைகளிடம் அவருக்கு என்ன கருணை தெரியுமா? சில நாள், நான் அவர் அடிகளில் தொண்டு புரிந்துகொண்டிருப்பதற்குள், காலையில் ஒருவன் வருவான்; என்னென்னவோ வெல்லாம் சொல்லி அழகாகப் பாடுவான்; தூக்கமுடியாதபடி காசும், பொருளும், ஆடையும் பெற்றுச் செல்வான். அதே ஆள் சில நாட்களுக்குள் இன்னும் எவனையோ அழைத்துவந்து எதெதையோ சொல்லி இன்னும் ஏதாவது பெற்றுப் போவான். ஐயா! முன்னர் வந்தவன் தானே என்ற கேள்வி கேட்கலாமா?

அவன்தான் வரக்கூடாது என்ற நியதிதான் உண்டா? (ஔவையார் நெருங்க—உற்றுப் பார்த்தல்.)

**ஔவையார்:**—ஏன்அப்பா! நீ எந்தவூர்? தகடூர் உனக்குத் தெரியுமா?

**ஆதன்:**—என்ன கிழவி? நான் எந்தவூராக இருந்தால்தான் உனக்கென்ன? தகடூரைப் பற்றிய கேள்வி உனக்கு எதற்கு? தகடூர் செல்லும்வழி தெரியாமலா இவ்வழியே வந்தாய்?

**ஔவையார்:**—இல்லையப்பா? நான் கேட்டவற்றில் என்ன பிழைகள் உள்ளன? தகடூர்க்குப் போகவேண்டும் என்று நெடுந்தொலைவில் இருந்து வருகிறேன். மிகவும் அலுத்துப் போயிருக்கிறேன். ஊர் கிட்ட ஆனால், தட்டித் தடவி எப்படியாவது போய்ச்சேர்ந்து அதியமானைக் காணுவேன். அதியமான்—கற்றவன் பெரிய வீரன்—செல்வமுள்ளவன் -- அண்டினவரைக் காப்பவன்--சிறந்த கொடை வள்ளல் என்றெல்லாம் கேள்விப்பட்டுள்ளேன். இதற்காகத்தான் உன்னைக் கேட்டேன்.

**ஆதன்:**—ஓஹோ! எனக்குத் தெரியுமே கிழவி நீ தகடூர் போகவேண்டும் என்றபோதே. எங்கள் மன்னர் அதியமான் பெருமானை அடைந்து ஏதாவது காசு பறிக்க நீ போகிறாய்.

**ஔவையார்**— அடா மகனே, அப்படிச் சொல்லாதே நீ நன்கு கல்லாதவனாகக் காணப்படுகிறாய். உன் வேந்தனின் சிறப்பை உள்ளவாறு நீ உணராதவன் ஆகிறாய். உன் மன்னன், சிறந்த வள்ளன்மை உடையவனாதலால், கற்றவர்கள் அவனைக் கருதி நாளும் வருவார்கள். அவ்வாறு அவர்கள் அவனையடைந்து பொருள் முதலியன பெற்றுச் செல்வதால்

அவன் செல்வம் குறைந்து வறுமையாளனாக ஒரு நாளும் மாறமாட்டான். இன்னும், உன் அதிய மான், புலவர்களிடம் மிகுந்த அன்புள்ளவன் ஆவன். அதற்குச் சான்றாக வேறு எதுவும் தேவையில்லை. 'நான் இங்கு இருக்கிறேன்' என்ற செய்தி அவன் காதுகளுக்கு எட்டினாலே போதும்; என்னை முன்னே பார்த்தறியாதவனாக இருப்பினும், நேரே இடை யீடின்றி இங்கு வருவான் என்பது திண்ணம்.

**ஆதன்:**—அப்படியானால், ஏன் கிழவி, உனக்கு அறிமுக மில்லாதவர்களையும் நேரே அழைக்கக் கூடிய திறமையுள்ள நீ ஏன் இவ்வாறெல்லாம் கால் கடுக்க, கண் இருள, மெய் சோர நடந்து வரவேண்டும்?

**ஔவையார்:**—உலகியல் உணராதவன் நீ. பொது வாழ்வின் நன்மைக்குப் பாடுபடுபவர்களை ஒருவர் தம் நலத்துக்காகத் தொந்தரவு தருதல் முறையாகாது. இன்னும் எம்போன்ற புலவர்கள் 'இன்று இங்கும் நாளை அங்கும்' என ஓரிடத்தும் நிலைத்திராது பல நாடுகட்குச் சென்று ஆங்காங்குள்ள மக்கள் அறிவும் நலனும் பெற்று மகிழப் பாடுபடுபவர்களாதலால், மன்னர்க்கு ஆட்போக்கி அவர்கள் வரும் வரையில் காத்துக்கொண்டு ஓரிடத்திலேயே தங்கி இருக்கவும் இயலாது.

**ஆதன்:**—(சற்று அச்சம் கொண்டவனாய்) ஆமாம்; தாங்கள் 'எம்' போன்ற புலவர்கள்' என்றீர்களே தாங்கள் யாராக இருக்கலாம்.

**ஔவையார்:**—உனக்கு என் பெயர் தெரியவேண் டுமா? என்னை 'ஔவை' என்பார்கள்.

**ஆதன்:**—அம்மையே. என்னைக் காப்பாற்றவேண் டும். (அடிகளில் வணங்குதல்) நான் யாரோ, வழிப்

போக்குக் கிழவி, என அறியாமல் பலவாறு கூறிவிட்டேனே! என்னசெய்வேன்; என் தாயே! என்னைப் பொறுத்துக்கொள்ளவேண்டும்.

**ஔவையார்:**—அப்பா! அஞ்சாதே! எழுந்திரு. நீ. யாவன்?

**ஆதன்:**—அருள்மிக்க தாயே! நான் அதியமான் வேந்தரின் அடிமை; அவர்தம் ஊழியன்; ஏழை. அம்மே! எமது இறைவர் தங்களது பெயரையும், புகழையும் அடிக்கடி சொல்லிக் கொண்டே இருப்பார். என் குற்றத்தை நீக்கி, என்னைக் காப்பாற்ற வேண்டும்.

**ஔவையார்:**—மகனே! அச்சம் தவிர்க! ஒருவர் அறியாமற் செய்த பிழையைச் சிறிதும் பொருட்படுத்தார் எம் போன்றவர். எத்துணையோ செல்வர்களும், கற்றவர்களும், தாம் செய்வன தீமை யென்பதை நன்கு உணரினும் அவற்றைத் தவிராது செய்து தாமே தீப்பழியைத் தேடிக் கொள்ளுகின்றனரே. அவைதாம் பொறுத்தற்கு இயலாதனவே யன்றி நீ கூறியன பிழையின் பாற் படாதனவாகும். இப்பொழுது விரைவில் எனக்குக் களைப்பு மேலிடும் போலிருக்கிறது. அதற்குள் தகடூரை நான் அடைந்தால் நலமெனக் கருதுகின்றேன். அஃது இன்னும் எவ்வளவு தொலைவில் உள்ளது?

**ஆதன் :**—தாயே! என்னை மன்னித்தருள்க. தாங்கள் இப்படி நிழலில் இருக்கவேண்டும். களைப்புடன் செல்லுதல் ஆகாது. தகடூர் சற்றுத் தொலைவில் இருக்கிறது. இன்னும் இரண்டு நாழிகை நடக்கவேண்டும். எளியன் அன்புடன் தருகின்ற இச்சிறுயவுணவை மனமுவக்க ஏற்றுத் தங்களது களைப்பைச் சிறிது

தணித்துக் கொள்ள இறைஞ்சுகின்றேன். இதோ நீரும் உள்ளது. இவற்றை ஏற்றுக்கொள்க (அவலும் நீரும் ஔவை, ஆதனிடம் பெற்றுண்டல்)

**ஔவையார் :**—மகனே! நீ நெடிது வாழ்க! அதியனின் கூழியன் என்பதை இச்சிறு செயலே எனக்கு நன்கு உணர்த்திற்று. தலைவனைப் போலவே நீயும் உன் அளவுக்குத் தக்கவாறு கொடைத்திறன் கொண்டுள்ளமையை நான் மிகவும் போற்றுகிறேன். வாழ்க நீ பல்லாண்டு. தகடூர் செல்லும் நெறியை உணர்த்தி, நீ சென்று வருக.

**ஆதன் :**—அன்னையே! இவ்வழியில் இன்னும் இரண்டு நாழிகைத் தொலைவுக்குப் பிறகு, வலப் புறம் ஓர் இடைவழி பிரியும். அதில் திருமடிநுறல் தகடூர் மன்னர் கோயிலின் 'முதல் வளைவு' நன்கு தோன்றும்.

**ஔவையார் :**—நலது மகனே! சென்று வருகிறேன் நான். நன்கு நீ வாழ்க.

**ஆதன் :**—வணக்கம் தாயே, வணக்கம்! (ஔவை பிரிதல்)— அப்பா! நல்லவேளை! என் பெயரை அந்தக் கிழவிக்கு நான் சொல்லவில்லை. ஏதோ, இன்றைக்குக் கண் விழித்த பொழுது, நல்ல பொழுதாக இருக்கும் போலிருக்கிறது. என்னமோ, தலைக்கு வந்தது, தவறித் தலைப்பாகையோடு ஒழிந்தது பொதுவாக எனக்குப் புலவர்கள் என்றாலே மிகுந்த நடுக்கம்: அதிலும் ஔவையாம்! அடே அம்மா!! நல்ல கிழவி: அன்பாகத்தான் பேசினார்கள்: என்னைப்போலவர் கல்வி என்றால் அதற்குத் தனித்தகுதிதான் இருக்கிறது. அடே! பொழுது போயிற்றே. விரைந்து வீட்டுக்குப் போகிறேன (பாடிக்கொண்டே போகிறான்)

கற்றவரைப் பாராட்டிக், கைதொழுது வணங்கவேண்டும்
மற்றவரின் சிற்றுறவை, ஏ! வள்ளிநாதா,
மறந்திருந்து வாழவேண்டும், ஏ! வள்ளிநாதா.
அற்றவர் தம் சுற்றமவன் அதியைநகர் அஞ்சிமன்னன்
செற்றவரைச் சினந்தழிக்கும் ஏ! வள்ளிநாதா,
செருக்களத்தின் செல்வன் அவன் ஏ! வள்ளிநாதா.

இயல் உ—காட்சி க. முடிவு.

---

## இயல் உ— காட்சி உ.

உறுப்பினர்:—தகடூர்த்தேவி; அதியமான்; காவலன்; பெரியார்.

இடம்:—அதியனின் இருக்கை.

காலம்:—பகற்பொழுது.

[அதியமான், நெல்லிக்கனி பெறும் நெறியை அறிதல்.]

(தகடூர்த்தேவியும் அதியனும் இனிதிருத்தல்)

தகடூர்த்தேவி :—நாதா! மலர்ந்த தாமரைபோன்ற தங்களது வதனம் இன்று என்றுமில்லாதவாறு பொலிவு குன்றியுளதே? அடியாளிடம் பலமுறைகளில் 'கவலையே மக்களது வாழ்நாட்கு உலைவைக்கும் காலன்' எனக் கூறக்கேட்டுளேனே. அவ்வாறு கூறும் தங்களை இப்போது கவலையினுட்படுத்தியது யாது என, அடியவள் அறியலாகுமா?

அதியமான் :—தேவி! நன்று நின்கேள்வி. யான் இதுகாறும் நின்பால் ஒளித்தமை யாதேனும் உண்டோ? பெறுதற்கரிய இம்மக்கட் பிறவியில் நாம் நல்லுடம்பும், நல்லிசையும், செங்கோலும், பல்நலனும் ஒருங்கே பெற்றோம்: இன்னும் கல்வி நலனும் செல்வவுயர்வும் உற்றோம். எனினும் சின்னாட்களாக இவை

யனைத்தையும் இல்பொருளாக்கி, என் உளத்தை ஏதோ ஒன்று கலக்குகின்றது.

தகடூர்த்தேவி:—என் பெரும! தங்கள் கருத்து எனக்குப் புலனாகவில்லை. கல்வி, செல்வம், நல்லுடல் நற்புகழ், இவற்றோடு நன்னிலையுற்ற தங்கட்குக் கருத்தழியுமாறு உளது பின்னர் எதுவாகுமோ?

அதியமான்:—கற்பின் கொழுந்தே! அன்று நம் இல்லம் மேவிய ஔவைப்பிராட்டியின் இன்பம் நிறைந்த பொன்மொழிப் பாக்களைப் பருகித்திளைத்துப் பொருதிளைக்கழிந்த என் மனம் என்றும் அத்தகைய அமுத மொழிகளையே பெறுதற்குரிய நெறியைநாடி நலிவுறுவதால், என் முகம் இதுபோது இவ்வாறு வாட்டமுறுகின்றது.

தகடூர்த்தேவி:—என் உயிரே! தங்கள் உரை எனக்கு மிகுந்த வியப்பைத் தருகின்றதேயன்றி எளியவளின் ஐயத்தை அகற்றிற்றில்லை. பரிசில் பலபெறும் அரிசில்கிழார், நன்மொழி பயிலும் பொன்முடியார், பாவலர் பரவும் பரணர், அருஞ்சிறப்பு மிகு பெருஞ்சித்திரனார் என்னும் பல நலவிசைப் புலவர்களின் நடுவே நாளும் வாழும், தங்கட்கு அக்குறை இருப்பதாக யான் அறிந்திலேனே.

அதியமான்:—நாணின்பாவாய்! நீ குறித்த குறை இலலை யென்பது உண்மையே. எனினும் அப்புலவர் பெருமக்கள் கூறும பொன்மொழிகளை, நாளும்கேட்டு அளவிலா இன்பமுற்று வாழுதற்கு ஏற்றவாறு, நீண்ட வாணாளைப்பெறும் நெறி எது என ஆயும் கருத்தே, என்னெஞ்சை வருத்துகின்றது. எந்நில மொழியும் தன் அடி தொழுதெழ, மன்னுயிர் யாவும பன்னலமேயத், தண்ணளிசுரக்கும தண் தமிழ்மொழி

யின், இன்சுவைத் தேனை ஏக்கமற அருந்தி, இன்பம் பலபெறும் இப்பிறவியின் நீங்கி அந்தமில் இன்புடை அமரர்கோன் நிலைவரினும் என் உள்ளம் ஏறகாது. என்தேவி! 'இன்பத் தமிழ் மொழித்தேறலை இற வாது என்றும் உண்டு இறுமாந்து இருக்கும் நாள் எந் நாளோ? அஃது எவ்வாறு கிட்டும்' என்ற ஏக்கமே என் நெஞ்சை அல்லும் பகலும் இடைவிடாது அலைக் கின்றது.

**நாகமர்த்தேவி**:—நாத! பேதையேன் யாதுமொழி யக்கூடும்? உலகினில் 'பிறப்பு' என்று கூறும் பொழுதே 'இறப்பு' என்ற மொழியும் பின் தொடருகின்றது. எவரும வினைவழியன்றி எதனை யும் பெறுதற்கில்லை என்பது தாங்கள் அறியாததன்று. எனினும் முயற்சி திருவினையாக்கும் என்பது நமது மறை மொழி. பண்டு, மார்க்கண்டன் என்றும பதி னாறட்டைப் பிராயம்கொண்ட வரலாறும் நாம் அறிந்ததேயன்றோ. ஆதலால், என் காதல! தாங்கள் வாணாள் நீடிப்பின் பொருட்டு வாலறிவன் நற்றாள் தொழுது, நன்னோம்பு புரிவதை மேற்கொண்டால் தங்கள் கருதது நிறைவேறலாகும். அஃதன்றி நெடிது நினைந்து நெஞ்சம் புண்பட, உடல் நிலைகெட, கவலை கொள்ளுதல் ஏற்புடைத்தன்று.

**காவலன்**:—மாண்புறு மன்னர் பெரும! தங்கள் திருவடி என் முடிமிசை அமைக. (காவலன் உள்நுழை ந்து வணங்குதல்) எவரோ ஒரு பெரியார்; இறைவன ருள் பெற்றவர்போல் காணப் பெறுகின்றார்; நமது தலைவாயிலில் நின்று, தங்கள் திருமுன் வர விழை கின்றார்.

**அதியமான்** :—காவல! அவரை இவண் விரைவில் வரவிடுக. (காவலன் வணங்கி அவண் நீங்க) நங்காய்! பின்னர்ப் பேசுவாம் இதுபற்றி. நின் இருக்கை செல்க. (பெரியார் உள்வர அதியமான் வணக்கமாக) வரவேண்டும், வரவேண்டும்! இங்கு அமர்க. (ஆன்றவர் அருட்கை காட்டி அமர்தல்) தாங்கள் என்பால் எழுந்தருள என் நல்வினை இருந்தவாறு என்னே! பெருந்தகைமை சால் பெரும! என்னை நோக்கி இங்கு வந்தருளியதன் பொருளை அடியனேன் அறியலாகுமா?

**பெரியவர்** :—எளியவர்க்கு இரங்கும் ஏந்தலே! நீ இசைபட வாழ்க!! நினது கொடைமிக்க ஆட்சியில் எம்போன்றோர்க்கு என்ன குறைவரப்போகிறது. நீ நெடிதுவாழ்க! நின்னைக்கண்டு மகிழ்ந்து உரையாட வேண்டும் என்ற ஓர் அவா நெடுநாளாக என் உளத்தை உந்த, அது நீங்கும் பொருட்டே ஈண்டு வந்தோம்' மற்றொன்றும் இன்று. நின் சுற்றமும் நட்பும் நலந்தானே? ஏன் உன்மேனி ஒருவாறு பொலிவு குறைந்து தோன்றுகின்றது?

**அதியமான்** :—புலனழுக்கற்ற புனித! எம்பால் யாவரும் நலனே. எனினும் என்மேனியின் பொலிவு குன்ற என்னை வாட்டும் ஒரு குறைமட்டும் உளது. அதனைப் போக்கும் நெறி யறியாது என்நெஞ்சம் நைகின்றது.

**பெரியார்**:—அன்ப! அக்குறையினை எம்பால் அறிவிப்பாய். இயன்ற வரையில் யாம் அதனை நீக்கக் கருதுவோம்.

**அதியமான்** :—ஐம்புலனடக்கி, நால்வகை யுறுதிப் பொருள்களும் விளங்க, மூன்று பொழுதினும் இருவினையோர்ந்து ஒருவனை வழிபடூஉம் உரவோய்!

அடியேன் தங்கள் போன்ற ஆன்றோர்களின் அருளினால், செல்வமும், கல்வியும், கொடையும், குடிப்பிறப்பும் ஒருவாறு கொண்டவன்: நாளும் புலவர் பெருமக்கள் சூழ்தர இனிய செந்தமிழ்த் தென்றலின் நறுமணத்தை நுகர்பவன்: நல்லிசைப் புலவர்களின் தேனினும் சுவைமலிந்த உயிரினுக்கு இன்பந்தரும் மணிமொழிப் பாக்களின் சொல், பொருள் நலன்களை என்றும் பெறுதற்கு விழைபவன். எனக்கு, நீரிற்றோன்றிய குமிழியைப் போன்றதும், நாளையோ, இன்றோ, இப்பொழுதோ, இரவிலோ, பகலிலோ, இங்கேயோ, மற்று எங்கோ அழிவுறும் என அறுதியிட்டுக் கூறமுடியாததும் ஆய இம்மக்கள் வாழ்க்கையை நீட்டித்துக் கொள்வதற்கான நெறியை அறிய, காதல் மிகுகின்றது. ஆதலால், எம்பெரும, எளியனேன் இந்நிலவுலகை நீடுநாள் நல்லுடல் பெற்று நலம் பலகொண்டு இன்புற்று வாழ, வழியொன்று அருளல்வேண்டும். இதுவே என் குறையாகும்.

**பெரியார்:**—***(சற்று அமைதியுடனிருந்து)*** எழில் நலமிக்க நெடுமானஞ்சி! அதன் பொருட்டுக் கவலற்க. நின் விருப்பத்துக்கும் ஒருதவியுளது; கேட்பாயாக. உனக்குரிய குதிரை மலையின் மேல்முகட்டில் இருபெரும் பாறைகள் உள. ஆண்டுச் சென்றால் அதன் நடுவில் ஓர் உயரிய பருத்த கரு நெல்லிமரமொன்று உளது. அதனில் ஆண்டொன்றுக்கு ஒருபழம் தோன்றும். அப்பழத்தை நீ உண்டால் நெடுநாள் நீ விழைந்தவாறு இவ்வுலகில் வலிமையோடு வாழலாம். அப்பழத்தைத் தின்று பன்னூறாண்டுகளாக இவ்வுலகினில் உயிருடன் வாழ்பவர்கள் பலரையும் யான் அறி

வேன். எனவே, யான் கூறியவாறு நீ அக் கருநெல்லிப் பழத்தைப் பெற்று உண்டால் நின் குறை நீங்கும்.

அதியமான் :—(தொழுத கையுடன்) அருள்முறை வழுவாது என்னை ஆதரவு செய்த அண்ணலே! தங்கள் அன்பிற்கு எல்லையுண்டோ? தங்களது பேருதவிக்கு யான் யாது கைம்மாறு புரிய வல்லேன். தங்கள் மலர் அடிகளில் அடியனின் மணிமுடியைச் செலுத்தி அழகுசெய்வதைத் தவிர்த்து, வேறொன்று மறியேன். பெருமை சால் பெரும! தாங்கள் இன்று என்னுடன் இங்கு இருந்து எம்மரபு ஓங்க வாழ்த்துமாறு வேண்டுகின்றேன்.

பெரியார் :—அன்பு மிகு அதிய! நின் விருப்பின் படியே ஆகுக. வாழ்க நின் மரபு; வாழ்க நின் நல்லிசை!!

இயல் உ—காட்சி உ முடிவு.

---

## இயல் உ—காட்சி ௩.

**உறுப்பினர்** :—அதியமான்; ஔவையார்; காவலன்
**இடம்** :—தகடூர்ப் புறம்.
**பொழுது** :—நடுப்பகல்.

[அதியமான் ஔவைக்கு நெல்லிப்பழம் தருதல்
**(காவலன்பின் தொடரவரும் அதியமான், களைப்புற்ற ஔவையைக் காணுதல்)**

அதியமான் :—அம்மையே வருக! வருக!! தங்களைப் பிரிந்திருந்த இந்நாட்கள் எனக்குப் பல ஆண்டுகளாகத் தோன்றின. ஆமாம், தாங்கள் ஏன் நான் இவ்வாறு வெளிச்சென்று வருவதற்குள் என் இல்லத்

தில் இருக்காது தனையே இப்படி வருகின்றீர்கள்; அங்கு எதாவது தங்கள் நெஞ்சம் வருந்துமாறு நிகழ்ந்தனவா?

ஔவையார் :—அன்புடை அதிக! அவ்வாறு எனக்கு யாதொரு குறைவும் ஏற்படவில்லை. நான் சற்றுமுன்தான் இங்கு வந்தேன். நின்னைக் காண வேண்டுமெனும் பேரவா எனைப் பிடர்பிடித்து உந்த, நின் மாளிகையினுட் சென்றேன். நின் தேவியும் மற்றைய தோழியர்களும் என்னைக் கண்டதும் பணிந்து, முகமன் கூறி வேண்டுவன யாவும் திட்டம் செய்தனர். ஆயினும் நீயில்லாது அவற்றைப் பெற என் நெஞ்சம் விழையவில்லை. எனக்குற்ற களைப்பையும் பொருட்படுத்தாது, நீ வரும்வரையில் இருக்க உளங்கொண்டேன் எனினும், என் நெஞ்சு அமைதியுறவே இல்லை. ஆதலால் சற்றுப்பொழுது கழியும் பொருட்டு நீ வரும் வழிநோக்கி வந்தேனே யன்றி வேறெதுவுங் கருதியன்று.

அதியமான். — தங்கள் முகத்தை நோக்கின் தாங்கள் மிகவும் களைப்புற்றிருப்பது தெரிய வருகின்றது. இதோ, இப்பழத்தை முதலில் உண்ணுங்கள். களைப்பை இஃது உடனே மாற்றும். (நெல்லிப் பழத்தை ஔவை பெறுதல்)

ஔவையார் :—இஃதென்ன நெல்லிக்கனியா? நாவறட்சியைப் போக்குதற்கு இஃதொரு நல்ல பொருளே. (சுவைத்து உண்ணல்) ஆ! என்ன சுவை! இத்தகைய நெல்லிப் பழத்தை நான் என்றும் உண்டதில்லையே. தெவிட்டாத அமுதம் போலக் குறைவுபடாத இனிய சுவையுடனிருக்கிறதே. இஃது எங்குளது?

**அதியமான் :—** அன்னையே! நான், நற்கருப்பஞ் சாற்றினில் தேன் கலந்து, பால்கலந்து, தெவிட்டாமல் இனிப்பதாகவுள்ள தங்களின் பெறுதற்கரிய இனிய பாக்களின் சுவையாகும் அமுதினை யுண்ட நாள்முதல், தங்களைப் போன்ற புலவர் பெருமக்களின் இடைவிடாக் கூட்டுறவுபெற்று, நெடுநாள் உலகத்தில் வாழ்ந்து செந்தமிழ்க் கடலில் நாளும் திளைக்கப் பெரிதும விரும்பியிருந்தேன். சில நாளின் முன்னர் என் வாழ்க்கைத் துணைவியுடன் இதுபற்றி யான் உரையாடிக் கொண்டிருந்த போது, ஒரு புலனழுக்கற்ற சான்றோர் என்பால் எழுந்தருளினார்கள். அப்பெரியார் எனது உளக் கருத்தை அறிந்து, என்னிடம் கொண்ட பெருவிருப்பத்தினால் இப்பழம் தோன்றும் இடத்தைக்கூறி, இதனை உண்ணுமாறு பணித்தார்கள். இஃது உண்டவர்களை உலகில் நெடுநாள் வாழ்விக்கும் வலிமையுடையதாகும். ஆதலால், தங்களைக் கண்டவுடன் எனக்கு, என்னினும் "தாங்களே இவ்வுலகத்துக்குப் பயன் உள்ளவர்கள்" என்ற எண்ணமும் விரைந்து தோன்றிற்று. தாங்கள் இந்நிலவுலகில் நெடுநாள் உயிர்பெற்று வாழ்வதால் இந்நாட்டின் பலபகுதிகளும், தங்களது திறமைமிக்க மொழிநலத்தைப் பருகி, நன்னிலை பெற்றுய்ய வாய்ப்புண்டு. அதற்கு மாறாக எம்மனோர் தம் வாழ்நாளைப் பெருக்குவதால் ஏற்படும் பயன், தன்னலத்துடனேயே ஆகும். இவை கருதியே உலகு அவாவும் உயரிய புலமைபெற்ற தங்கட்கு, யான் அரிதிற் பெற்ற இப்பழத்தை மனமுவக்க நல்கினேன்.

**ஔவையார் :—** (வியப்பு மேலிட) என் அருமருந்தாய அன்ப! நின்பால் ஊற்றெடுத்துத் தோன்றுங்

கொடைத் திறத்தால் உற்ற அன்பின் போக்கை அள விட்டுக்கூற எவராலாகும்? நீ என்னிடம் கொண் டுள்ள எல்லையில் பேரன்பிற்கு யான் யாது கைம்மாறு செய்ய வல்லேன்?

**அதியமான்** :—தமிழ்த் தாயே! வருக! நம் இல்லம் செல்லலாம். உணவு கொண்டபின் நாம் யாவும் பேச லாம். (அதியமானும் ஔவையும் செல்லுதல்.)

**காவலன்** :—(தனித்துநின்று நெட்டுயிர்ப்பு விட்டு) என்ன நட்பு! ஔவை என்ற சொல்லை முடிப்பதற்கு முன்னேயே, எங்கள் வேந்தர்—'எங்கே' என்றுகூடக் கேட்பதில்லை—'வருக! வருக!! தாயே, வருக!!!' என் றன்றோ அழைக்கின்றார். முப்பது நாட்கள் கூட ஆக வில்லை. அதற்குள்ளாக அவரைக் காணாது ஏங்கி, ஏதோ ஓர் ஆண்டு பெரும பிணியால் துயருற்ற வரைப் போலவே இருந்தார்—அது தொலையட்டும்— இரண்டு நாட்களாகக் 'கல்லென்றுமில்லை; முள்ளென் றும் கிடையாது; முழங்காலைப் பிடித்துக் கொண்டும் என்றால் ஏறமுடியவில்லை; நடையாய் நடந்தோம்: நுழையாத இடமெல்லாம் நுழைந்தோம்: அப்பப்பா, நானும், எங்கள் ஐயாவும் பட்ட துன்பம் இருக்கிறதே, அடடா, சொல்லி முடியாது. எங்கள் குதிரை மலை உச்சியிலே—ஏ! அப்பா, கீழே விழுந்தால், கருமத்துக் குக்கூட ஓர் எலும்புங் கிடைக்காது—என்ன செங்குத் தான நெடும்பாதை! அங்கிருந்து மெதுவாக ஒரு குகைக்குள் நுழைந்து கடைசியில் ஒருவாறு கண்டு பிடித்தோம் அந்த மரத்தை. கண்டதும் ஆகிவிட்டதா: அதைச் சுற்றிலும் தேள் கொடுக்குப் போன்ற முள்களுடன் எத்தனையோ வகையான புதர் கள், கிட்ட அணுக முடியாதவாறு சூழ்ந்து கிடந்தன.

எங்களுக்கு மேலெல்லாம் காயம்—எப்படியோ துன்பத்தை யெல்லாம் பொறுத்துக் கொண்டு தத்தித்தடுமாறி மரத்தின்மேல் ஏறினோம்; ஏறினால்! அங்கே என்ன இருந்தது. அந்த மரம் ஒரு முறையில் ஒரு பழந்தான் பழுக்குமாம். அதுவும் எத்தனையோ ஆண்டுக்கு ஒரு தடவைதானாம்! என்ன துன்பம் ஐயா! கிளைகிளையாகத் தேடினோம்; இலைஇலையாய்ப் பார்த்தோம். கடைசியில் எங்கள் தலைவர்தான் பழத்தைக் கண்டார்—பொறுக்க முடியாத மகிழ்ச்சி—உணவைக் கூடப் பிறகு விரும்பவே இல்லை—கொண்டுசென்றவை எல்லாம் நானே சாப்பிடுமாறு முடிந்தது. இப்படியெல்லாம்—பகீரதன் கெட்டானே—எத்தனையோ பாடுபட்டுத் தேடிக் கொணர்ந்த பழத்தை—கைக்குக் கிட்டியது வாய்க்கு எட்டாதது போல, இல்லத்துக்கு வருவதற்குள்ளாகவா இந்தக் கிழவி எதிர்ப்படுவாள். அட, போகட்டும்; மிகுந்த அன்புள்ளவளாக இருக்கலாம். அவளாவது ஒரு பாதி பழத்தை 'நீங்கள் உண்ணுங்கள்' என்று எங்கள் மன்னர்க்குச் சிறிதும் எனக்குச் சிறிதுமாகத் தந்திருக்கலாமல்லவா? கொடுத்தவுடன் அப்படியேயா தின்று விழுங்கி விடுவாள்?......என்னமோ, பேசி இனி என்ன ஆகும்! கொடுத்து வைத்தவள் கொட்டையோடே சாப்பிட்டாள். ஏமாந்த பேதை நான் இப்படியே போகிறேன். (வருத்தமாகச் செல்லுதல்.)

இயல் உ—காட்சி ௯ முடிவு.

## இயல் ௩.—காட்சி ௧.

**உறுப்பினர்:**—ஔவையார்; அதியமான்.

**இடம்:**—அதியமான் மாளிகை.

**பொழுது:**—மாலைப்போது.

[அதியமான், ஔவையாரைத் தொண்டைமான்பால் தூதுபோகவேண்டுதல்]

**ஔவையார்:**—வெற்றிமிகும் தப்பாத வாளினை ஏந்தியவனே! போரில் பகைஞர் மடியுமாறு அழித்த வீரவாள் மிளிரும் கைகளையுடையவனே! மிக்க மகிழ்ச்சிக்குரிய மதுவினையுடைய அதியர் தலைவ! எதிர்த்தவரைப் போர் முனையிற் கொல்லும் வீரவாளும், பொன் மாலையும் அணிந்த அஞ்சி வேந்தே! நீ, பழைய பெரிய மலையினில் எவரும் அடைய முடியாத உயரத்து இரு பிளவுகளின் இடையே தோன்றிய சிறு இலைகளைப் பெற்ற நெல்லியின் பழத்தை, அஃதுண்டவரடையும் பெருவாழ்வை உணர்த்தாது, பால போன்ற பிறைநிலா நெற்றி மீது விளங்கும் திருமுடியையும், நீலமான அழகிய கழுத்தையுமுடைய, ஒப்பற்ற முதல்வனும் சிவபெருமானைப் போல, நான் சாகாமலிருக்குமாறு எனக்குத் தந்து மகிழ்ந்தனையே!

**அதியமான்:**—அம்மையே! ஒன்றுக்கும் பற்றாத யான்! உண்டு உலகுக்குச் சுமையாவதினும்! உலகு அவாவும் விழுமிய கல்விச் செல்வம் படைத்த தாங்கள் வாழுதல் சிறப்பன்றோ?

**ஔவையார்:**—காவல் மதில் சூழும் பல அரண்களை வென்ற நெடுமான் அஞ்சி! யாழ் போல இனிய ஓசையும் பெறாது; இசைக்குரிய கால அளவும் கூடியிராது;

பொருளும் உணர இயலாது; ஆயினும், பிள்ளையின் மழலை மொழிகள் தந்தைக்கு அன்பு நிலை ஆகின்றன. அது போல, நீ அருள் புரிதலால் எனது வாய்ச்சொற் களும் அவ்வாறே அமைகின்றன. மேலும் என்னை யொத்த புலவர்கள், தமது நெஞ்சை நோக்கி 'உண்ண விரும்பும் நெஞ்சமே! நீ பரிசுக்காக வருந்தாதே; யாம் ஒருநாள் மட்டும் செல்லாது, இரண்டு நாள் மட்டும் போகாது எத்தனையோ முறை, பல நண்பர் களோடு சென்று பழகினாலும், முதன் முறையாகப் பெற்ற அன்பைப்போலவே, அணிகள் பூணப்பெற்ற ஆனையையும், இயலும் தேரையும் உடைய அதிய மான், எப்போதும் பெற்றுளான். பரிசுபெறுகின்ற நாள் கூடினாலும் குறைந்தாலும், யா தன் பெரிய கொம்புகளின் நடுவே வைத்துள்ள ஒரு வாய் உணவு போல அப்பரிசு நமது கையிலிருப்பதேயாகும். அது பொய் அன்று. அவன் திருவடி வாழ்க' என நாளும் வாழ்த்தி வருவது பொய்க்குமா?

**அதியமான்:**—அன்னாய்! 'எட்டுத் தேர்களை ஒரே நாளில் செய்யும் தச்சன் ஒரு திங்கள் முயன்று முடித்த ஒரு தேரின் கால் போன்ற வலிமையுள்ளவன்' எனவும் 'அணி வகுக்கப் பெற்றனவும் முனனதாகச் செல்வனவும் ஆய படைகளால் அவனுடன் போர் புரிவோம் என மொழியும் சொற்களை... சிறந்த வலிமையால் மேன்மைபெற்று விளங்கும் நீண்ட வேலினைப் பெற்ற மழவர்களின் பெருந்தலைவனும், ஒளிமிக்க, தொழில் நுட்பமுள்ள, அணிகள் அழகு செய்யும் மார்பனும், போர்க்கள வேள்வியால் நல்ல சிறந்த போரினைப்புரியும் முழவம் போன்ற வலிமை யான தோளைப் பெற்றவனும் ஆய, என் தலைவனைக்

காண்பதற்கு முன்னதாகவே, எத்தகையவராக இருப்பினும் காப்பாற்றிக் கொள்ளுங்கள்' எனவும் பலவாறு என்னைத் தாங்கள் புகழ்ந்துரையாடினும் என் உள்ளம் அவற்றைக் கேட்டும் அமைதியுறவில்லை. மலையன் ஒரு திசையிலும், மூவேந்தர் மற்றொருபுறமும், இன்னொரு பக்கமும் திதியன், பொருநன், எருமை யூரன், இருங்கோவேள் மா என்பவர்களும் என்மீது நாளும் அழுக்காறும் வஞ்சமும் கொண்டவர்களாக வுள்ளனர். போதாக் குறைக்குக் காஞ்சித் தொண்டைமானும் என்னை வெறுக்கின்றானும்.

ஔவையார்:—'பெரும! ஊர்ச்சிறுவர்கள் தன் வெண்மையான கொம்புகளைக் கழுவுமாறு நீர்த்துறையினில் அடங்கியிருக்கும் பெரிய யானை போலப், புலவர்களாகும் எங்கட்கு இனியவனாகின்றாய்; பின்னர் அவ்யானை பிறர் அணுக முடியாதவாறு பெற்ற மதங்கொண்ட நிலைமையைப்போல, உன் பகைவர்களுக்கு நீ கொடியவனாகின்றாய்; என்ற செய்தி உலகமறிந்திருக்க, ஏனோ இம்மன்னர் பொருட்டு நீ கவலையுறவேண்டும்?

அதியமான்: — அம்மே! தாங்கள் என்சொலினும் என் இடங்கொண்ட நெஞ்சம் இதுபோது விடங்கொண்ட மீனைப்போலக் கலங்குகின்றது. எனக்குற்ற உழுவலன்பன் எனக் கருதப்பெற்ற, காஞ்சித்தொண்டைமானும் மாற்றலர்தம் கூட்டுறவால், சார்ந்ததன் வண்ணமாகி எமது முன்னைய நட்பு மேன்மையையும் எவ்வாறோ மறந்தனன். அவன் செயலே என்னைப் பெரிதும் வருத்துகின்றது.

ஔவையார்:-"எழுமரம் போன்ற, முழந்தாளினைத் தொடுகின்ற பெரிய கைகளோடுற்றவனே; தவறுத

வலிய கைகளையுடைய மழவர்களின் தலைவனே! முறிந்த வளைபோன்ற மலர்ந்த காந்தட்பூ, இலைமிக்க மல்லிகையோடு மணம் வீசும் மலைச் சாரலினிலுள்ள கடும்புலி சீறினால், அதனை எதிர்க்கும் மான் கூட்டங்களுமுண்டோ? ஞாயிறு வெப்பமுற்றுத் தோன்றும் போது மருண்ட வானத்தும் திசைகளினும் செறிந்த இருள் நிறையுமோ? அச்சு உரசிப் பார்மீது படிய நகர்ந்த, பண்டம் நிறைந்த வண்டியுருளையின் அழுந்திய நிலையைப் பொருட்படுத்தாது, மணல் வரிகள் சிதறவும் கற்கள் பொடிபடவும் நடக்கும் பெருமிதங் கொண்ட வலிமைமிக்க எருதுகளுக்குச் செல்ல முடியாத வழிகளுமுண்டோ? அது போல நீ, போர்க்களம் புகுந்தால், பெரிய உலகமாகிய நிலத்தைப் பெற்று ஆரவாரஞ் செய்யும் வீரர்களும் உளரோ?" எனவே மன்ன, நீ எதன் பொருட்டும் கவலற்க: உன் நெஞ்சம் விழைவதை என்பால் கூறின் யான் இயன்றன ஆற்றுவன்.

**அதியமான்**:—எம்மனோர்க்கு உற்ற துணையாய தாயே! என் பொருட்டுத் தாங்கள், காஞ்சிவேந்தன் தொண்டைமான்பாற் சென்று, அவனது நட்பு எனக்கு என்றும் இருக்குமாறு செய்ய வேண்டும். எனது கருத்துக்கு இயைந்த அவனது கூட்டுறவு என்னை இன்னும் மிகுந்த வலிமைபெற்றவனாக்கும். இதுவே எனது உளம் நிறைந்த விருப்பமாம்.

**ஔவையார்**;—அன்புடையாரோடு உண்டு உறவு பெற வல்லவனே; போர் முனையிலும் கொடைத்திறன் கெடாதவனே; அறிவிலாதாரும் மகிழ்வோடு நின்னையே துணையாகக் கருதும் பெருநிலை படைத்த நெடுமான் அஞ்சியே! நீ வீட்டின் இறவானத்தில்

செருகப்பெற்ற தீக்கடைகோல் போல, நினது வலிமை வெளிப்பட வேண்டாத நாளில் அடங்கி வாழவல்லவனாகின்றாய். இனனும் அத்தீக்கடை கோலால் கக்கப்பட்டு வெளியாகும் காட்டுத்தீயை யொப்ப, நீ விரும்பியபோது மிகவும் வலிமை பொருந் திய வீரனாகவும் விளங்குகின்றாய். ஆதலால் எம் நண்ப! நீ வளமையிற் குறைந்தாயெனக் கருதி அஞ்சற்க. நின்னை வெல்வார் எவரும் ஈண்டில்லை: இஃதுறுதியே யானும் இன்றே தொண்டைமான் பாற் சென்று, அவனும் நீயும் நேர்மையுற்ற நேசராக நெடிதுவாழ முயலுவேன். கவலற்க; வாழ்க மன்ன; வாழ்க நின் கொற்றம். செல்கின்றேன்; விடைதருக.

**அதியமான்:**—தாயே! வணக்கம். அவ்வாறே ஆகுக. என் என்றும் நீங்கா நன்றியையும் அன்பினையும் ஏற்றருள்க. (நின்று கைகூப்பி வணங்குதல்).

இயல் க—காட்சி ங முடிவு.

---

## இயல் ங—காட்சி உ.

**உறுப்பினர்:**—காஞ்சிநகர் வேந்தன் தொண்டைமான் இளந்திரையன்; ஔவையார்.

**இடம்:**—காஞ்சி மன்னன் மாளிகை.

**பொழுது:**—மாலைப்போது.

[ஔவையார், தொண்டைமானை அஞ்சியின் நண்பனாக்குதல்]

**தொண்டைமான்:**—மணிக்கோவையினால் அழகு பெறும் எடுப்பாகவுள்ள பக்கங்கள் பெற்ற அல்குலும் மடப்படமும், மையுண்கண்ணும் ஒளிமிகு நெற்றியும் பெற்ற விறலியர் தலைவீ! தங்களது பெரும்பரப்

புடைய நாட்டில் என்னோடு போரில் வெற்றிகொளும் வீரர்கள் உளரோ?

**ஔவையார்:**—போர்ப்படை மிகுந்த வேந்தே, எமது நாடு அடிக்கும் கோலுக்கும் அஞ்சாமற் சீறி எதிர்த்துவரும் பாம்புபோல, வலிமைபெற்ற இளமை மிக்க பல வீரர்களைப் பெற்றது ஆகும். இன்னும் பொதுமன்றத்தில் கொட்டுவாரற்றுத் தொங்கிக் கொண்டிருக்கும் முழவம் காற்றின் அசைவினுல் சிறிதளவு ஓசையை எழுப்பினும் போர்ப்பறையின் முழக்கம் அஃது எனக்கருதும் எம் தலைவனும் உள்ளான்.

**தொண்டைமான்:**-நன்று, என் அன்னையே! தாங்கள் எளியனிலை போர்க்கலக் கூடத்தைக் கண்ணுற்றீர் களோ?

**ஔவையார்:**—அன்பா! நன்கு கண்டு மகிழ்ந்தேன் படைக்கலக்கொட்டிலில் உள்ள உன் படைக்கலன் கள் யாவும் மயிற்றோகையால் அலங்கரிக்கப் பெற் றுள்ளன: மாலைகள் சூட்டப்பெற்றுமுள. அவற்றின் உடலிடந்திரண்டுள்ள வலிய காம்புகள் அழகுபெற அமைக்கப்பெற்றுள்ளன. இன்னும் நெய் | தடவப் பெற்றுக், காவல்பெற்ற அகன்ற நகரத்தேயும் உள் ளன. ஆனுல் செல்வம் வந்தபோது உணவு அளித்து, இல்லாத நாளில் தாம் பெற்றதைப் பலரோடுங்கூடி உண்ணும் வறிஞர்களின் உறவினர்க்குத் தலைவனுய, எம் அதியமான-அஞ்சி மன்னனின் கூர்மையான நுனியையுடைய வேல், பகைவர்களைக் குத்துவதால் கங்கு நுனி முரிந்து கொல்லனது சிறிய உலைகளத்தில் கிடக்கின்றன.

**தொண்டைமான்:**—தமிழ்ப்பெருமாட்டியே, நும் அஞ்சி என்னினும் வலியன் ஆவனோ? நன்று கூறினீர்

கள். பல்லாண்டு போர்ப்பயிற்சியும் முதிர்ந்த தேர்ச்சியும் பெற்ற என்பால் அவனது திறமை என்ன ஆகும்?

**ஔவையார்** :—மறவீர், பாதுகாமின், யாம கூறுகின்றேம். ஊர்ச்சிறுர்கள் ஆடுவதனுல் கலங்கக்கூடிய காலினது அளவேயுள்ள குறைந்த நீரினில், இழுக்கும் வலிமைபெற்ற முதலே, யானையைக் கொன்று வீழ்த்தும். அஃது ஒத்தவன் எம் தலைவன் அஞ்சி. அவனது நுணுக்கமான பல செயல்களைக் கருதிப்பாராது 'இளைஞன் அவன்' என மதியாது பேசினல், நீவிர் வெல்வது அரிதாம்.

**தொண்டைமான்** :—தமிழன்னய்! அதியமான் நெடுமானஞ்சி, காஞ்சித் தொண்டைமான் இளந்திரையனைவிடப் போர்ப்படை பெற்றவன் என்பதுதானே தங்கள் உள்ளக்கிடக்கை.

**ஔவையார்** :—அன்பு கெழுமிய வேந்தே! வேற்றுமை நாடாது யான் கூறுவதன் பொருளைச் செவிமடுப்பாய். அன்ப, உங்கள் இருவரையும் யான் நன்கு உணர்வேன். நீவிர் இருவீரும் ஒத்தநலனும் வலிமையும் கொண்டவர்கள் என்பது திண்ணம். ஆயினும், அஞ்சி, பேராற்றல் படைத்தவன்: நீயோ, பெரும் படை கொண்டவன். ஆதலினல் நீவிர் இருவீரும் உம்முள் எவர் வலியவர் என நாட விழைவது நலனன்று. அதற்கு மாருக யான் விரும்புவது ஒன்றுண்டு. நீ தடைசெய்யாது, யாவர் நலனையும் கருதியுடன்படுவாயானல், அதனைக் கூற ஆணை தருக.

**தொண்டைமான்** :—தமிழ்ச் செல்வி! உலகு இன்புறுதற்கு ஏதுவாய ஒன்றினை, யான் என்றும் தடை

செய்யேன். எனது இயல்புக்கு உரித்தாயின் யான் தங்களது ஆணையை மறுக்கேன். இஃது உறுதியே.

ஔவையார் :—கற்றவரைக் காக்கும் காஞ்சித் தலைவ! நீ நெடிது வாழ்க. ஒருநாள், யான் ஒரு சிறு சோலையை யடைந்தேன். அஃது ஓர் அரிய பாலை வெளியி லிருந்தது. அவண் வாழ்ந்த ஒரு விறலி எளிய நிலையிலிருந்தாள்: அவள் கைகளில் சில வளையல் களே காணப்பெற்றன. இன்னும், பதலை யென்ற ஒலிப்பறை ஒருபாலும், முழவம் என்ற அகத்துளை பெற்ற மற்றொரு கருவி மற்றோரிடத்திலும், கொட்டி ஒலி எழுப்புவாரற்றுத் தொங்கிக்கொண்டிருந்தன. கொடுப்போ ரின்மையால் அவளது 'திருவோடு' ஒன்றுமில்லாமற் கவிழ்ந்துகிடந்தது. 'என் பசிக் குரிய உணவால் இக்கடிஞையை நிரப்புவார் உண்டோ' என அவள் கூறியிருந்தாள். அஃதறிந்த யான் 'ஏ! விறலி! மிக்க அருகிலுள்ள ஓர் ஊரில் பல வேற்படைஞருடன் அஞ்சி என்ற மன்னன் உள் ளான்: போர் முனையில் பகைவர் ஊர்களைச் சுடுவ தால் எழுகின்ற புகை, மலைகளைச் சுற்றிவரும் கரிய முகில் போன்று அவன் யானைகள் சூழ்ந்துவரப் பகை வரின் நாடுகளை வென்றவன் ஆவன். நீ, அவன்பாற் சென்று வழிபட்டால், என்றும் ஓயாமல் உண்ணுதற் குரிய கொழுப்புமிக்க உணவால் உனது திருவோடு தேனடைபோல பசையுற்றிருக்க, உலகம் வறண்டு போகும் நாளினும் உன்னைப் புறக்கணியாது காப்பன். அவன் தன் திருவடி வாழ்க' என அவளை ஆற்றுப் படுத்தினேன். ஆதலால் பெரும! எம்போன்ற புலவர்கள் பாடுதற்குற்ற பெருமை பெற்றவனுய அவனது நற்றொடர்பு நினக்கு மிகவும் வேண்டற் பாலதென வுணர்க.

**தொண்டைமான்** :—தமிழ்த்தேவி! அதற்காக யான் என் செய்யவேண்டும்? மிக்க புகழ்பெற்றவனாக அவன் இருப்பின், யான் வலியச்சென்று புக வேண்டுமோ?

**ஔவையார்** :—அற்றன்று அரசே! அவன் சிறந்தவன்: வீரன்: புகழால் மிக்கவன்: இன்னும் நட்புக்கு மிகவும் உரியவன். அத்தகைய அஞ்சி இதுபோது, நின் நட்புப் பேற்றை நாடுகின்றான். நீ, ஏதேனும் அவன்பாற் சிறிது பிணக்கங்கொண்டிருப்பினும், இதுபோது அதனை அறவே நீக்கி, அவனுக்குற்ற உழுவலன்பினன் ஆகவேண்டும். இஃதொன்றுதான் எனது உளங்கொண்ட வேண்டுகோளாகும்.

**தொண்டைமான்** :—தமிழ்த்தாயே! தாய்சொல் தடுத்தல் சேயர்க்குத் தகுமோ? தங்கள் கருத்துப் படியே ஆகுக. எம் இருவரது நட்பும் நாளும் முற்பக்கத்து மதியம்போலப் பெருகி வளரத் தாங்களே துணைபுரியவேண்டும். இனி எனக்கு என்ன குறை?

**ஔவையார்** :—இனிய நன் மொழிகளும் இன்ப வாழ்வும் கொண்ட எம் வேந்தே! நின் இனிய தேன்போன்ற மொழிகள் எனது உளத்தை மிகவும் களிக்கச் செய்கின்றன. இன்று இவ்வுலகில் என்னினும் பேறுபெற்றார் எவருமில்லையென்பேன். வாழிய மன்ன! நினது வாழ்வு ஓங்குக: நின்புகழ் நிலைபெறுக: நீயும் நெடுநாள் பன்னலமுஞ் சூழ வாழ்வாயாக!

---

இயல், ௩—காட்சி ௨. முடிவு.

---

## இயல் ௫ — காட்சி ௫.

உறுப்பினர்; — அம்பலவாணர்; அணித்தலைவர் கருணாகரத்தேவர்; படை முதல்வன்-வீரப்பெருங்கோ; தூதுவன்-பிறைசூடி.

*அதியமானிடம் திருக்கோவலூர் மலையமான் அடங்கி வாழத் தூதுபோக்குதல்.*

**அம்பலவாணர்** :— அதியர் வேந்தனின் ஆண்மை விளங்கக் கடுஞ்சமர்புரியும் வெற்றிமிகு தானைத்தலைவ! அதியனின் பெருமைக்கு ஆற்றாத மூவேந்தர்களும், முன்பு தமக்குத் துணைவர்களாக இருங்கோவேள் மான், எருமையூரன், திதியன், பொருநன் ஆயவரோடு போந்து, போர்க்களத்தே புறமுதுகிட்டுப் புண்ணடைந்து போயினமையை இத் 'திருக்கோவலூர் மலையன்' ஏனோ உணராதொழிந்தனன். மூவர்க்கு முடிந்த முடிபே இம்மலையற்கும் ஆவது திண்ணம். வேளிர் மரபிற்றோன்றிய இவன், தம்மரபுக்கு அடுத்தவாறு ஆட்சிகொள்ளாது, அழுக்காறுற்று அதியர்கோவின் பெரும்புகழைப் பாழ்படுத்தக்கருதும் சிறுமதி பெற்ற அவ்வேந்தர்களின் நட்பிற்காக, எம்பெருமானுடன் வல்வழக்கிடுதல் ஏற்குமோ? என் செய்வது? மதி கெட்ட நாளில் மாண்புறு நன்மொழி மறைவதியற்கையே. நன்று! கருணாகர! நம்படை வலி எவ்வாறுளது? நம் பகைவன் திருக்கோவன் மலையனுக்கு யாது செய்தியனுப்பலாம். இதுபற்றிக் கூறுக.

**கருணாகரர்** :—பெருந்தகையே! நம் வீரர்கள் பகைவரின் காவலுற்ற அரணை யழித்தனர். பகைஞர் செருக்கழிய செருவாற்றியபோது நம்மவரின் வாட்படைகள் மாற்றலர்தம் தசையிற் புண் தோன்றப்

பதிந்து, உதிரம் தோயப்பெற்றும், என்புகளிற் பட்டமையால் முனை மழுங்கப்பெற்றும் உள்ளன. ஆதலால் அவை இப்பொழுது வடுக்கள் நிரம்பினமையால் வனப்பிழந்தன. நமது வேற்படைகளோவெனில், குறும்பர்கள் வாழும் அரண்களைக் கைப்பற்றிய நாளிற் பெரிதும் பயனுயின ; அவை அக்குறும்பரின் மணந்தரு மதுமிக்க நாட்டைவென்று நமக்கு அளித்தன ; ஆதலால் அவற்றின் சுரை பொருந்திய வலிய காம்புகள் ஆணிகள் இல்லாது ஆட்டங் கண்டுள் ளன.

**வீரப்பெருங்கோ** :—பெரும! நம் யானைகள் கணைய மரத்தால் தாளிட்டுத் தடுக்கப்பெற்ற கதவுகளைத் தகர்த்துப் பகைவரது மிகுந்த யானைகளின் காவல் பெற்ற அரணை யழித்தன; எனவே அவற்றின் கொம்புகளில் வலிமையாக அமைக்கப்பெற்ற திண்மையான பூண்கள், கழன்று கிடக்கின்றன. மற்றும், நமக்குரிய குதிரைகளோ, போர் முனையில் எங்கணுஞ் சூழ்ந்து நின்று நம்முடன் தகுதியாகச் சமர் ஆற்றிய பகைவர்களின் பசும்பொன் மாலைகள் அணியப்பெற்ற அகன்ற மார்புகள் வனைப்புக் கெடுமாறு அவற்றை மிதித்துத் துவைத்து ஓடின. அப்போது நம் படைகளால் வருந்திய அப்பகைவர்களின் உடல் உதிரம், நம் பரிகளின் அழகு பொருந்திய குளம்புகளை மறுவாக்கின.

**அம்பலவாணர்** :—வீரத்தலைவர்களே! நம் வேந்தர் பெருமான் இப்பெரிய நிலவுலகத்தைத் தன் பாலடக்கி மேன்மையுறும் கடல்போன்ற நிறைந்த படைகளை யுடையவனுவன். இன்னும் பொன் தும்பை மாலை சூட்டப்பெற்ற, கழல், கிண்ணம் போன்ற வடிவமுற்ற அம்புகள் படுவதால் துளைக்கப் பெற்ற, கேட

கத்தையுடையவன். எனவே, அத்தகைய ஆண்மை பெற்ற நம்மன்னனால் வெகுளப்பட்டார் உய்தல் யாண்டுளது ?

**கருணாகரர்** :—பெரும, யான் இன்றே நமது பிறைசூடியைப் போக்குவேன். பிறைசூடி! நீ இன்னே சென்று நம் பாடிப்புறத் துற்ற நம்பகைஞர் தலைவனை அணுகி, அவன்பால யான் மொழிவதைக் கூறுக. அஃதாவது, "பெரிய தாள்களோடு நெருங்கிப்பின்னிக் கொண்டுள்ள நெற்கதிர்கள் மிகுந்த தலைமையான நும் பழைய வூரை நீவிர் அடைய விரும்பினால், இன்னே எம் இறைவர்க்குத் திறை செலுத்தல் வேண்டும். மறுத்தால், வெற்றிச்சமர் புரியும் எம் அண்ணல் அதற்கு உடன்படார், என யான் கூறவும் கொள்ளீராயின், கழற்கனியால் வகுக்கப்பெற்றனைன சுருண்ட இனமாகிய நெளிந்த மயிரினையும், குறிய வளையலையுமுடைய மெல்லியராகும நும் அன்பிற் காகும் உரிமை மகளிரின் அழகிய தோள்களைத் தழுவ இயலாது பிரிவீர்கள். இஃதொரு வியப்பன்று. நன்குணர்ந்து போருக்கு எழுக" எனவாகும் அறிந்தனையா ?

**பிறைசூடி** :—பெரும, அவ்வாறே யாவும் கூறி வருவேன்; விடை பெறுகின்றேன். (தூதுவன் வணங்கிச் செல்லுதல்.)

இயல் க—காட்சி க முடிவு.

## இயல் ௪—காட்சி ௧

**உறுப்பினர்கள்:**—ஔவையார்; அதியமான்: கருணாகரர்; வீரவேள்மா; பிறைசூடி; காவலன்; நங்கை-இயல்மொழி; செல்வி - அருண்மொழி; தேவி-தேமொழி.

**இடம்:**—அதியர்கோவின் அரசப்பெருமன்றம்.

**பொழுது:**—முற்பகல்.

### திருக்கோவலூர் மலையமான் தோல்வியும் அதியற்குத் திருமகன் தோற்றமும்

**ஔவையார்** :—வென்றி நலந்தோன்ற வீற்றிருக்கும் கோவே! நினது சினம் ஒடுங்குக. நின் படைப் பெருமக்கள் ஈண்டு, மலையமானை யோட்டி வாகை சூடிய நினது வெற்றியைப் போற்ற, விழைந்து நிற்கின்றனர். திருமுடிக்காரி போரிலாற்றாது புறங்காட்டி யோடியும் ஏனோ உனக்கு இன்னும் அவன்பால் சினந்தணிந்திலது? நின் பகை யொழிந்தது; நீ வீர வாகை சூடினாய்; நின்னை எதிர்ப்பவர் இந்நானிலத்தும் இலர்; ஆதலால், அதிய, நினது நெஞ்சம் அமைதி யுறுவதாகுக.

**அதியமான்** :—அன்னாய்! தாங்கள் அம்மலையனை நன்கு அறியாதவர்கள் போலும்? அவன் நெஞ்சம் என்றும் வஞ்சகத்தா லாயது. புறங்காட்டி இன்று ஓடிய அவன், நாளை ஒருபடையுடன் நம்முன் நிற்பினும் நிற்பன். அவன்றன் திருமுடி, என் சினத்தீ அவியுமாறு இம்மண்மீது உருண்டோடாமற் போயினும், அவனை யான் சிறை செய்து தளையிடாது தவிர்ந்தமையே என்னை வருத்துகின்றது. என் செய்வது? அவனன்றி நம்மாலாவது என்?

**கருணாகரர்** :—எம்பெருமா! "நம் யானைகள் பகைவர்களது எதிர்ப்பு ஒழியுமாறு போர்முனையில் பொருதமையால் அவற்றின் கொம்பு நுனிகள் தேய்ந்து குறுகின. அவை செல்வதைக் கண்ட நம் பகைஞர் தம் மதில் வாயிற் கதவுகளின் பழைய தாழ்ப்பாள்களை நீக்கிப் புதியன பொருத்துகின்றனர். மற்றும் நம் குதிரைகள், போர்க்களத்தில் மாண்டவர்தம் உருவு அழியுமாறு பிணங்களின் மீது உழக்கிச்சென்றமையால், குருதிக் கறை மிகுந்த குளம்புகளோடு உள்ளன; அவற்றின் செலவைக்கண்டு, காடுகளின் சிறுவழிகள் யாவும் மகவைத்துள்ள வேலமுள்ளால் அடைக்கப் பெறுகின்றன." அண்ணலே, இவையாவும் நின்பாற்கொண்ட அச்சத்தால் நிகழ்வனவேயாம்.

**வீரவேள்மா** :—வீரர்தம் தலைவ, 'உறைக்குள் கட்டி வைக்கப்பெறாத நினது வேற்படைக்கு அஞ்சிப், பகைஞர், கேடகப்பிடியுடன் தமது கைப்பிடிப்பினை நெருக்கிக் கொள்ளுகின்றனர்; ஏனெனில் நின்வேல் அவரது மார்பகத்தே எறியப்படும்போது அவர்தம் பரிசையையும் ஊடுருவிச் செல்லும்' என்பதனை உணர்வார். "இன்னும் வாள்பட்ட புண்ணால் வடுப்பெற்ற நம் வீரமிக்க படைஞர்தம் வலிமையைக் கண்டு, புண்ணிலிருந்து ஒழுகும் குருதியால் நனையப் பெற்ற அம்புகளை, நம் பகைஞர் தூணியகத்தே எடுக்காமல் வைத்துள்ளனர்."

**பிறைசூடி** :—எம் நாயக, "உயிரினைக் காக்குமபொருட்டு வெண்சிறு கடுகைப் புகைத்தாலும் தடைப்படாது, விரைந்து சென்று, தக்க முறையால் இயல்பின் புறமாயிருந்து ஆவியைக் கொள்ளும் இயமனையே ஒத்துள்ளாய் நீ. ஆதலால், தலைசாய்ந்

துள்ள நெற்கதிர்கள், வரப்புடன் சேர்ந்து சூழலும் கழனிகளோடு, நீர்வளம் மலிந்த, பகைஞர்தம் அகன்ற நாடு, நின் சினம் பெற்றால், அப்பகைவர் வாடும்படி அழிவது திண்ணம்.''

ஔவையார் :—எம தலைவ, நின் ஆற்ற லழியு மெனக் கருதி, மலையமான் தப்பினமைகருக் கவல்கின்றனையோ? அவ்வாறெனில் அதனை விட்டொழிக. நினக்கு நிகர் நீயே. (காவலன் பணிவுடன் வருதல்) ஏடா! என் செய்தி?

காவலன் :—அம்மையே, வணங்குகிறேன். நமக்கு, பெறுதற்கரிய நன்னாளாகு மிந்நாளின் இந்நற்பொழுதில், முருகன் திருவருட் பெருக்கால், பூப்போலும் வடிவினையுடைய மைபூசப் பெற்ற கண்கள் மயங்கவும் தோள்கள் மெலியவும் தன்னை நோக்கிய மகளிர் தம் நெஞ்சைப் பிணிக்குமாறுள்ள அழகுடன, இளஞாயிறு போன்ற ஓர் இளவரசர் நம அன்னையர்பால தோன்றியுளர்.

ஔவையார்:—நல்ல செய்தியே! இதனைப் பெற்று மகிழ்க. (ஒரு பொற்காசு அளித்தல்) நமது இறைமகன் வாழ்க! வேந்தே, இனி நும்பால் எததகைய உளைவும் தோன்றுத லாகா. மகன் பிறந்த இம்மங்கல நாளில் நினது உளம் பெருமகிழ்ச்சியால் பொலிவதாகுக. ஏடா, காவல! நீ விரைந்து சென்று நம் வள்ளுவனை அழைத்து, நம் மன்னர் மகன் பிறந்தமையை, இம்மாநகர் உணருமாறு முரசொலி செய்து தெரிவிக்க விடுக்க. மற்றும், நமது நகர்ப்பெருந்தகை அம்பலவாணரை யணுகி, அரசர், இளவரசர் பிறந்த நாட் சிறப்புக்கு வேண்டுவன விரைவினி லியற்ற ஒரு திட்டம் விரும்புகிறார் எனவும் அறிவிக்க. (காவலன்

பணிந்து செல்லுதல்) ஓ! அதோ, செவிலித் தாயர்களும் மகவுடன் வருகின்றனரே?

**நங்கை-இயன்மொழி :—(திரைக்குள்)**

மாணிக்க மால்வரைமேல் மன்னுசெக்கர் வானமென
வேணிப்பிரான் தோளில் ஏறவுஞ் சிறுகுருந்தோ

**செல்வி-அருண்மொழி :—(திரைக்குள்)**

செஞ்சதங்கை கொஞ்சச் சிறுகிண் கிணியாடக்
கஞ்சமலர்த் தாளுமையாள் கண்களிக்க வந்தானோ

**தேவி-தேமொழி :—(திரைக்குள்)**

பெண்ணானந்த கற்புப் பிடியும் பிணைமானும்
கண்ணாரக் கண்டு களிக்கவரு கற்பகமோ.

**மூவரும் :—(மகவுடன் மன்னன் முன்)**

நீலமயில் வாகனனோ நெட்டிலைவே லாயுதனோ
கோலநிறைக் கோழிக் கொடிபடைத்த சேவகனோ

**நங்கை :**—குன்றமுங் கொக்கும் குரைகடலும் சூர்மார்பும்
குன்றவடி வேல்எறிந்த கொற்றவனோ நற்றவனோ

**செல்வி :**—உள்ளத் திமிரம் ஒழித்துச் சிவானந்த
வெள்ளத்துள் அன்பர் விளையாட வைத்தோனோ

**தேவி :**—முத்தோ குலிசமோ மூதொளிமா ணிக்கமோ
சித்தோதென் போரூர்ச் சிவானந்த வாரிதியோ

**மூவரும் :**—ஞானக் கரும்போமெய்ஞ் ஞானக் தக்கடலோ
தானமற்றூர் போற்றும் தமிழமுதத் தண்ணளியோ.

**ஒளவையார் :—(அண்மையிற் சென்று நோக்கி)** செவிலியர்காள்! நீவிர் கூறியன மெய்தான். நம் வேந்தன் முருகவேளைத்தான் திருமகனாகக் கொண்டுள்ளான். வாழ்க நம் மன்னன்! வேந்தே, உன்

அருமை மகனை இவண் இனிது காண்க. (அதியமான் அமைதியின்றி நோக்குதல்) மன்ன! அரும்பெறல் திருமகனைக் கண்டுமா நினக்கு இன்னும் அமைதி ஏற்படவில்லை? அரசே! "விண்ணவரை வழிபட்டு நல்வேளையில் ஆவுதி அளித்து, இவ்வுலகிற்குப் பெறுதற்கரிய மரபு வாய்ந்த கரும்பைக் கொண்டு வந்து, இந்நிலவுலகத்தில் ஆணை செலுத்திய, தொன்மை நிலை பெற்றுயர்ந்த நினது மரபின் முன்னோர்களை யொப்பவே நீயும் பொன் வீரக்கழல் புனை காலினையுடையாய்: பெரிய பனம் பூ மாலையைப் பூண்டுளாய்; மலர் மலிந்த பொழிலையும் பெற்றுளாய். இன்னும், நாளும் புதிய புலால் மணநாறும் நீண்ட வேலையும், தமிழ்நாட்டு ஏழு மன்னர்களோடும் ஒன்றுகூடி நாடும், நீங்காத அரச வுரிமையையும் குறைவிலாது பெற்றுளாய். எனினும் அமைதிபெறாது போரினை விரும்பி, ஒலி மிகும் முரசு முழங்க மன்னர் எழுவருடன் பகைத்து, மேற்சென்று போரில வெற்றிவாகை சூடி, நின் வலிமையை விளங்கக்காட்டிய அந் நாளிலும், உனது புகழின் மேன்மையைப் பாடுநர்கள் பாட வியலாது போயினர். ஆனல் இன்று, எதிர்ப்பு மிகுந்த கோவலூரை யழித்து வென்று, மற்றும் பகைஞர்தம் அரண்களை அழிக்கும திறல் மிகுந்த ஆழியைத் தாங்கியுள நினது தோளை, —மாபெரும் புலவன்—பரணன், தன் பெருமை தோன்றப் பாடினன்." இதனல் நின் வலிமையின் நிலைமை விளங்குவதன்றோ!

(இந் நிலையிலும் சினம் நீங்காமை கண்டு) "கையிலுள்ளது வேல்; காலில் இருப்பது புனைகழல்; மெய்யினில் வேர்வை யுள்ளது; குருதி நிரம்பிய பசியபுண் தொண்டையின்பால் ஏற்பட்டுள்ளது. பகைவர்கள்

ஒழியுமாறு, வளர்கின்ற இளம் பனையினுச்சியில் ஊசி போன்றுள்ள வெண்மலரையும், பெரிய வெட்சிப் பூவினையும், வேங்கைமலரோடு சேர்த்துச், சுருண்ட கரிய மயிரினில் வனப்புற அணிந்து, புலியுடன் போர் செய்த வலிமை மிகுந்த யானைபோலச், சினம் இன்னமும தணியவில்லை. பகைஞரை வெகுண்டு நோக்கிய அவன் கண்கள, தனக்குற்ற அருமைச் சிறுமக க் கண்டும, சிவப்பு மாறாதுள்ளன. ஆதலின் இவனைச் சினமூட்டியவர்கள் ஐயோ, பிழைக்கமாட்டார்கள்."

**கருணாகரர்:**—தண்ணளி வேந்தே! தாயின் தனி மொழியை ஓம்புக. அவர்தம் உணர்ச்சியும் உளமும் வெறுத்த எவையும் தாங்க ளிதுவரையிற் புரிந்த தில்லையே! பெரும! எமது, முழுமதி நிகர்க்கும் திருநிறை இளவரசைப பெற்று, உளமகிழ்வு பெற் றருள்க.

**அதியமான்:**—அன்னாய்! எனது அடங்காச் சினத்தை இன்னே அவித்தேன். தங்க ளுளம் வாட மனங் கொளேன். தேவி, தருக எம மகனை. (**மன்னன் தன் மகனை ஏந்தி மகிழ்தல்**)

**கருணாகரர்:**—தண்மதி நிகர்க்கும் பொன இளங் கோவுடன் எம்மிறை அதியமான் என்றும வாழ்க!

**யாவரும்:**—வாழ்க, வாழ்கவே.

இயல், ச—காட்சி க. முடிவு

## இயல் ௪ — காட்சி ௨

**உறுப்பினர்:—அதியமான்; ஔவையார்; காவலன்**

**இடம்:—மன்னன் கோயில்**

**பொழுது:—பகற்பொழுது.**

*(அதியமான் போருக்கு ஆயத்தமாதல்)*

**அதியமான்:—** அன்னாய்! அம் மலையமானின் செய்தியை இன்று அறிந்தீர்களா? அன்றே யான் அவனைச் சிறை செய்யாமல் தப்பவிட்ட தவறலன்றோ இன்று எனக்கு இவ்விடர் நேர்ந்தது. நெடும்போர் செய்து நீடுபுகழ் பெற்று, 'நம்மை எதிர்ப்பவர் இன்றெவரும் இல்லை'யென இறுமாந்திருந்ததற்கு, அம்மலையமான் திருமுடிக்காரியினது எதிர்பாரா இவ் வெதிர்ப்பு, எனது வெற்றியில் இருந்த ஐயத்தை விளைவிக்கின்றது. மற்றும், தனக்குள்ள நீங்காப் பகைஞனை, விற்றொழில் வீரன் வெற்றிபெறு ஓரியைக் கொன்று, அவனது கொல்லிமலை நாட்டையும் கைப்பற்றுதற்குத் துணை நின்றமையாற்றான், இன்று, அம்மலையமானுக்குப் பெருந்துணையாகத் தன் நாற்பெரும் படைகளோடும் அச்சேரமான் பெருஞ்சேரலிரும்பொறை, இவண் என்னை எதிர்த்து வந்தனன் போலும்? பகைஞர்கள் நம் மதிற்புறத்தே முற்றுகையிட்டு நம்மைப் போருக்கு அழைப்பதன் முன்னர், நம் படைகள் யாவையும் ஒன்று கூட்ட வியலுமோ, என்ற ஐயந் தோன்றுங்கால், என்பால் அச்சமும் உடன் நிகழ்கின்றது. என்செய்வது?... காவல! நீ விரைந்து நம் கருணாகரரிடம் சென்று, 'நம் மன்னர், படையின் அணி வகுப்புக் காண வருகின்றார்' எனக் கூறுக.

*(காவலன் வணங்கிச் செல்லுதல்)*

**ஔவையார்:**—பெரிய தகைமையை யுடையாய்! நீ இவ்வாறு அஞ்சினால், நல்ல வார்களாற் கட்டப்பெற்ற 'இழும்' என ஒலிக்கும் முரச முழங்கப் பகைவர்மேற் சென்று, போர் புரிவது யாங்ஙனம்? நின் மாற்றலர் நின் பாலுள்ள தூசிப் படையைக் கண்டதும் மிகுந்த நடுக்கங்கொண்டு பல திசைகளினும் சிதறி யோடுகின்றனர். மற்றும், நீ போர் செய்யுங்கால், நின் பகைஞர், போரினில் வாளினால்வெட்டுண்டு சாவாது, ஏதோ நோயின் காரணமாக அப்போர்க்களத்தே இறக்க நேரிடினும் அப்போது அவர்களை அறமுறை வழுவாத நான்மறை யந்தணர்களின் நல்ல வழிபாட்டினால் தரப்பெற்ற, பசுமையான நாணற் புல்லிற் கிடத்தி, வீரப்போர் முனையில் இறந்து பட்ட வீரக் கழல் புனையும வேந்தர்கள் செல்லும் வீரர் மேலுலகத்திற்குச் செல்லும் வீரவழிபாடுகள் நிகழுமன்றோ? இவற்றையெலா முணர்ந்து நின் வலிமை தோன்ற மனத்தடுமாற்ற மின்றி மாபெரும் போரை இன்னே சென்று புரிக. அதோ! பறையொலி எழுகின்றது. நம் படைகளும் ஆரவாரிக்கின்றன. நினது செல விறல் அவை முன்னினும் பன்மடங்கு வலிமை பெறும். எழுக வேந்தே! வெல்க பகைஞரை! எல்லாம் இறைவன் திருவருள்.

**அதியமான்:**—தமிழ்த்தாயே, விடை பெறுகின்றேன. போரினின்று மீளும் கருத்து எனக்கு இதுபோது தோன்றவில்லை. எனினும் என்கடமையைப் புரிவேன். என்றும் இலாதனவாய ஐயமும் அச்சமும் விரவிய கருத்துக்கள் ஒன்றன்பின் ஒன்றாக என்னுளத்தே தோன்றி வலிமையையும் திட்பத்தையுங் குலைக்கின்றன. யாது கருதியோ எனக்கு மேலுமேலும்

அமைதியின்மை பெருகுகின்றது. தாயே! எவை வரினும் அவைபற்றி அஞ்சேன். இவ்வுலக வாழ்க்கை புல் நுனிமேற் றங்கும் நீர்த் துளி யொத்ததெனை நன்குணர்வேன். ஆதலினால் என் இறப்புக் கருதி யான எட்டுணையும் கருத்தழிந்திலேன். ஆனால் ஒன்றுமட்டும் தங்களை வேண்டுகிறேன் என் தனயன், இளைஞன்; கருத்திலான்; ஒன்றும் உணராதவன். என்பின், என் துணைவி இவ்வுலகில் உயிருடன் உறையாள். ஆதலால் தாங்கள் அவனுக்குத் தாயும், தந்தையும், ஆசிரியனும், அண்ணலும், ஆண்டவனுமா யிருந்து அவன் பிற்றைநாளில் வெற்றியுடன் வாழ்ந்து இன்புற்றிருக்க வேண்டுவன புரிவீர்களாக. இதுவே எனது பணிவு மிகுந்த-தங்கள்பால் விரும்பும்-இறுதி வேண்டுகோள் ஆகும். எனது கடமை இவ்வுலகில் இனி வேறில்லை. இனிமேல் யான் போர்க்கு வழைந்து எழுகின்றேன். அன்னையே! என்னருமைத் தமிழ்ச் செல்வியே! எனது உளமார்ந்த வணக்கங்கள் தங்கட்கு உரியவாகுக. தங்களது இனிய நட்புரிமைக்கு யான் எழுபிறப்பினும் தங்கட்குக் கடப்பாடுடையவனாகின்றேன். எனக்கு விடை தருக. (ஔவை கண் கலங்குதல்) தாயே! அமைதி பெறுக. சென்று வருகின்றேன். (அதியமான் செல்ல, ஔவை பெருமூச்செறிந்து நிற்றல்.)

இயல் ௪—காட்சி ௨ முடிவு.

## இயல் ௪—காட்சி ௩

**உறுப்பினர்:**—அம்பலவாணர்; ஔவையார்; கருணாகரர்; அதியமான் நெடுமான் மகன் பொகுட்டெழினி; காவலன்

**இடம்:**—அரசப்பெருமன்றம்

**பொழுது:**—வைகறைப்பொழுது

[ அதியமான் வீழ்ச்சியும், அவன் மகன் பொகுட்டெழினியின் முடிசூட்டும் ]

**அம்பலவாணர்:**—ஆ! முருக! நின் திருவடியே துணையென நம்பிய எமக்கு இவ்வாறு இடர்ப்பாடு ஏற்படலாகுமா? கைக்குக் கிட்டியது வாய்க்கு எட்டாமற போயிற்றே! ஐயகோ! அன்று எம் தகடூர்நாயகனின் பிரிவால் வாட்டமுற்ற யாம், பெரிதும்போற்றி வழிபடுமாறு எமக்குப் பற்றுகோடாகி, இதுகாறும் இத்தகடூர் பெருஞ்சிறப்புடன் மிளிர, தண்ணளி சுரக்கத் தனியரசு செலுத்திய, எம்மிறைவனின் முடிவு, இவ்வாறுருவது நன்றோ? தன் மரபிற்றோன்றியவனென அச்சேரலர் கோன்—பெருஞ்சேரலிரும்பொறை—கருதாதது எற்றிற்கோ? முகத்திலும் மார்பிலும் பட்ட இவ்விழுப்புண், அருள்வடிவமாய் அஞ்சியண்ணலை எம்மிடைநின்று அகற்றியதோடமையாது, இத் தகடூரானைவரும் தாய்தந்தையரற்றுத் தவிக்கும் தனியிளங்குழவிகள்போல ஏங்கவும் வைத்ததே! ஏ, பெரும! வினை வலியை வெல்ல எவராலாகும்?

**ஔவையார்:**—(பெருமூச்செறிந்து) 'வெட்டிச்சுடப் பெற்ற கொல்லையில் குறவன் முறித்த மரத்துண்டு போல, கரிந்த மேற்பட்டையுடைய விறகாலாய ஈமப் பள்ளியில் எரியும் தீயினில் உடல் சுடுதற்குச்சேரினும்

சேருக. சேராது, வான்உற உயரினும் உயருக. குளிர்ந்த சுடரையுடைய மதிபோன்ற வெண்குடை பெற்ற ஒளிமிக்க ஞாயிற்றை நிகர்க்கும் எம் அஞ்சியின் புகழ் மாயாது.

**கருணாகரர்:**—அன்றாய்! நமது பெருமான்றன் புகழுடம்பு எவ்வாறு மறைய வியலும்? 'அவனுடன் இணைந்து, மகிழ்ந்து கழியாத காலைமாலைப் பொழுதுகள் இனி இல்லை யாகுக. யான் வாழும் நாட்களும் இனி எனக்குப் பயனிலாமையால் அவை அல்லாத நாட்களே யாகுக முடியோடுயர்ந்து விளங்கும் மலை பொருந்திய நாடு முழுதும் தரினும் அதனைப் பெறாது மறுத்தவனாய் எம் இறைவன், தனது நடுகல்லின்மீது மயிற்பீலிகை யணிந்து வணங்கி வழிபட்டுப் பின்னர், பன்னாடையாலரிக்கப் பெற்ற தாயமதுவைச் சிறிய கலத்துள் அன்பின்றி வழங்கினால ஏற்றுக்கொள்வனோ? உண்மை வீர நண்பனையின் யான் இனி உயிர் தாங்குதல் ஒல்லாது.

**ஔவையார்:**—அன்பர்களே! என்செய்வேம்? சிறிதளவு மது பெற்றால் அதனை எமக்கே தருவன்: இனி அஃதில்லை! மிகுதியாகப் பெற்றால், யாம உண்டு பாட, எஞ்சியதனை அவன் நுகர்வன்; அஃது இனி ஏற்படாது! சிறிதளவு சோறு இருப்பினும் மிகப் பலரோடு உண்ணுவன்: அது கழிந்தது! பெருஞ் சோறு பெறினும் பலரோடனையே உண்பன்; அது நீங்கியது! என்புடன் கூடிய தசையுணவு எலாம் எங்கட்குத் தருவன் ; அஃது இல்லாகியது! போர்க்களத்திலோ அம்புடன் வேல்பாயு மிடங்களிலெல்லாம் தான் சென்று நிற்பன்: அச்செயலும் அற்றது! நரந்தமலர் மணக்கும் தன் கையால் புலால் நாறும் எமது தலையை அன்

பால் தடவுவன்: அஃதினி நிகழாது! அவனது அரிய மார்பிற் பாய்ந்தவேல் அரிய தலைமைபெற்ற பெரும் பாணர்களின் அகன்ற ஏற்குங்கலன்களைத் துளைத்து, இரப்பவர்தம் கைகளை ஊடுருவிச்சென்று, தன்னாற் காக்கப்பெறும் சுற்றத்தாரின் சிறிய கண்பார்வைகளின் ஒளிமழுங்க, அழகிய சொற்களின் நுண்ணிய தேர்ச்சி மிகும் புலவர்களது நாவினிற் போய்த் தைத்தது பற்றுக் கோடாகிய எம்மிறைவன் எவ்விடத்துள்ளான்? இனிப் பாடுவாரு மில்லை: பாடுவார்க்கு, ஒன்று ஈவாரு மில்லை. ஆதலால், இவ்வுலகில், குளிர்ந்த நீர்த்துறை யின் தேன்மிக்க பெரிய பகன்றைமலர் எவரானும் அணியப்பெறாதது போல, பிறருக்கு ஒன்றும் நல்காது மாய்ந்துபோகும் உயிர்களும் மிகப் பலவாகும்.

**வீரவேள்மா:**—பீடுடைய பெருமக்களே! யாவும் அறிந்த தாங்களே இவ்வாறு உளங் கலங்கினால் நம் குடிமக்கட்கு ஆறுதல் மொழி கூறுபவர் யாவர்? மாற் றலர்தம் கொடுமையால் மண்ணுலகு துறந்த நம்மன்னர் பிரான் மிகுமாண்புற்றவரே; எனினும் ஊழ்வினை பெருவலியுடைத்தன்றோ? அதனின்று நீங்க எவரால் ஆகும்? பெரியீர், இதுபோது, நம் படைச்செருநர்கள் யாவரும் ஒற்றுமை குலையாது போர் புரிந்தமையால், நம்மிறைவன் நம்மைப் பிரிந்தும், நமது நகரூர் நக ரைக் கைக்கொள வகையறியாது தம் பெரும்படை களுடன் நம்மெதிரிகள் பின் வாங்கினர். மலையமான் திருமுடிக்காரியோ வெனில், தனது திருக்கோவலூ ரைத் திரும்பப் பெற்றதும் உள நிறைவுகொண்டு போரை முடித்தனன். அவன் மகிழ்வு கண்டதும் சேரமான் பெருஞ்சேரலிரும்பொறையும் தமருடன் தன் நாடு ஏகினன். எனவே, இனி நமக்குத் துன்ப

மின்று: அச்சமுமில்லை. ஆதலால் இன்னே, நமது மன்னர் மகன் திருவளர் பொருட்டெழினிக்கு, நமது நாட்டின் தலைமையை யளிப்போம். முடிசூட்டு விழாவுக்கு யாவும் திட்டஞ்செய்து, தங்களாணைப்படி இதோ நம் பிறைசூடியும், இளவரசரை மங்கலநீராட்டி, மடியுடுத்து, மணிமுடி சூட்ட, இவண் அழைத்து வருகின்றனன். நாம் யாவரும் நம்நம் வினைமேலுளங்கொள்வோம்.

(அமைதியுடனிருந்து, இளவரசரை அரியணைமீது இருத்தி, அரசவிருதுகளளித்து, அவர்க்கு மணிமுடி சூட்டுதல்.)

**அம்பலவாணர்** :—குதிரை மலைநாட்டுத் தகடூர் வாழும் குடிமக்களே! நம் பழைய மன்னர் தகடூர் நாயகற்குப் பிறகு நம்மைப் புறந்து நல்லரசு செலுத்திய நம்பிறைவன் அதியமான்—நெடுமானஞ்சி, அண்மையில் நடந்தேறிய திருக்கோவலூர் மலையமான் திருமுடிக்காரிக்காகச் சேரமான் பெருஞ்சேரலிரும் பொறையினால் தோற்றுவிக்கப்பட்ட போரில், சேரமானது வேற்படையால் விழுப்புண் அடைந்து, உம்பருலகாளச் சென்றமையால், இத்தகடூர் ஆட்சியை அவ் அதியமானின் திருமகன் பொருட்டெழினி ஆன்றோர் வாழ்த்த, அரசியற்றலைவர்கள் அணியுடன் வணங்க, ஐம்பெருங் குழுவினர் அடிதொழ, திருவருட்டுணைகொண்டு, நம் நாட்டவர் முன்னிலையில், அரசுகட்டிலேறி, மணிமுடி ஏற்று, நம்மன்னர்பிரானாக விளங்குகின்றார். ஆதலால், நாம இன்றுமுதல் அவரடிதொழும் குடிமக்களாயினேம். எனவே, நம் கடமைகளை இனித் தவறாது அவருக்கு முறைப்படி புரிவோமாக.

**ஔவையார்** :—அலர்பூந்தும்பை அணிந்தவனே! அழகிய வலிய மார்பையுடைய எம் தலைவ!! திரண்டு நீண்ட கைகளையுடைய எம் மன்னன் மகனே.!! நீ என்றும் இன்பச் சிறப்பும் வென்றிச் சிறப்பும் பெற்றவனாகி நெடிது வாழ்வாயாக. மற்றும், உப்புவாணிகர் தமது பண்டம் நிறைந்த வண்டிக்கு ஏதம் சிறிதும் வாராதவாறு அமைத்துள்ள சேம அச்சுப்போல, நீயும், நின்னாற் புரக்கப்படுகின்ற நாட்டினில் ஏற்படுகின்ற இடையூறுகளுக்குத் தக்க காவலனாய் அமைக. நினக்கு என்றும் திருமுருகன் அருள் பொலிவதாகுக.

**கருணாகரர்** :—வீரருள் வீரனாய எம் வீர அஞ்சியின் பின்தோன்றலே! யாமும் எம் படைஞரும் இன்று முதல் தங்கள் ஊழியர்கள் : எம் கடமைகள் தங்கள் உளமகிழ என்றும் இனிதே நிறைவேறும்! எங்களது வணக்கத்தை ஏற்றருள்க. (தலைவணங்குதல்) எம் இறைவன் பொகுட்டெழினி வாழ்க! [யாவரும் :—வாழ்கவே!] புலவர்ப்போற்றி, இரவலர்ப் புரக்கும் எம் பொகுட்டெழினி வாழ்க!! [யாவரும்:- வாழ்கவே!!] தகடூர் முறைசெயுந் தண்ணளியுடைய குதிரைமலை நாட்டுக் கொற்றவன் பொகுட்டெழினி தேவன் வாழ்க!! [யாவரும் :—வாழ்க, வாழ்கவே!!!]

நாடகம் முற்றும்

வாழிபல வூழிதொறும் வாழிதமிழ் அன்னாய்!
மைந்தரொடுந் தொண்டரொடும் வாழிதமிழ் அன்னாய்.

நலம்!! நலம்!! நலம்!!!

# வள்ளல் பேகன்

**வரலாறு** :— கொங்கு நாட்டிற்குக் கண்போல் விளங்குவது பொன் முடியொடு விளங்கும் பொதினி (பழனி) மாமலை. அம்மலையைச் சார்ந்துள்ள ஊர், ஆவியர் குடி (ஆவினன்குடி) ஆகும். அதனை இற்றைக்கு ஓராயிரத்துத் தொள்ளாயிரம் ஆண்டுகட்கு முன்னர் பேரா நலங்கொண்ட பேகன் எனும் ஓர் ஒப்புயர்வற்ற வள்ளல் ஆண்டு வந்தான். அவன் தன் மனத்திற் கினிய வாழ்க்கைத் துணைவியாகக் கற்பிற் சிறந்த கண்ணகி எனும் ஒரு நங்கையை மணந்தான். கண்ணகியும் பேகனும் ஓர் ஆவிற்குத் தோன்றிய இருகோடுபோல ஒத்த அன்புடையவராய் இரப்பவர்க்கு ஈந்து இசைபட இனிது வாழ்ந்தனர். இவ்வாறிருக்கும்போது ஒருநாள் மாலையில், பேகன் மலைவளங் காணச் சென்றான். கண்டு மீளும்போது வாடைக்காற்றால் வருந்தி ஆடிய ஒரு மயிலைக் கண்டான். அதனிடத்துப் பெரிதும் இரக்கங்கொண்டு தான் அரிதில் பெற்ற ஒப்பற்ற போர்வையை அதன் மீது போர்த்தி மகிழ்ந்து இல்லம் ஏகினான். இவனது செய்கையை யுணர்ந்த கண்ணகி தன் காதலனின் கொடைமடத்தைக் குறைத்துக் கூறினாள். அதனால் பேகன் அவளிடத்துச் சீற்றங்கொண்டு அவளைத் தாயகம் செல்லுமாறு பணித்தான். ஆனால், கொண்ட கணவனைவிடக் கொள்ளும் உறவினரைக் கருதாத அக்கண்ணகி, அவனுக்குரிய மலைகளுள் ஒன்றில்

தனித்திருந்து ஊண், உறக்கம் இன்றி, தன் நாயகனை நோக்கி நற்றவம் கிடந்தாள். அடவி வாழ்க்கை அவளது அழகிய ஆக்கையை அலைக்கத் தலைப்பட்டது. கண்ணகியின் கொடிய நோன்பினைக் கண்டனர் பேகனின் புலவர்கள். அவர்கள் பேகனிடம் கண்ணகியின் மனப்பான்மையை யுணர்த்தினர். அவனிடம் நல்லுரைகள் பல நவின்றனர்; இல்வாழ்க்கையின் மேன்மையை எடுத்துக்காட்டி, கண்ணகிபால் அவன் கொண்ட வெறுப்பை வேரறுத்தனர். பேகனும் கண்ணகிபால் அன்புகொண்டான். நெல்லின் உமி சிறிது நீங்கிப்பழமைபோல் புல்லினும் திண்மை நிலைபோம் எனும் முதுமொழியைப் பொய்யாக்கி, பேகனும் கண்ணகியும் ஒன்றுகூடி, நல்லறம்பல ஓம்பி நாட்டார் அனைவரும் தம்மை நாடி நிற்க, சீர் மிகப் பெற்றுச் சிறப்புற வாழ்ந்து வந்தனர்.

நலம்!

---

## பகுதி க.

## காட்சி 1

**உறுப்பினர்:**—நாணன், காடன், வீரன், புலிப்போத்து, ஆனந்தக்கூத்தர், மற்றும் சிலர்.

**இடம்:**—ஆவியர் குடியில், முருகன் திருமுன்னர்.

**பொழுது:**—மாலைப்பொழுது.

[ஆவியர் குடிப் பெருமக்கள், தங்கள் தலைவன் பேகன், பெருவாழ்வு எய்தவும், தங்களது நாடு தழைக்கவும் முருகவேளை வழிபடுதல்.]

**நாணன்:**—(ஆண்டவனை நோக்கி) உலகம் புரக்கும் உரவோய்! எங்கள் உயிரே! நின் அருட்கடலை என்

னென்பேம்! நின்னையன்றி எங்கட்கு உறுதுணை யாவார் வேறு எவருளர்? நின்கோழியோங்கிய வென்றடு விறற்கொடி வாழி, வாழி!

**காடன்:—** (நாணனைப் பார்த்து) அண்ணா நாணா! அங்கு என்ன செய்கின்றீர்கள்? நேரமோ கடக்கின்றது. நாம் நம் பூசனைக்குரியவற்றையெல்லாந் திட்டப்படுத்த வேண்டாமா?

**நாணன்:—** தம்பி! இதோ வந்துவிட்டேன். யாரடா அங்கே? ஏ! வீரா! நீ விரைந்து சென்று நம் மரபின் தலைவராய ஆனந்தக்கூத்தரை, நம்மிறையின் வழிபாடியற்ற விரைவில் அழைத்து வருவாய்?

**வீரன்:—** இதோ செல்லுகின்றேன்; அதற்குள் இவண் ஆவனவற்றை யெல்லாம் திட்டம் செய்து வையுங்கள். பெரியார்வந்ததும் பூசையைத் தொடங்கி விடுவோம். அண்ணா காடா! நீயும் என்னுடன் வருவாய்; நாம் இருவருமாகச் சென்று அழைத்துவருதல் நலமாக விருக்கும்.

**நாணன்:—** காடா! அவ்வாறே நீயும வீரனுடன் சென்று வருவாய். நான் ஆகவேண்டியவற்றைப் பார்த்துக்கொள்ளுகிறேன்.

[வீரனும் காடனும் வெளிச்சென்றதும் நாணன் புலிப் போத்தைப் பார்த்து]

ஏடா புலிப்போத்து! நாம் இன்று நம் பூசையை வெற்றிபெற முடிக்கவேண்டும். நம்நாடு செழிக்கவும் நம் தலைவராம் பேகனது செங்கோல் வளரவும், நம் நாட்டார் அனைவரும் பசியும், பிணியும், பகையுமின்றி கல்வியும் செல்வமும் மிக்குடையவராய் வாழவும் வேண்டி, நம் குலக்கொழுந்தாம் வள்ளி நாயகனை

ஒருமனத்துடன் வழிபடவேண்டும். ஆகவே நீ சென்று பூசனைக்குரிய பொருள்கள் யாவும் விரைவில் இங்குக் கொணர்வாய்.

**புலிப்போத்து** :—அவ்வாறே அண்ணு! இதோ கொணர்கின்றேன்; நீங்கள் கூறியன யாவும். (ஓடு கின்ருன்)

[ஆனந்தக்கூத்தர் நறு நீராடி, பட்டுடையுடுத்திப் பூசுவன பூசிப் புனைவன புனைந்து பூசனை புரிய வருதல். எல்லாரும் எதிர்சென்று வணங்குதல்.]

**நாணன்** :—வருக! பெரியீர், வருக! வருக!! தங்கள் வரவு நல்வரவு ஆகுக! அடியேங்களது வணக்கம் தங்கள் திருவடிகளுக்குரியதாகுக! தாங்கள் சிறுவர்களாய எம்பொருட்டு இப்பூசையைப் புரிதல்வேண்டும். அறிவிலும் பழக்கத்திலும் மிக்க தாங்கள், எங்களது நிலங்கள் நல் விளைவை எய்தவும், காடுகளில் வேட்டம் பெருகவும், எங்கள் மக்கள் அறிவும், செல்வமும், நல் வாழ்வும் பெறவும், நம் யாவர்க்கும் இறையாய, தலைவன் பேகனது கொடைத்திறன் நாளும் ஓங்கவும், முருகவேளை வழுத்த வேண்டுகின்றேம்.

**ஆ. கூத்தர்** :—அன்புடை மக்களே! நலம் உண்டாகுக! யானும், உங்களது விருப்பின்படி உங்களுடன், முருகவேளுக்குப் பூசனை புரிந்து, நாடு செழித்து நலம் பல பெற வரங்கிடப்பேன். நீங்கள் யாவரும் நம் குலதெய்வமாம் முருகவேளை உளத்தில் நெடிது சிந்தித்து என்னுடன் வழிபடுவீர்களாக.

[ஆனந்தக்கூத்தர் பூசைபுரிய, யாவரும் வணங்குதல். பின்னர் எல்லோருங்கூடி முருகனது புகழுரையைப் பாடிப் போற்றல்.]

நீலங்கொள் மேகத்தின் மயில்மீதே,
நீவந்த வாழ்வைக்கண் டதனாலே
மால்கொண்ட பேதைக்குன் மணநாறும்
மார்தங்கு தாரைத்தந் தருள்வாயே.
வேல்கொண்டு வேலைப்பண் டெறிவோனே
வீரங்கொள் சூரர்க்குங் குலகாலா
நாலந்த வேதத்தின் பொருளோனே
நானென்று மார்தட்டும் பெருமாளே.

(காட்சி முடிதல்.)

---

## காட்சி 2

இடம் :—பூஞ்சோலை.

நேரம் :—மாலைப்பொழுது.

உறுப்பினர் :—பேகன்வள்ளல்—புனங்காப்போன்.

[வள்ளல்பேகன், உலாவப்போகும்போது குடிமக்களின் ஆர்ப்பைப் பகைவரிடும் ஒலியென ஐயுற்று, காவலனால் தம்மக்களென உணர்ந்து மகிழ்ந்து செல்லல்.]

**புனங்காப்போன் :—**

[கொட்டாவி விட்டு எழுந்து நின்று தனக்குள்]

ஓம் முருகா! பழனிமலைத் துரையே!!......... என்னே! (வியத்தல்) மாலைப்பொழுதும் நெருங்கிற்று. ஞாயிறும் மேற்றிசையில் தளதளவென அசைகின்றான். இவ்வரைமுடியும் வானவெளியும் பொன்மயமாக விளங்குகின்றன. முல்லை மலரின் மணமும், வள்ளக் குவளையின் வாசமும்; எல்லையில் இன்பத்தை இங்கு அளிக்கின்றதே! குரவம் அரும்பிற்று; கோங்கு மலர்ந்தது; தேமா செந்தளிர் ஈன்றது; குயில் கூவுகிறது; மயில் அகவுகிறது; தேனும் வண்டும் செவ்வழி

பாடுகின்றன. அப்பா! என்ன தென்றலின் விளையாட்டு! இவ்வேனிற் பருவத்திலன்றோ இயற்கை நங்கையின் எழில்மிகு வடிவம், இனிதே விளங்குகின்றது. (திடுக்கிட விழித்து நோக்கி) என்னே மன்னன் வரும் நேரம் என்பதையும் உணராது ஏதேதோ சிந்திக்கின்றேமே? விரைவில் மன்னன் வருகைமேல் மனங்கொள்வோம் (உடைகளைச் சீர்திருத்தி அங்கும் இங்குமாக உலாவல். அரசன் விரைவாக வருவதைக் கண்ணுற்று அச்சங்கொள்ளல்) ஓ! அதோ எம் தலைவன்! கடுமான் என்னைக் கடிது வருகின்றனரே? யாது காரணமோ அறியேனே? இறைவ! என்னைக் காத்தருள வேண்டுகின்றேன்.

[வள்ளல் பேகன் விரைந்து வருதல்—காவலன் அஞ்சி ஒடுங்கி நின்று.]

பு. கா:—அன்பும் அருளு மிக்க அண்ணலே! அருட்பெருங்கடலே! வரையாது கொடுக்கும் வள்ளால்! நின் வருகை நல்வரவாகுக! நீயும் நின் சுற்றமும் நீடுவாழ்க.

பேகன்:—ஏடா! புனங்காப்போய்! யாம் வரும் வழியில், இன்று என்றுமில்லாத புதுமையான இரைச்சலும், புகைச்சலும், நம் மலைச்சாரலினின்று எழும்புவதை யறிந்தேன். அவற்றை யாதென விரைந்து சென்று அறிந்து இவண் விளம்புவாய்.

பு. கா:—எம்மைப் புரக்க வந்த இறைவ! பொறுத்தருள்க. நின் சினத்தை எழுப்பிய நிகழ்ச்சிகள் யாவையென அடியேன் தெற்றென அறிவேன். தாங்கள் திருவுளம் பற்றின், அடியேன்.........

பேகன்:—அங்ஙனம் நீ அறிந்திருப்பின் இவண் கூறுவாய்?

**பு. கா** :—எம் தலைவ! தாங்கள் செவிமடுத்த ஒலியும், கண்ணுற்ற புகைப்படலமும், நம் பகைஞரா லியற்றப் பெற்றதோவென ஐயுறவேண்டாம். அங்கு நிற்பவர், நீ காலாற் பணித்த ஒன்றைத் தம் தலையாற் செய்ய வல்ல நின் குடிமக்களேயாவர். அவர்கள் தினையும், சாமையும் விதைப்பதற்காக நிலத்தைப் பண்படுத்தவேண்டி, அகில், ஆரம், தேக்கு இவற்றைத் தடிந்து புனத்திலிட்டு எரிக்கின்றனர். இதனாற்றான் அனற் கொழுந்தும் புகைப் படலமும் தோன்றின. எம்பெருமானே! இன்னும் கேட்டருள். அக்குடிமக்கள், தமக்கு நல்வினையும், நல்வேட்டமும் வாய்ப்பதற்காகவும், உங்கட்கு வென்றியும் புகழும், மேன்மேலும் பெருகுவதற்காகவும், கடம்ப மரங்களினடியில் கோழிக் கொடிகளை நட்டுப் பூசனை புரிந்து, சிறு தினையும் செம்மலருந் தூவி, தொண்டகம் முழங்க முருகியங் கறங்க முருகவேளை வழிபட்டுக் களிக்கின்றனர். அண்ணலே! அதுவே ஆங்கெழும் ஒலிக்குக் காரணமாகும்.

**பேகன்** :—காவலோய்! நன்று! நன்று நின் செய்கை. யாம் பெரு மகிழ்வு எய்தினேம். (சற்றுத் தொலைவில் உற்று நோக்கி) அஃது என்ன அசோகமோ?

**பு. கா** :—ஆம், அருளகமே! சோகமுற்றவரின் துயரினைக் களையும் அசோகுதான் அது. பெரும! மேலும் இவண் கடைக்கணித்தருள்க. ஈண்டுள்ள பசும்புற்றடமும் அதன் புடையுள்ள ஆம்பல்மலர் நிறைந்த குளமும், அரும்பிப்பூத்து அயலில் படர்ந்துள்ள முல்லையும், கனிந்து நிலமிசைத் தாழ்ந்து நிற்

கும் மரங்களும் ஒன்றுசேர்ந்திருக்கும் பெற்றிமையை நோக்கின், தங்கள் வரவால் பெரிதும் மனங்கொண்ட இவ்வனமகள் பச்சைக் கம்பளம் பரப்பி, திருவிளக்கேற்றி மலர்ந்த முகத்துடன் கைகளிற் கனிகளைத் தாங்கிக்கொண்டு நும்மை வரவேற்பதுபோற் காணப் பெறுகின்றது.

**பேகன்** :—நன்று கூறினாய் காவல! நீ ஒரு இயற்றமிழ்ப் புலவன் போலும். நின் உவமை என் உளத்தைக் கவர்ந்தது. அன்றொரு நாள் கொழுகொம்பில்லாது அரும்பிநின்றமுல்லைக்கொடியைக் கண்ணுற்று "பெரும! நின்னைக் கண்டதும் இம்முல்லைக்கொடி தன்னைத் தாங்குவார் நின்னையன்றி வேறு எவரும் இலர் என்று கூறுவதை யொப்ப, பல்லெல்லாந் தெரியக்காட்டித் துணைக்கரம் விரித்து நீட்டிக் குடந்தம்பட்டு வணங்குகின்றது" என்று நீ கூறிய கட்டுரையினும் இன்றைமொழி இனிக்கின்றது. இதோ யான் கொடுப்பதை ஏற்று மகிழ்வாய். யான் சென்று வருகின்றேன். நீ இவண் நிற்பாய்.

[மாலை கொடுத்தல். காவலன் பணிவுடன் ஏற்றல்.]

**பு. கா** :— வாழி தலைவ! வாழி நின் அருட்கொடை! வாழி நின் செல்வம்! வாழி பல்லாண்டு! வாழி! வாழி!

(அரசன் செல்லல்—காவலன் தனித்திருந்து) என்னே! அரசனின் அருட்டிறம். யான் இன்று நரி முகத்தில் விழித்தேன் போலும். அப்போதே எனக்குத் தெரியும். யான் வரும்போது என் எதிரில் என் மனைவி நிறைகுடந் தாங்கிநின்றாள். ஏதோ நல்ல காலமென்று எண்ணினேன். எல்லாம் இறைவன் செயல்

நம்மால் ஆவது என்ன இருக்கிறது. எதற்கும் விரைந்து வீடு செல்வேன். (செல்லல்)

காட்சி முடிதல்.

---

## காட்சி 3

**இடம்** :—வைகாவூர் நாட்டில் ஒரு மலைப் புறம்.

**காலம்** :—பிற்பகல்.

**உறுப்பினர்** :—கண்ணகி; நங்கை; தேவி (தோழியர்); பேகன்.

[நாகவேளின் திருமகள் கண்ணகி, பாங்கியர் சூழ, மலைநலம் பருகி, தனித்திருந்தபோது வள்ளல்பேகன், அவளைக் கண்டு, காதலித்து கடிமணம் புரியக் கருதிச் செல்லுதல்.]

**கண்ணகி** :—ஏடி! தேவி! இப்படி வருவாய்! நாம் எல்லோரும் இங்கு அமருவோம். எனக்குக் கால்கள் மிகவும் ஓய்ந்தன; நடந்த களைப்பு ஒருபுறம். வேங்கையில் படர்ந்தேறிய பூங்கொடியில் ஊசலாடியபோது கால்களை உந்தி உதைத்து ஆடினேனல்லவா? அதனால் ஏற்பட்ட துன்பம் மற்றொரு புறம். நாம் இங்கு சற்று இருந்து செல்வோமே?

**நங்கை** :—அன்றாய்! அவ்வாறே நீ விரும்பியவாறு செய்வோம். (யாவரும் அமர்ந்ததும்) இதோ பார்த்தனையா, அல்லியும், தாமரையும் எவ்வளவு அழகுற இச்சுனையில் மலர்ந்துள்ளன. மேலும், பனிநீரில் தோய்ந்த விசிறிகொண்டு நம் பாங்கியர் வீசுவதையொப்பத் தென்றலும் அச்சுனையுள் படிந்து எழுந்து இங்கு மெல்லென அசைகின்றது. நீ நெடிது ஆடியதால் நின்மேனி அலங்கியுளது. அவ்வயர்ச்சி நீங்க, நீ

இவண் அமர்வாய். இனி நீ நடந்தால் நின் மலர்ப்பதங் கன்றும். யாங்கள் நீ விரும்பின யாவும் விரைவில் கொணர்வோம்.

**கண்ணகி:**— நன்று நங்காய்! நீ நெருநல் கொணர்ந்த செண்பக மலரின் மணம் மிகவும் சிறந்து இருந்தது. இன்றும் அம்மலரோடு அழகிய முல்லையையும் அரக்காம்பல் இதழையும் இணைத்து ஒரு கண்ணி பிணைந்து கொணர்ந்து தருவாயா?

**நங்கை:**—அம்மையே! அவ்வாறே செய்வேன். தலைமாலையுடன் தனித்த பூந்தாரும் தளிர்களுடன் தொடுத்துக் கொணர்வேன்.

**கண்ணகி:** —அவ்வாறே கொணர்வாய்! (தேவியை நோக்கி) ஏடி தேவி! நீ என்ன பணி ஆற்றுவாய் எனக்கு?

**தேவி**;—பெண்ணரசியே! யான் நினக்கு வேண்டிய, பூங்கொடி, பசுந்தழை, தேம்பிழி, தீங்கனிகள் இவற்றை எல்லாந் தேடிக்கொணர்வேன். அதோ அப்பாறைமீதுள்ள வேங்கையின் கொம்பில் அழகிய தேம்பிழியும், மணம் நாறும் மலர்க் கொடியும் உள. யான் அங்குச் சென்று அவற்றைத் திரட்டிவரத் தங்களது ஆணையை வேண்டுகின்றேன்.

**கண்ணகி:**—அவ்வாறே சென்று அவற்றைக் கொணர்க?

**தேவி:**—அப்படியே தாயே!

[இருவரும் செல்லுகிறார்கள். **கண்ணகி தனித்துள்ளாள்.**]

**கண்ணகி:**—என் பாங்கியர் இருவரும் என்னை இச் சுனையின் பக்கல் தனியே விட்டுச் சென்றனர். இங்கு வீசும் நறுமலர் மணமும், ஆடும் இளந்தென்ற

லும் என் களைப்பை அறவே நீக்கிவிட்டன. மேலும் இன்று யான் என் தோழியருடன் வருங்கால் பல நன்னிமித்தங்களைக் கண்ணுற்றேன். மேலும் என்று மில்லாத உவகையால் எனதுள்ளம் நிரம்புகின்றது. என் இடது தோளும் இடது புருவமும் ஓயாது துடிக்கின்றனவே! இருக்கட்டும் என் மனம் மகிழ ஒரு பாட்டுப் பாடுவேன். எதை நினைந்து பாடுவேன்?......... .........ஏன்? எங்கள் குலக்கொழுந்தாம் அம்மையப் பரையும் அன்னையாம் அங்கயற் கண்ணியையும், குழந்தை முருகவேளையுமே நினைந்து பாடுவேன்.

(பாடுகிறாள்)

க. சிறையாரு மடக்கிளியே யிங்கேவா தேனொடுபால்
முறையாலே யுணத்தருவன் மொய்பவளத் தொடுதரளந்
துறையாருங் கடற்றோணி புரத்தீசன் றுளங்குமிளம்
பிறையாளன் றிருநாம மெனக்கொருகாற் பேசாயே!

உ. ஒளியா லுலகின் றுயிரனைத்து
மீன்போற் செவ்வி யுறநோக்கி
அளியால் வளர்க்கு மங்கையற்கண்
அன்னே கன்னி யன்னமே
அளியால் இமவான் திருமகளாய்
ஆவியன்ன மயில் பூவை
தெளியா மழலைக் கிளிவளர்த்து
விளையாட் டயருஞ் செயலென்னே?

ங. மதியு நதியு மணியு மொருவர் மகிழ நிகழு மத்தனே
வலிய குறவர் பொலிய வுதவு வடிவ மகன்வ சத்தனே
நிதியு மெனவு ணினையு மடியர் நிறைய வருணி மத்தனே
நிமலை யிருகண் மணியொ டுலவ நிலவு மறுமு கத்தனே
கதிய மயிலொண் முதுகி னுதய கதிரி னமர்ச மத்தனே
கமழு நறிய புழுகி னளறு கலவி யொளிர்பு யத்தனே

முதிய கருணை பொதிய வளரு முதல்வ தருக முத்தமே
முகைய தகைய குரவு விரவு முருக தருக முத்தமே.

[கண்ணகி ஒருபுறம் அமர்ந்து பாடுங்கால் வள்ளல் பேகன் மற்றொரு புறம் நின்று உற்றுக் கேட்கின்றான்.]

பேகன் :—(செவிமேற் கைவைத்து) ஆ என்ன ஒலியின்பம். எங்கிருந்து தோன்றுகிறது. (நாற்புறமும் சுற்றிப் பார்த்தல்) ஒன்றுங் கண்ணிற் புலப்பட்டிலதே?............ஒருக்கால் இது யாழிசையோ? ............இல்லை. இல்லை. குழல் இசை போலும். .........அதுவும் இல்லை. (கால் நிலத்திருக்க உடலை அசைத்தல்) என்ன! என்றால் அங்குமிங்கும் செல்ல இயலவில்லையே! நிலை விலங்கு பூட்டியதுபோல என்னைப் புறஞ்செல்லவொட்டாமல் தடைப்படுத்திய இச்சோலை ஏழிசைச் சூழலோ? அன்றேல் விஞ்சையர் மேவும் பைம்புனமோ? அறிந்திலனே! இவ்விடத்தின் இயல்பே இவ்வாறிருக்க, இங்கிருந்து எழும் இப் பண்ணிசையோ என் செவிக்கா லோடி என் இன்னுயிர் தழைய இன்பம் நல்குகின்றதே! இஃதென்ன அமுத வெள்ளமோ? ஆ! ஆ!! கேட்குந் தோறும் என் உள்ளமேயன்றி என்பும் உருகுகின்றதே! இத்தகைய சிறந்த இசைக்கு முதற்பொருளாக உள்ளதைச் சென்று கண்டு அறிவேன்.

[கண்ணகிபால் இசைவழியே செல்லல்]

ஆ! இஃதென்னை வியப்பினும் வியப்பு! அழுமுகங்கோடல், தலையசைத்தல், மிடறுவிம்மல், பற்காட்டல் முதலிய உடற் குற்றங்களின்றித் தோன்றுகின்றதே! ஒருக்கால் அது பொற் பாவையோ? அல்லது நல்லழகு பெற்ற ஓவியமோ? பக்கல் சென்று அறிகுவம்.

[அண்மையிற் செல்லல்—கண்ணகி மறைதல்].

ஏ! இறைவ! யான் எங்குளேன்! உண்மையில் யான் உணருவது நனவா அல்லது கனவா? இப்பொழுது இங்கு என் கண்ணைப் பறிக்கின்ற இவ்வுருவம் விண்ணினின்றும் இறங்கிய மின் கொடியோ? மின் கொடியெனில், விண்ணிலேயே இயங்குமேயன்றி மண்ணுலகில் இயங்காதே; மேலும் வானத்திலும் கண்டபொழுதே மறைந்துவிடுமே! அதற்கு மாறாக இந்நேரமளவும் விளங்கித் தோன்றலால், மின்னல் என்பது கூடாது. வேறு ஒன்றாகத்தான் இருத்தல் வேண்டும். உற்று நோக்குவம்.

[தன் கண்களைத் துடைத்துக்கொண்டு பார்த்தல்]

ஓ! மின்னல் அன்று! தாமரையும், ஆம்பலும், நீலமும், காந்தளும், முல்லையும் காணப்படுகின்றன. எனவே இவற்றால் தொடுக்கப்பெற்ற ஒருமாலை என்பனேல், மலர் மணங்கமழுமேயல்லது இசைபாடாதன்றே! பாடுகின்றமையில் என் கண்ணை விட்டகலாத இவ்வுரு விண்ணுறை அணங்கோ! விஞ்சையர் மகளோ! வரைவளர் தெய்வமோ! தெரியவில்லையே?

[சிந்தித்தல்]

நடுக்கடலில் திசை மயங்கிச் செல்வோனுக்குத் திசையறிகருவி கையகப்பட்டதுபோல என் உளத்துள் ஓர் ஆராய்ச்சி பிறக்கின்றது. தெய்வ மகளிர் எனில், ஆடையில் அழுக்கேறாது; சூடிய மலர் வாடாது; பூசிய சந்தனம் புலராது; கண் இமைத்தலும், கால் நிலந் தோய்தலும், மெய்ந்நீரரும்பலும் உடல் நிழலிடுதலும் உண்டாகா. மேலும் ஆடவரைக் கண்டவிடத்து அச்சமும் தோன்றாது. இம் மங்கையர்க்கோவெனில் ஆடையில் அழுக்கேறியுளது.

அவளது கண்ணியும் சாந்தமும் என் உள்ளமேயென வாடியுள்ளன. நிலந்தோய்ந்து நடத்தலிற் பயின்ற அடியும், புடை பெயர்ந்து பிறழும் கண்ணும், என்னைக் கண்டவிடத்து அஞ்சி, வியர்த்த மேனியும் உடையாள். ஆதலால் தெய்வமல்லள். இந்நிலத்து வாழும் மங்கையருள் ஒருத்தியே ஆதல் வேண்டும்.

ஆ! கெட்டேன்! கெட்டேன்!! இதுகாறும் மங்கையரை நினைத்தறியாத என் மனம் இந் நங்கை பாற் சென்றதே! என் செய்வேன். இறைவ! பிறர் தோள் மணந்த பேதையோ அல்லளோ என ஆராயாது என் உள்ளம் இவள்பாற் சென்றதே. என்ன பாவம். இவள் காலில் சிலம்பிருக்கிறதா என்பதை அறிவோம். (அடியை நோக்குதல். மகிழ்வுடன்) நான் செய்த நல்வினைப்பயன் இருந்தவாறென்னே! மணவினை கழியாத இம்மங்கை என்றால் விரும்பத் தக்கவளே. இவளிடம் சிறிது உரையாடுவோம். (அருகிற் சென்று) மாதரரசே! முத்த நகை மானே! சுனை குடைந்து மலர் கொய்து விளையாடாமல் தவம் செய்வாரைப்போல் தனித்திருக்கக் காரண மென்ன? கொடிய விலங்குகளும் கடிய முட்களும் நிறைந் துள்ள இம் மலைச் சாரலினின்றும் இவண் எவ்வாறு வந்தாய்? நங்காய்! நாணத்தால் வாய்பேசாதிருக் கின்றனைபோலும். (கூந்தலைக் கூர்ந்து நோக்கி) அது என்ன? உன் தலைமீது! ஓ! வண்டோ? என்ன இறுமாப்பு அதற்கு! (வண்டை நோக்கி) ஏ வண்டே, பல மலரினும் பயின்ற நினக்கு ஏன் இத் தடுமாற்றம் காந்தள் எனக் கருதிக் கறங்குபோற் சுழல்கின்றனையே? அவைகள் என் உயிர் அனையாளின் கைகளெனக் கருதுவாய். அரக்காம்பல் எனப் பரபரப்

பாய் நோக்குகின்றனை? வாய் என்பதை அறிந்திலையோ? "உண்ட பொழுதில் உணர் வொழிக்கும் கள்" என்பர். கள் வெறியால் கண் மயக்குற்றனை போலும். நன்று! நன்று! நின் பேதைமை! மங்கையர்க்கு இடை, நூலினும் நுட்பமுடையது அன்றோ? இடைக்கு வேறு வகையால் தீங்குவரினும் காக்கையேறிப் பனம்பழம் வீழ்ந்ததையொப்ப பழி நினக்கே வந்தடையும். ஆதலின் நீங்குதி! (வண்டோட்டல்—கண்ணகி கடைக்கணித்தல்)

"கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்
என்ன பயனு மில"

என்பர் செந்நாப் புலவர். இவளும் நாணத்தால் வாய் பேசமாட்டாது திகைத்தனளேனும் என்னிடத்துத் தனக்குள்ள அன்புடைமையை இவள் கண்களே வெளியாக்கின. இதனால் கண்ணிற் சிறந்த உறுப்பில்லை என்பதைக் கண்டுகொண்டேன். இனி இவள் தந்தை, மனம் உவந்து கொடுப்பக் கொண்டு கனற் கடவுள் சான்றாக மணம் புரிவேன். (கண்ணகியை நோக்கி) நங்காய்! நான் சென்று வருகின்றேன் (செல்லல்)

காட்சி முடிவு

## காட்சி 4

**இடம்** ;—ஆவியநல்லூரில் ஒரு வழிநடை.

**காலம்** :—பிற்பகல்.

**உறுப்பினர்** :—கருங்கண்ணன், செவ்வைச்சூடி, மலர்முடியார்.

[வள்ளலின் திருமணச் சிறப்புப்பற்றிய வழிப்போக்கரது உரையாடல்.]

[பெருமூச்சும் வலுத்த ஏப்பமும் தோன்ற இருவர் மூட்டையுடன் வழிச்செல்லல்.]

**மலர் முடியார்** :—ஓ! ஓ!! கருங்கண்ணனா? பின்புறம் நிற்பது யார்? செவ்வைச் சூடியாரா? எங்கிருந்து வருகிறீர்கள்? என்ன உங்கள் தலையில் இவ்வளவு பெரிய மூட்டை? எங்கேயாவது பெரிய விருந்தோ? வரும்படி ஏதாவது உண்டா? உங்களைப் பார்த்தாலே எனக்குப் பொறாமையாக இருக்கின்றதே.

**கருங் கண்ணன்** :—ஓய்! என்ன ஐயா! மலர்முடியாரே! ஒன்றும் அறியாதவர் போல உளறுகின்றீரே? தாங்கள் ஊரில்தானே இருக்கின்றீர்கள்?

**மலர் முடியார்** :—இல்லையே! நான் ஊரிலிருந்தால் இது போன்ற சமயங்களில் உங்களை விட்டுப் பிரிவேனா? அன்றி இத்தகைய வினாக்களைத்தான் எழுப்புவேனா? என்ன பெரிய நிகழ்ச்சி நிகழ்ந்தது?

**செவ்வைச் சூடி** :—நிகழ்ந்த நிகழ்ச்சியெலாம் சொல்வதற்கு இதுபோது நேரமில்லை. "உண்டகளைப்பு தொண்டருக்கும் உண்டென்பர்" பெரியோர். என்போன்றார் உண்டால் உடனே படுத்துறங்க வேண்டுமென்பது தெள்ளிதில் விளங்க வில்லையா?

நாளைக்குக் காலையில் வரும், சிறுமலைப்புறம் வாழும் முருகவேள் தனக்குத் தனையன் பிறந்தமைக்கு எல்லோரையும் அழைத்துளளான். அங்குச் செல்லலாம். இப்பொழுது எங்களைத் தொந்தரவு செய்யாதீர். (கருங் கண்ணனை நோக்கி) வாரும் இப்படி விரைந்து. அதோ தெரியும் அறச்சாலைக்குச் சென்று சற்றுக் கண் அயர்வோம்.

**மலர் முடியார்** :—(சினமெழ நோக்கி மிடறுவிம்ம) என்னடா! செவ்வைச்சூடி, உனக்கு வந்த இறுமாப்பு! யானைக்கொருகாலம் வந்தாலும் பூனைக்கொரு காலம் வராதா? ஓடம் வண்டியில் ஏறுவதையும் வண்டி ஓடத்தில் ஏறுவதையும் உணராயோ? ஏதோ ஒரு திங்களாக ஊரில் இல்லாததால் உன்னை உசாவ நேரிட்டது. நடந்த செய்தியைக்கூடச் சொல்லவில்லை; அரச விருந்திலிருந்து வருகின்றவர்கள் போற் காணப் படுகின்றீர்களே என்று கேட்டேன்; என்னை ஒரு பொருளாக மதிக்காது பெரியவன் என்பதையும் உணராது ஏதேதோ வாய்க்கு வந்தவாறெல்லாம் பேசுகின்றாய்; அப்படியா ஆயிற்று? நேற்றையப் பையல் நீ...

**கருங் கண்ணன்** :—மலர் முடியாரே! சினங் கொள்ள வேண்டாம். நான் கூறுகின்றேன். அவன் கிடக்கிறான், தப்பிலிப் பயல்!

**மலர் முடியார்** :—இதுவல்லவோ நல்லவர்கட்கழகு; தன்னலம் அற்றவன்தான் மனிதன். என்ன நிகழ்ந்தது; சொல்?

**கருங் கண்ணன்** :—இதோ கூறுகின்றேன் கேளுங்கள். மலர் முடியாரே! நம் நாடு இருக்கின்றதே வைகாவூர் நாடு......

**மலர் முடியார் :**—ஆமாம்.

**கருங் கண்ணன் :**—இதன் தலைவன் ஆவிய நல்லூரி லிருந்து ஆட்சிபுரியும் வள்ளல் பேகன் இருக்கின்றார் அல்லவா?

**மலர் முடியார் :**—தெரியும் சொல்லு.

**கருங் கண்ணன் :**—அவர் நம் முருகப் பெருமானின் திருமலையாம் பொதினி மலையின் கீழ்ப்பகுதியிலுள்ள ஆவியர் குடிப் பெருந்தகை நாகவேளின் அருமைச் செல்வியாம் கண்ணகி தேவியை நேற்றைய நன்னா ளின் நற்பொழுதில் முருகனது அருளால் திருமணம் புரிந்தார்.

**மலர் முடியார் :**—ஓ! ஓ!! அப்படியா! அடடா! எனக்குத் தெரியாமற் போயிற்றே! உம்...... மணமக் கள் நீடு வாழட்டும்! நம் தலைவன் பேகனது கொடைத் திறனும் ஓங்கட்டும்! அவனது அருள் என்போன் றோர்க்கு எளிதாகுக!.........பின்னர் என்ன நிகழ்ந்தது.

**கருங் கண்ணன் :**—பின்னர் மணம் முடிந்ததும் நம் தமிழ்நாட்டு முடியுடைய மூவேந்தர்களும் வாழ்த்துக் கூறினார்கள். அதன் பின்னர், பரணர், கபிலர், ஔவை யார், அரிசில்கிழார் முதலாய புலவர் பெருமக்கள் மண மக்களின் பெருவாழ்வையும் சிறந்த புகழையும் வேண் டினர். சிற்றரசர்களும் பிறரும் அரசருக்குப் பல காணிக்கைகளும் மணப்பரிசுகளும் வழங்கினர்.

**மலர் முடியா :**—அவ்வளவு தானா?

**கருங் கண்ணன் :**—என்னையா, அவசரம்! நின்று போகுமா அவ்வளவோடு; அதற்கு மேலேதான் நமக் குரிய இடம் வருகிறது.

**மலர் முடியார் :**—உம் — அதையல்லவோ முதலிற் கூற வேண்டும்.

**கருங் கண்ணன் :**—திருமணத்திற்குச் சென்ற ஒவ்வொருவருக்கும் ஒரு வராகன் பொன் நன்கொடை அளிக்கப்பெற்றது. அதோடு உடுப்பதற்குக் கொட்டைக்கரைப் பட்டுடையும் வழங்கினர். பின்னர் தேவாமுதத்தை ஒத்த உணவு. எத்தனை வகை தெரியுமா? அடடா! கொடுத்து வைத்தவர்களுக்குத்தான் கிடைக்கும்.

**மலர் முடியார் :**—அப்படியா? ஐயோ! எனக்குத் தெரியாமற் போயிற்றே!

**கருங் கண்ணன் :**—பலகாரங்களில் எத்தனை வகை தெரியுமா? அடடா! என்ன சாப்பாடு. அறுசுவையுண்டியையும் ஏழாவதாக முகமலர்ச்சியோடு கூடிய இன்சொற் சுவையோடு அளித்தது இருக்கிறதே அதுதான் குறிப்பிடத் தக்கது......

**மலர் முடியார் :**—நீங்கள் கொடுத்துவைத்தவர்கள்! என்போன்ற தீவினையாளர்கட்கு ஏன் இவை கிட்டும்.

**கருங் கண்ணன் :**—எல்லோரையும் நமது தலைவர் பேகன் பெருமானே நேரே யிருந்து வரவேற்றுக் கண்காணித்த பெருமையை எப்படிச் சொல்லுவேன்.

எதற்கும், மலர் முடியாரே! நீவிர் விரைந்து செல்லுவீராயின் ஒரு வராகன் கிட்டா விட்டாலும் ஒப்பற்ற உணவும் உடுத்தற் குரிய உடையும் தவறாது கிட்டும். விரைவிற் சென்று அவற்றையாவது பற்றும்.

**மலர் முடியார் :**—நமக்குக் கிட்டுவது தானே கிடைக்கும். இதோ ஓடுகின்றேன்.

[விரைந்து செல்லுகின்றான்—ஏப்பமிட்டுக் கொண்டே இருவரும் வழிச்செல்லல்.]

(காட்சி முடிவு.)

## காட்சி 5

இடம் :—அரசவை.

காலம் :—பிற்பகல்.

உறுப்பினர் :—பேகன், பரணர், கபிலர், காவலன்.

[பேகன் தனது அவையில் புலவர்களுக்குப் பரிசில் வழங்குதல்.]

**பேகன்:**—உலகம் போற்றும் உயர் அருட்கடலே, நின்பெருமையை என்னென்பேம். நின் திருவருட் பெருக்கால் என் குடிமக்களும், என்னை நாடிய புலவரும் இனிது வாழ்வாராக!

**பரணர்:**—பெருங்கல் நாடனும் பேக! நின்புகழ் ஓங்குக. நின்னிடம் பரிசில் பெற்று அதனால் இன்பக் கடலுள், திளைத்து இனிது வாழ்ந்துவந்த பாணன் ஒருவனை, நெருங்கிய உறவினருடன் மிக்க வறுமைப்பிணியும் பசிப்பிணியும்வாட்ட, மெலிந்துவருந்திய, ஒரு புலவன் கண்டு, "பொன்னரிமாலையை யணிந்த மனைவியையும், கடிய குதிரையைப்பூண்ட நெடிய தேரையும், எல்லா வகையான நலங்களையும் கொண்டுள்ள பசும் பொன்னால் ஆய தாமரைப்பூவைஅணிந்த ஏ பாண! எம் வறுமைப் பிணிக்கு மருந்துண்டோ?" என்று கேட்டனன். அதற்கு அப்பாணன் "மதம் மிக்க யானையினையும், மனஞ்செருக்கிய குதிரைகளையும், கொடைமடத்தையுங்கொண்ட எம்மிறைவன் பேகனை நீ அறியாயோ? அவன் பிறர்க்குக் கொடுக்கும்போது மறுமைப் பயனைச் சிறிதும் நோக்காது, பிறர் படும் வறுமைப்பிணியையே நோக்குகின்ற தலைவன் ஆயிற்றே! அவனது கைவண்மை யுணராத நீயும் வறுமையின் விளைவை நீக்குதற்கு இயலாதவனாயினாய்; ஆதலால்

அவன்பால் இன்றே செல்வாய்!" என்று கூறினன். இறைவ! இத்தகைய புகழ்மொழிக்கு இலக்காய நீ நெடிது வாழ்வாயாக!

**பேகன்:**—புலவர் பெரும! பூவுடன் கூடிய நாரும் மணம் பெறுவதை யொப்ப, தங்கள் கூட்டுறவால் அன்றோ இப்பேறுகள் யாவும் பெறுதற்கு உரியவன் ஆகின்றேன்.

**கபிலர்:**—வரையாது கொடுக்கும் வள்ளால்! பகைவர் அஞ்சும் தோள்வன்மை மிக்க பேக! நினக்கு நலம் மிகுக! நீர் இல்லாத வற்றிக்கிடக்கும் குளத்திலும், மிகவும் அகன்ற நல்ல விளையுளைத் தருகின்ற நிலத்தின் கண்ணேயும், சொரிந்து செல்லுகின்ற மழை களர் நிலத்தையும் கடற்பரப்பையும் வேண்டாமெனத் தவிர்ப்பது இல்லை. அதுபோல, பெரும! நின் கொடை எத்தகையாரிடத்தும் செல்லுகின்றது. நீ பிறர்க்குக் கொடுக்கும் நிலையில்தான் அறியாமையைப் பூணுகின்றாய். ஆனால், மதம் மிக்க யானைகளையும் கழல் புனைந்த கால்களையும் உடைய பேக! நின்னை எதிர்த்து வந்த படையுடன், வீரர்கள் அல்லாதாரும், புண்பட்டுள்ளோரும், மூத்தோர்களும், இளைஞர்களும் கலந்து நின்றாலும், அவ்விடத்து அன்னவர்களை நீக்கி எஞ்சியுள்ளவர்களோடு பொருது மீளும் பெற்றியுடையவன் நீ யாதலால் நினக்குப் படைமடம் இல்லை. நின் விறற்கொடி வாழ்க!

**பேகன்:**—கற்றவர்க்கொரு மணியாய கபில! பாவலர் தொழுதெழும் பரண! நீவிர் இருவீரும் எனக்குற்றநண்பும் அமைச்சும் ஆக இருக்கும்வரை என்னை நாமகளும் பூமகளும் விரும்புவார்களென்பதில் ஐயமுண்டோ? என் எல்லா நலன்களுக்கும், பெருமை

கட்கும், சிறப்புகட்கும் முதற்பொருளாவார் தங்களை யன்றி எவருளர்? தங்கள் திருவடிகட்கு என் எண்ணிறந்த வணக்கம் உரியதாகுக.

கபிலர், பரணர்:—“வாழி! வண்கைப் பேக! வாழி வாழி!!

பேகன்:—எளியேன் திருவடிக் காணிக்கைகளை ஏற்றருள வேண்டுகிறேன். (பரிசில் வழங்கல்.)

காவலன்:—பன்னலங் கனிந்த பார்த்திப! எளியேன் வணங்குகின்றேன். தங்களுடன் இளமரக்கா சென்று தென்கால் நுகரவேண்டி, நம் கோப்பெரும் பெண்டு, கண்ணகி தேவியாரின், வருகை யெனத் திருவாய்மொழி கட்டியங் கூறிவருஞ் சொற்கள் என் செவிப்புலம் புக்கன.

பேகன்:—ஓ அப்படியா! நன்று வரட்டும்! புலவர் பெருமக்களே! யான் வெளிச்சென்று உலாவிவர விடை தாருங்கள்.

புலவர்கள்:—மன்னர் பெரும! நின் உளத்தின் படியே ஆகுக. நீ, நீடு வாழ்வாயாக.

[மன்னன் வணங்கி அவையின் நீங்குதல்]

காட்சி முடிவு.

## காட்சி 6

இடம் :—ஓர் இளமரக்கா.

காலம் :—மாலைப்பொழுது.

உறுப்பினர் :—கண்ணகி, பேகன்.

[ஆவியர் குடித் தலைவரும் அவர் உயிர்த் துணைவியும் பூங்காவில் தென்றல் நுகரும்போது கொடைச் சிறப்பைப் பற்றி ஆய்தல்.]

**பேகன்:**—என் உயிர்க் கினியாய்! அதோ பார்த்தனையா, அவ்வேங்கைமரத்தின் கீழுள்ள பாறையை? அதன்மீது வேங்கை மரத்தின் உதிர்ந்த பூந்தாது மூடிக்கொண்டிருப்பதை நோக்கின், ஒரு நெடிய வேங்கைப்புலி படுத்துறங்குவதுபோல் தோன்றவில்லையா?

**கண்ணகி:**—ஆம் நாதா! இயற்கை வனப்பினுற் பெறும் இன்பமே உயிர்க்கு உறுதி பயப்பதாகும். இங்கே பாருங்கள்; நம் இயற்கை நங்கையின் இன்ப நிறை எழிலினை இச்சுனையினின்று தோன்றும் இச் சிற்றருவி காட்டுகின்றது. கருங்குவளை நிறைந்த இச் சுனையின் நீர், அதன் கீழுள்ள பள்ளத்தில் வழிந்தோடுவதை நோக்கின், இவ்வனமகள் நம்மைக் கண்ட மகிழ்ச்சியினுல் ஆனந்தக் கண்ணீர் பெருக்குவதை நிகர்க்கின்றது.

**பேகன்:**—என் உயிர்த்துணையே! நன்று கூறினுய். நின் மதிநுட்பத்தை என்னென்பேம்! இவ்வாறு ஒரு புலவன் கூறியிருப்பின், அவன் விரும்பியவெல்லாம் இன்னே பெற்றிருப்பான். இயற்கை அன்னையின் வனப்பை ஆய்ந்து உளத்தில் அமைத்து, மனத்திற் கேற்ப உண்மைக்கு ஊறுதோன்றுமுறையிற் கவிதை செய்யும் புலவரை ஒத்துள்ள நினக்கு என்னையே பரி

சிற் பொருளாகக் கொடுப்பதை விடுத்து, வேறு என்ன சிறந்த கைமாறு தருதற்கு உளது?

கண்ணகி:—என் உயிர்த்தலைவ! நீங்கள் கொடுத்துத்தானு உங்களை நான் பெறவேண்டும்? எனக்கே தங்களைப்பெற உரிமையுண்டு. நீங்கள் கூறுவதற்கு முன்னரே, கொண்டும் விட்டேன். அஃதிருக்கட்டும், எனக்கு ஒரு ஐயம் உளது. தாங்கள் என்னை மன்னித்தருளவேண்டும்.

பேகன்:—என் இனிய நங்காய்! நினக் கேற்பட்ட ஐயம் என்னை? என்னிடம் கூருமல் எவரிடங் கூறித் தெளியப்போகின்ருய்? கண்ணே கூறுவாய். என்ருல் இயன்றவரையில் விடை தருவேன்.

கண்ணகி:—என் பேரன்புக்குரிய பேக! என்னைப் பொறுத்தருள்க! மங்கையாவார் கணவன் சொல்லுக் கடங்கி, அவன் கருத்தின்படி ஒழுகுதலையே கற்பு என ஆன்ரேர் கூறுவர். ஆதலால் எளியேனது வினு, தங்களது கருத்துக்கு மாறுகொள்ளின் அடியாளைத் திருத்தி ஆட்கொள்ள வேண்டுகின்றேன்.

நாதா! மக்கள் பெறுதற்குரிய உறுதிப்பொருள்கள் நான்கினுள் செல்வமே சிறந்ததாகின்றது. ஏனெனில் தாம் தாம் அறவழியில் ஈட்டிய செல்வத்தால் நல்ல அறத்தையும், இம்மை யின்பங்களையும், மறுமைப் பேற்றையும் அடைய இயலும் என்பது ஆன்ரேர் காட்டிய நல்வழியல்லவா? ஆதலால் அறவழியால் ஈட்டிய பொருளை அதற்கு அழிவு ஏற்படாவகையில் தக்கார் தகாதார் என்பதை யோர்ந்து 'வளவனு யினும் அளவறிந்து அழித்து உண்' எனும் முதுமொழியைக் கருத்திற்கொண்டு அறத்தைச் செய்

வதே, என்றும், எவர்க்கும், நன்மையைப் பயப்ப தாகும். அவ்வாறின்றி, எவர்க்கும், எதையும் எல்லை யின்றி, பொருளாக்கத்தை மதியாது இட்டால், அப் பொருளும் நம்மை மதியாது விட்டு அகலுமே! 'அருள் இல்லாதார்க்கு அவ்வுலகம் இல்லையாவது போலப் பொருள் இல்லார்க்கும் இவ்வுலக இன்பம் இல்லாதுபோகும்' என்பன போன்ற கருத்துக்கள் எல்லாம் தங்களை நாடி வந்தவர்களுக்குள், தாங்கள் அருளும்போது என் நினைவிற்கு அடிக்கடி தோன்று வதுண்டு. ஆகையால் அடியாள் கூறுவது என்னை யெனின், தங்களை நாடிவரும் புலவர்கள், பாணர்கள், இரவலர்கள் முதலியோர்களின் தகுநிலை யுணர்ந்து அவரவர்க்கு ஏற்றவாறு அளவுடன் கொடுத்துதவு வதே சாலச் சிறந்த தொண்டும் என்பதே யாகும்.

பேகன் :—என்னே? நங்காய்! நன்று கூறினாய். 'பேதைமை என்பது மாதர்க் கணிகலம்' என்பதைத் தெற்றென விளக்கிவிட்டாய். உலகத்தில் கொடுப்ப தால் குறைவு வாராதென்பதை நீ அறியாய்போலும். ஒருவன் தனது மானத்தையும், உயர்வையும், கல்வி யையும் பொருட்படுத்தாது 'பல்லெல்லாந் தெரியக் காட்டி' எனக்கு இல்லை என்று கேட்பதினும் இழிவு உண்டோ? அவ்வாறு ஒருவன் தனக்குவரும் இழிவை யும் பொருட்படுத்தாது கேட்ட நாளில், தன்னிடம் உள்ளதையும் இல்லை என்று கூறும் கன்னெஞ்ச னினும், கடையாவான், எவனுளன்? ஆதலின் நம்மை நாடிவரும் பரிசின்மாக்களின் உள்ளக்குறிப்பை யுணர்ந்து ஏற்பவர் இன்முகம் காணும்வரை ஈதலே சிறப்புடைத் தொன்றாகின்றது. அதற்குத்தான் கொடை என்ற பெயரும் பொருத்தமுறும். ஒருவன்

தனக்கு இவையிவை வேண்டுமென வலிந்து கேட்டுப் பின்னர்த் தருவது ஈகையின்பாற்படாது. மேலும் 'மேலுலகம் இல் எனினும் ஈதலே நன்று' எனும் பெரியார் வாழ்ந்த நாட்டிடைத் தோன்றிய நினக்குக் கொடையில் ஐய மேற்படவே வேண்டாம். ஆண்டவனால் தோற்றுவிக்கப்பெற்ற இவ்வுலகில் அனைவரும் ஒரு தரத்தவரே யாவர். ஏதோ ஊழ்வினை வலியால் ஒவ்வொருவரும் மேற்கொளும் செயல்கள் வேறுகின்றன. அவ் வேறுபாட்டால் உள்ளவரைத் துதிப்பதும் இல்லாதவரைத் தூற்றுவதும் தவறுடைத்தாகும். ஆதலால் பரிசின்மாக்கள், புலவராயினும், இரவலராயினும், பாணராயினும், கூத்தராயினும், யாவரேயாயினும் ஆகுக. பொதுப்பட நோக்கின் யாவரும் மக்களே. ஆதலால் பெண்ணே! யாவர்க்கும் என் கொடை ஒருதிறத்ததாகவே அமையும் என்பதை அறிவாய்.

**கண்ணகி:**—என் அருள்நிறை துணைவ! ஏதோ, அடியாள் மனத்துட் கொண்டதைத் திருத்துவான் வேண்டி, அறியாமையால் புகன்றேன். எத்தகைய கல்வி பயின்றும், உணர்ச்சி மிகுந்தும் செயல் சிறந்திருப்பினும் பெண்புத்தி பின்புத்தி என்பது தாங்கள் உணராதது அன்று. தங்களது உயரிய கருத்தினை வரும் வகையறியா எளியாட்குத் தங்களது அருள் நோக்கு உரியதாகுக.

**பேகன்:**—கண்ணகி! நீ இது குறித்துக் கவலற்க. நின் ஐயத்தை என்னிடம் வெளியிட நீயும் உரிமையுடையாய். அதனைப் போக்க யானும் கடமைப் பட்டுள்ளேன். தவறு என்பது மக்கள் இயற்கையில்

ஒருபகுதியல்லவா. வருவாயாக! நாம் நமதில்லம் செல்வோம்.

**கண்ணகி**:—வணக்கம் என் நாதா! தங்கள் கருத்தின்படியே ஆகுக.

[இருவரும் பூங்காவை விட்டு நீங்குதல்.]

(காட்சி முடிவு.)

---

## காட்சி 7

இடம் :—மலைச்சாரல்.

**பொழுது** :—மாலைப்பொழுது.

**உறுப்பினர்** :—வள்ளல்பேகன், காவலன்.

வள்ளல் தன் காவலுடன் மலைவளம் கண்டு மீளுங்கால் [குளிர்காற்ருல் நடுங்கி ஆடிய ஒரு மயிலுக்குத் தனது மேற்போர்வையை நல்குதல்]

**பேகன்**:—ஏடா! காவலோய்! இன்று பெய்த மழையினுல் என் உடல் முழுதும் நனைந்துபோயிற்று. இங்கு எழும் காற்றும் தண் என வீசுவதால் எனக்கு உடல் நடுக்கம் ஏற்படுகின்றது. நாம் விரைந்து நம் இல்லம் சேரவேண்டும். அன்றேல் எங்கேயாகிலும் தக்க இடத்தில் தங்கவேணடும். அவ்வாறு இன்றிக் காலநிலையைப் பொருட்படுத்தாது சென்ருேமே யானுல் தவருது பிணிவாய்ப் படுவோம். மேலும் பொழுதும் போய்விட்ட படியால் எங்கும் மூடுபனி பெய்யத் தலைப்படுகின்றது. அதனுல் இம்மலைப் புறங்களில் நாம் வழி தவறி விடவும் நேரிடும். ஆதலால் நாம் விரைந்து வழி நடப்போம்.

**காவலன்**:—ஆம்தலைவ! நாம் புறப்படும்போதே வான வெளியின் தென்புறத்தில் கருமுகில் கூடி மின்

றது. அப்பொழுதே இன்றுமாலை மழை வருமென்று கருதினேன். தாங்கள் இவ்வளவு தூரம் வருவீர் களென்று உணர்ந்திருப்பேனேயாயின் தாங்கள் இவ் வாறு மழையினால் நனைந்து வருந்துமாறு விட்டிருக்க மாட்டேன்.

**பேகன்:**—போடா! பேதாய்! வினைமுடிந்ததும் வெற்றுரை கூறுகின்றாய்! நீ கூறுவதைத் தடுத்தவர் எவர்? இப்பொழுது அவ்வாறு செய்வேன், இவ்வாறு செய்வேன், என வீண்சொல் விளம்புகின்றாயே! அது தொலையட்டும் நாம் விரைவில் செல்லுவோம்; வா.

**காவலன்:**—அப்படியே தலைவ! (காவலன் தொடரப் பேகன் செல்லல்.)

**பேகன்:**—(ஒரு மரத்தை உற்று நோக்கி) ஏடா! காவல! அம்மரத்தின் பூங்கொம்பில் அமர்ந்துள்ள பொருளைப் பார்த்தனையா? அடடா! அந்தோ!!

**காவலன்:**—எங்கே தலைவ! (பார்த்துத் தலையை ஆட்டி) ஓ! அதுவா? ஆம் பார்த்தேன் வேறு ஒன்று மில்லை. பெரும! நம் மலைப்புறம் உள்ள மயில்தான். இப்பொழுது பெய்த கருமுகிலின் குளிர்ந்த நீரால் நனையப்பெற்று, உடல் குன்றியுளது. இனிமேல் இம் மழைநாளிலெல்லாம் எல்லாப் பறவைகளும் இப் படித்தான் இருக்கும். இதில் என்ன துன்பம் உளது.

**பேகன்:**—ஏடா மதியிலி! நினக்குப் பிறவுயி ரிடத்து இரக்க உணர்ச்சியில்லை போலும். தன் னுயிரைப்போல் மன்னுயிரையும் மதிக்க வேண் டாமா? காலமோ கார்காலம்; இந்நாளில் இக்குளிர்ந்த மாலைப்பொழுதில் மிக்க பெருமிதத்துடனே உலாவி யும் என்போன்றார்க்கு இன்பம் அளிக்கும் முறையால் களித்து ஆடவேண்டிய இப்பறவை, தனது நெடிய

தோகையினைமட்டும் விரித்துக் குளிரால் நடுக்கங் கொண்டு துன்பத்துடன் ஆடுவதை நீ காண வில்லையா? உனக்கு உள்ளது, என்ன, குருட்டுக் கண்ணோ? இதில் என்ன துன்பம் உளது என்கின்ற னையே? பிறர்படும் துன்பத்தை உணரும் சிறப்புத் தன்மை நின்பால் இன்னும் வராதது இரங்கற் பாலதே!

ஏ! இறைவ! நின்னாற் படைக்கப்பட்ட இவ் வுலகத்துள் உள்ள எல்லா உயிர்களும், துன்பத் தாலோ, துக்கத்தாலோ, கவலையினாலோ வருந்துமாறு இருக்கின்றனவே! ஆ! என்ன கொடுமை! இவ்வுலகத் தில் கவலையால் கலங்காத மனம் உண்டா? துன்பத் தால் துடியாத உயிர் உண்டா? துக்கத்தால் துளியாத கண் உண்டா? இவ்வாறு துன்பமும், கவலையும், துக்க மும் கூடிய இம்மண்ணிற் பிறந்தார், நிலைத்துள்ள நன்மையை நாடாது, பிறர் பொருட்டுத் தொண்டு புரியும் செயலை மறந்து இறுமாந்திருப்பது எற் றிற்கோ! ஆ ஆ......(மயிலை நோக்கி) ஏ! மயிலே! நீ நின் கருத்தைப் பிறர்க்குரைக்கும் நாவன்மை பெற்றி லாமையினால் நின் குறையை யாமே நேரிற் கண்டு தெளிந்தனம். யான் நினது வனப்பை நாளும் கண்டு களித்தற்பொருட்டே இறைவன் நின்னை இம்மலையிற் படைத்தனன்போலும். அழகிய, ஒளி பொருந்திய தோகையை விரித்து மகிழ்ந்து ஆடுதற்குரிய நின்னை இக்குளிர்காற்று நடுக்குறச் செய்தது. இனி நீ கவலை கொள்ளவேண்டாம். இதோ என் கையிலிருப்பதைக் காணுதி. இக்கலிங்கம் உயரிய பட்டினால் ஆக்கப் பெற்றது. இதை நினக்கு இன்னே தருகின்றேன். நீ பெற்று நின்னை வாட்டும் குளிரை உடனே ஓட்டுவா

யாக. இதோ இதைப் பெற்றுக்கொள். (மயிலிடம் சென்று போர்வையை அதன்மீது போர்த்தல். காவலன் பொருமையோடு அச்செயலைக் கண்டு தலையை அசைத்தல்.)

---

## காட்சி 8

**உறுப்பினர்** ;—காவலன். குடுகுடுப்பைக்காரன்.
**காலம்** :—காலைநேரம்.
**இடம்** :—வழிநடை.

[வள்ளலது கொடை மடத்தை அவன் காவலன் பழித்துச் சென்றதும், குடுகுடுப்பைக்காரன் தோன்றி மன்னனுக்கு நேர்தற்குரிய பிரிவைக் குறித்து மொழிதல்.]

**காவலன்**:—(தனித்து நின்று) ஏ முருகா! ஏரகத்து நாதா! என்ன மாறுபட்ட மனம்! வள்ளல் பேகன் பித்துக்கொண்டனன் போலும். உலகத்தில் எத்தனையோ சிறந்த மன்னர்கள் உளர். அவர்கள் பரந்த நிலப்பரப்பும், நிறைந்த செல்வமும், மிகுந்த ஏவலும் பெற்றும் இருக்கின்றார்கள். பழுமரம் நாடிய பறவைகள் போலக் கூத்தரும், பாணரும், இரவலரும், புலவருமாக நாளும் அவர்களை நாடுகின்றனர். ஆனால் இத்தகைய சீர்கேடுற்ற செயலை எங்கும் கேட்டறியேன். கண்டதே காட்சி; கொண்டதே கோலம் எனக் கொள்வதா அரசர் முறை? நானுந்தான் நேற்றுச் சென்றிருந்தேன். என்மனம் தாழவில்லையே! இவ்வாறு வரம்புகடந்து பொருளுக்குச் செலவைக் காட்டினால், குடைநிழலிருந்து குஞ்சரம் ஊர்ந்ததை விடுத்து நடைமெலிந்து ஓரூர் நண்ணவேண்டியது

தான். இப்பொழுது கார்காலம் என்று தெரியாதா? மாலை நேரங்களில் மழை பெய்வது இக்கால இயல்பு தானே. அதனை யார் தடுக்க இயலும். மாரி நீரில் மயில் நனைந்ததாம், குளிரினால் வாடுகின்றதாம்; நடுங் கிக் கவலையுறுகின்றதாம். நடுங்கினால் என்ன? ஆண்ட வன் அளித்த அழகான சிறகுகள்தாம் அதன் உடலைப் போர்த்துக் கொள்ளுகின்றனவே; ஐந்நூறு பொன் விலையுள்ள பொன்னரிகள் நிறைந்த கொட்டைக் கரை யுடைய பட்டுடையா அது விரும்புகின்றது? என்ன பேதைமை! நம் மன்னர் இயற்கைப்பொருளின் உடற்கூற்றை உள்ளவாறறியாது வீண் செலவு செய்கின்றனரே! இவரது செயலை நம் தோழி தேவி யின் வழியே நம் அரசி கண்ணகிக்கு அறிவித்து இவ ருக்கு அறிவுச்சுடர் கொளுத்துவிக்கவேண்டும். ஆகவே யான் விரைந்துசென்று இப்பொழுதே ஆவன புரிவேன்.

[காவலன் மறைதல்—குடுகுடுப்பைக்காரன் தோன்றல். குடுகுடுப்பை அடித்துக்கொண்டு வரல்]

குடுகுடுப்பைக்காரன்:—ஓடிவாடா! ஓடிவாடா!! ஓடிவாடா!!! குட்டிச்சாத்தான்! நொண்டிச்சாத்தான் ஓடிவாடா! ஓடிவாடா! மதுரைக்கறுப்பு மாமுண்டிக் கறுப்பு. ஓடிவாடி! ஓடிவாடி!! ஓடிவாடி!!! இரத் தக் காட்டேறி, இடுகாட்டுக் காட்டேறி, கொல்லைக் காட்டேறி, குழந்தை யுண்ணும் காட்டேறி. ஓடி வாடா! ஓடிவாடா!! வெள்ளை முனியா, குள்ள முனியா, சடை முனியா, சண்டி முனியா! கொங்கத்து முனியா, எங்கள் சங்கத்து முனியா! எங்கள் சங்கத்து வேப்பமரத்திலிருந்து விலகிப்போன முனியா! ஓடி வாடா! ஓடிவாடா!! ஓடிவாடா!!! உற்றதைச் சொல்

லடா, உள்ளதைச் சொல்லடா, ஒளிக்காமல் சொல்லடா, மறைக்காமல் சொல்லடா, ஓ! ஓ!! கலகம் வருகுது, கலகம் வருகுது கலக்கம் வருகுது, மனசிலே கவலை பெருகுது, கவற்சி பெருகுது; நம்ம மவராசன் வாசலிலே, கூட்டுப் பிரியுது; நம்ம மவராசி, நல்ல தாயி, உலகமாதா, உண்மை பேசுவாள், நல்லமாதிரி, ஏழைக்கு இரங்குவாள், ஒருவருக்கும், தீங்கு நினைக்க மாட்டாள், நம்ம மவராசா இருக்காரு, இராசாதிராசா, பெரிய கொடையாளி, நல்ல குணசாலி, எல்லாருக்கும் உபகாரி. ஏதோ காலவித்தியாசம் பொல்லாத காலம், காசாசைப் பிடித்த காலம், நல்லவருக்குத் தீங்கு வருகுது, இணைபிரியுது, துணை நீங்குது, ஐயோன்னு இருக்காங்க, பத்துத் திங்கள் பறக்குது; அறிவாளி வாராங்க; அன்பு பிறக்குது. அருள் வளருது, துன்பம் நீங்குது, துயரம் ஒழியுது, கவலைமாளுது, கலக்கம் சாவுது, ஐயாவும் அம்மாவும் சந்தோசம் அடையுராங்கா, எல்லாருக்குங் கொடுக்கிராங்க, மவராசி, மவராசா, நலம் வருகுது! நலம் வருகுது!! நலம் வருகுது!!!

(மறைதல் காட்சிமுடிவு)

## காட்சி 9

உறுப்பினர் :—பேகன், கண்ணகி, தோழியர்.

காலம் :—முற்பகல்.

இடம் :—அந்தப்புரம்.

[கண்ணகி தேவி, பேகனின் கொடைத்திறத்தைக் குறை கூறியதால் பேகன் சினமுற்று அவளை வெறுக்க, அதனால் அவள் காடு சென்று தனித்திருக்க உறுதி கொள்ளல்.]

[கண்ணகி ஓய்ந்த முகத்துடன் நிற்றல்—பேகன் அவளை அடைதல்]

பேகன் :—அன்பே! செந்தாமரையை ஒத்த நின் முகப் பொலிவு இன்று என்றுமில்லா வகையில் மாறு பட்டிருக்க நிகழ்ந்த நிகழ்ச்சிகள் யாவை? நின் உடற்கு ஏதேனும் ஊறு ஏற்பட்டதா? அன்றி நினக்கு எவரேனும் தீங்கு எண்ணினரா?

கண்ணகி :—அவ்வாறு ஒன்றுமில்லை நாதா! எனது உடலில் எத்தகைய பிணியும் இல்லை. தங்களிடத்து அன்புகொண்ட அடியாளை இந்நில உலகில் யாரே னும் தீங்குசெய்ய இயலுமா?

பேகன் :—கண்ணே! கண்ணகி! பின்னர், நின் மனத்தைத் துன்பம் செய்து நிற்கும் பொருள்தான் என்னை? நின் முகந்தான் நின் உள்ளக் கலக்கத்தை வெளியிடுகின்றதே!

கண்ணகி :—ஆம், என் துணைவ! எனக்கும் ஒரு துன்பம் உளது. அஃது என் உடற்பிணி யன்று; உளப் பிணியே ஆகும். அதுவும் நேற்றுத் தாங்கள் மலைக்குச் சென்று வந்ததிலிருந்து மிகுந்துளது.

பேகன் :—என்ன! நீ கவலை கொள்வதற்கு நான் மலைக்குச் சென்று வந்ததுதானா காரணம்? வியப்பி

னும் வியப்பு! அப்படி யான் மலையில் என்ன செய்த தாக நீ கருதுகின்றாய்? என் செயலுக்கும் நின் மனத் தாங்கலுக்கும் என்ன தொடர்பு? என் செயலால் நின்மனம் புண்படக் காரணந்தான் என்னே?

**கண்ணகி** :—என் நாயக! என்னைப் பொறுத்தருள வேண்டும். அடியாள் தங்கள் உடலில் பாதியல்லவா? தங்களது வாழ்க்கையை முட்டின்றி நடத்துதற்கு எளியேனின் துணையும் இன்றியமையாது வேண் டாமா? தங்களது வாழ்க்கையில் ஏற்படும் நன்மை தீமைகளுக்கும் இவ்வுலகத்தில்மட்டும அன்று மறுமை யிலும் தங்களோடு உடன் இருந்து பங்குகொள்ளும் உரிமை அடியேனுக்கு உரியது என்பதைத் தாங்கள் ஏன் மறந்துவிட்டீர்கள்? தாங்கள் இவ்வாறு கூறின், தங்களது நலத்தையே நாளும் கருதும் என் மனம் ஏன் புண்படாது? தாங்கள் கண்ணாகவிருக்கும்போது அடியாள் அதைக் காக்கும் இமையாக வன்றோ இருக்கின்றேன்? மேலும் மனைவியாவார் கணவற்கு இன்பத்திலும் துன்பத்திலும் உடனிருந்து அவற்கு உலகியலில் உற்ற அமைச்சாகவும் இருப்பதற்குரியார் என்பதைத் தாங்கள் அறியாதவர்களல்லவே?

**பேகன்** :—கண்ணகி! நீ உரைப்பன யாவும் உண் மையே. நின் மனத்தைத் துயரிலாழ்த்தும என் செயல்தான் என்ன என்பதையன்றோ யான் அறிய விரும்புவது.

**கண்ணகி** :—பெரும! என் மனத்தை வருத்துவது தாங்கள் மிகவும் விரும்பி ஓர் அழகிய மயிலுக்குக் குளிர் நீங்கும் எனக் கருதித் தங்களது போர்வையை அளித்த செயலே ஆகும்.

**பேகன்:**—ஆ! என்ன சொன்னாய்? அப்படியா! கண்மணி, என் கொடைத்திறனா நின் மனத்தை வருத்துகின்றது?

**கண்ணகி:**—காதல! நான் கருதுவதைத் தாங்கள் தவறாக உணர்கின்றீர்கள். தங்களது கொடைத்திறனை அடியாள் புறக்கணிக்கவில்லை. "அன்பிற்கு முண்டோ அடைக்குந் தாழ்" என்பர் ஆன்றோர். ஆனால் அதற்கும் ஓர் அளவு உளது. முன்னர்ப் பறம்பிற் கோமான் பாரி வள்ளல் ஓரறிவு உயிராகிய ஒரு முல்லைக் கொடிக்குத் தன் அழகிய தேர் என்றும் பாராது அதன் பக்கல் நிறுத்தி அதனைப் படரவிடுத்தனன். அத்தேரும் அக்கொடி வளர்வதற்காகவாவது பயன் பட்டது. பின்னொருநாள், ஆய் அண்டிரன் நாகநாட்டினின்றும் தான் அருமையாகப் பெற்ற போர்வையை ஆலமரத்தின் நிழலில் வீற்றிருந்த சிவபெருமானுக்கு அளித்தனன் என்றால் அதுவும் ஏற்புடைத்தாகும். மேலும் தகடூர் புரந்த அதிகன் தான் அரிதிற்பெற்ற நெல்லிக் கனியை நீர் வேட்கையுற்ற ஔவையாருக்கு வழங்கினான். அவன் செயலால் உலகம் தழைக்க அம்மையார் பன்னெடுங்காலம் வாழ்ந்து பல தொண்டுகள் ஆற்றினார். எனவே கொடைமடம் என்றதனால் "கொடுத்தற்குப் பிறிதொரு பொருள் இருப்பினும் அதனைக் கருதிற்கொள்ளாது, தன்பால் கொடுத்தற்குரிய பொருளின் மேன்மையையும் உணராது, அப்பொருளை உவந்து அப்பொழுதே கொடுப்பதுவேயாகும்" என்பது தானே பொருந்தும். அக்கொடையால பிறர் பயன்பெற வேண்டாமா? தாங்கள் மயிலுக்கு அளித்த போர்வையால் அம்மயிலுக்கு ஏதாவது பயன் உண்டா? மழையால் நனைந்தாலும் வெயிலால

உலர்ந்தாலும் பனியால் விறைத்தாலும் உடலில் எத்தகைய துன்பமும் பெறமுடியாதவகையில் இயற்கை வாழ்வைப் பெற்றுள்ள அப்பறவை தாங்கள் அளித்த போர்வையைக் கொண்டு என்ன பயனைப் பெறப் போகின்றது. இச்செயல் எல்லாம் அறமாகாது என்பதே அடியாளின் துணிபு. அதுபற்றியே என் உள்ளமும் கவல்கின்றது.

**பேகன்** :—(விரைந்து எழுந்து நின்று, சினத்துடன்) கண்ணகி அறிந்தேன்! அறிந்தேன்! என் கொடையின் முறையைச் சீர்செய்ய வல்லவள் நீயோ? நன்று! நன்று! நின்பேதைமை!(தனித்து வந்து) இனி இவளுடன் பேசுவதும் கூடாது. முன்னொரு நாளை நான் பலருக்கும் கொடுப்பது முறையன்று என்றாள். இன்று என் செய்கையையே கண்டிக்கத் துணிந்தாள், என்னே இவளது அறிவீனம். மனைவி என்பாள் கணவனுடன் அவன் புரியும் தொண்டுகட்குத் துணை நின்று அவற்றை நிறைவேற்ற வேண்டும் என்பதை விட்டு, தடை கூறுகின்றவளை என்னென்போம்? "காதல் மனையாளும் காதலனும் மாறின்றித் தீதில் ஒரு கருமம் செய்ப" என்பர் ஆன்றோர். அவ்வாறின்றி என் செயலில் முரண்படும் இவளை இனியும் உடன் கொண்டு எச்செயலையும் என்னால் செய்ய இயலாது. ஆகவே இவளுக்கு நல்லறிவு பிறக்கும் வரையில் இவளது தாயகத்தில் இவள் இருப்பதே நலமாகும். ஆதலால் இன்றே இவளை இவள் தாயகம் போக்குவேன். (கண்ணகியை நோக்கி) மாதே! நீ இன்றே நின் தாயகம் செல்வாய். நான் சென்று வருகின்றேன். (செல்லல்)

கண்ணகி:—(தனித்து) ஆ தெய்வமே! இதுவோ நின் செயல்! ஏ! மலைகெழுநாடா! மாவண்பேக! நான் தடைகூறுது இன்னே என் தாயகமா செல்லல்வேண்டும், ஆ! என்னை நீ அறியாய் போலும். அன்று என்னை அனற்கடவுள் சான்ருகப் பெரியார் பலர் முன்னிலையில்இன்றிருந்து நின்னை இகத்தும் பரத்தும் பிரியேன், எனக் கைப்பற்றிய செயலினை மறந்தனையோ? நன்று! நன்று!! நின்செயல்! குழவி அன்னையைக் கருதாவிடினும், அன்னை அதனிடத்துக் கொண்ட அன்பைக் கைவிடுவளோ? யானும் நின் மனைவியல்லளோ? நீ என்னை மறந்தாலும் யான் நின்னை மறக்க ஒண்ணுமா? எனக்குற்ற தாயும், தந்தையும், ஆசானும், சான்றோனும், தெய்வமும் ஆய நீ எவ்வாறு என்னை மறுக்க இயலும்? ஏதோ என் ஊழ் வினையின் விளைவு போலும். 'ஊழ்வினை உருத்து வந்தூட்டும்' தன்மைத்தாதலால் அதனைத் தடுக்க எவரால் ஆகும்? என்னை நீ மணந்துகொண்டு நினக்குத் துணையாக்கிக் கொண்டபின் எனக்குத் தாயகம் ஏது? இதனை நீ உணராதது என்னை? நின் மனம் மாறுபட்டது போலும். ஆ! ஆவது தானே வரும். (மேல் நோக்கி) ஏ! இறைவ எல்லாவற்றிற்கும் நீயே துணையாவாய்! (தோழியை நோக்கி) ஏ! தேவி! இனி யான் இங்கு இருத்தல்கூடாது. என் உயிர்த்துணைவர் என் மனப்பான்மையை உணராது என்மீது வெறுப்புக் கொண்டார். என்னைக் காணுந்தோறும் இனிச்சீற்றங் கொள்வார். அவர் மனமும் துன்புறும். மேலும் மேலும் வெறுப்புக் கிடமாகுமேயொழிய இணக்கத்திற்கு இடமில்லை. ஆதலால் நம் நாட்டிற்குரிய பொதினிவரை மீதுள்ள அசோகு நிறைந்த பூங்கா

வில், அவர் மனம் என்மீது திரும்புமாறு நம் குலக் கொழுந்தாம் முருகவேளின் அருளை நாடி நோன்பு நோற்பேன். நீயும் எனக்குத் துணையாக வருவாய்! ஆங்கு உறைவதற்கு வேண்டுவனவற்றைத் திட்டஞ் செய்வாயாக! நாம் இன்றே ஆண்டுச் செல்லவேண்டும்.

தேவி :—தாயே! அவ்வாறே செய்கின்றேன்.

[தேவி உட்செல்லல்— கண்ணகி துயருடன் நிற்றல்.]

காட்சி முடிவு.

---

## காட்சி 10

**உறுப்பினர் :**—கண்ணகி, தேவி, நங்கை, குறத்தி, கபிலர், அரிசில்கிழார்.

**காலம் :**—முற்பகல்.

**இடம் :**—பொதினிமலைச்சாரல்.

[கானகத்திருந்த கண்ணகியிடம குறத்தி தோன்றிக் குறி கூறிச்சென்றதும், புலவர்பெருமக்கள் ஆண்டுச்சென்று தேர்தல் மொழி புகன்று பேகனிடம் அழைத்துச் செல்லல்]

தேவி :—அம்மா கண்ணகி! தங்கள் காதலர் தங்கள்மீது கொண்ட அன்பை அகற்றுமாறு சூழ்ந்தவர் யாரோ? அம்மையே! தங்களைக் காணுந்தோறும் கண்டெனக் காமுற்றவர் இன்று வேம்பெனத் தங்களை வெறுத்து நோக்கச் சூழ்ந்தவர் எவரோ? ஆ! கொடுமை! கொடுமை! அன்னவர் சூழுரை நஞ்சினும் கொடிது; மலையினும் பெரிது.

**கண்ணகி :**—தேவி! இதற்கு நாம் என்ன செய்ய வல்லோம். மிகுந்த பசுக்கள் கூடியிருப்பினும் ஒரு கன்று அக்கூட்டத்தில் உள்ள தன் தாயையே நாடிச் செல்வதை நீ காணவில்லையா? சிறந்த வாய்ப்புக்களைப் பெற்றிருந்தாலும், ஒருவர் செய்த ஊழ்வினை அவரையே தொடர்ந்துவந்து பற்றும் தன்மைத்தாகும். ஆதலால் நாம் பிறரை நோவதால் ஆய பயன் என்ன?

**நங்கை :**—அம்மையே! தாங்கள் கூறுவதும் உண்மையே. நம்மால் ஆவது என்ன இருக்கிறது? எல்லாம் இறைவன் செயல். ஏ! இறைவ! எம் தலைவியின் துயரினைக் களைவாய்!

**குறத்தி :**—(மறைவில்) கூடை முறங் கட்டலையா! அம்மே! கூடை!

**தேவி :**—அம்மா! ஏதோ கூவுதல் கேட்கின்றதே!

**குறத்தி :**— (மறைவில்) பச்சை குத்தலையா! அம்மே! பச்சை!

**நங்கை :**—அம்மா கண்ணகி! குறத்தியின் குரல் ஒன்று கேட்கின்றது. நம் நகர்ப்புறய நாலைந்து நாட்களாக ஒரு குறத்தி, பாண்டிய நாட்டுக் குறத்தியாம், நன்றாகக குறி சொல்லுகிறாளாம். இங்கே கூவிக் கொண்டு வருபவள் அவளாகத்தான் இருக்கவேண்டும். அவளை இங்கு அழைத்து வரலாமா?

**கண்ணகி :**—நங்காய்! என்ன நீயும் அறிவில்லாதவள்போலப் பேசுகின்றனையே! குறியாவது, கோடாங்கியாவது. என்னமோ அவைகளில் எல்லாம் எனக்கு மனப்பிடித்தம் இல்லை. வேண்டுமானால் உன் விருப்பப்படி பொழுது போக்கிக்கொள்.

**குறத்தி :**—குறிகள் கேட்கலையா! அம்மே! குறி!

**(வெளிவரல்)**

**நங்கை** :—ஏ குறத்தி! இங்கே வா.

**குறத்தி** :—அம்மா! இதோ வந்து விட்டேன்.

**நங்கை** :—ஏடி! நீ யார்? எந்த ஊர்? என்ன பேர்!

**குறத்தி** :—அம்மா! நான் தெற்கே வெகுதூரம். தென்பாண்டி நாடு, பொதிய மலைக் குறத்தி, கூடை முறங் கட்டுவேன், குறிகள் சொல்லுவேன், ஒண்டாத பெண்களும், பின் ஓடிவரும் மை தருவேன். (அவையை நோக்கி, உங்களில் யாருக்காவது கொஞ்சம் வேண்டுமா?) அண்டாத ஆண்களையும் ஆட்டி வைக்கும் மை தருவேன். (கண்ணகியை நோக்கி) ஏனம்மா! உங்களுக்குக் கொஞ்சம் தரலாமா? என் பாட்டி எயினி என்றால்தான் உங்களுக்கெல்லாம் தெரியுமே! அவள் பேர்த்தி குறிஎயினி நான்.

"மந்தமா ருதம்வளரும் மலையெங்கள் மலையே!
வடகலைதென் கலைபயிலும் மலையெங்கள் மலையே!
கந்தவேள் விளையாடும் மலையெங்கள் மலையே!
கனகநவ மணிவிளையும் மலையெங்கள் மலையே!
இந்தமா நிலமபுரக்கும் செந்தமிழ்த்தாய் அம்மே!
இன்பமுறும் தென்பொதிய மலையெங்கள் மலையே!"

**தேவி** :—ஏனம்மா! பொதியமலையின் பெயரைக் கேட்டிருக்கின்றோம்; நேரில் பார்த்ததில்லை. வடகலை தென்கலைபயிலும் மலை என்றாளே! வடமொழியும் தென்மொழியும் அங்கே படிப்பார்களோ?

**கண்ணகி** :—தேவி! அப்படியன்று. வடமொழியும் நம் செந்தமிழை விரும்பிக் கற்கும் மலையென்பது பொருளாகும் போலும்.

**தேவி** :—ஏ குறத்தி! உங்கள் மலையின் பெருமையைக் கேட்கக் கேட்க இனிமையாக இருக்கிறது. அதன் பெரு வளப்பங்களை எல்லாம் கூறுவாயாக.

அது பெரிய காடடர்ந்த மலையாயிற்றே! சிங்கம் புலி கரடிகளெல்லாம் இருக்குமே; அங்கே நீங்களெல்லாம் எப்படிக் குடியிருப்பீர்கள்?

குறத்தி.—அம்மா! அது பெரிய முனிவர்கள் இருக்குமிடம். சிங்கம் புலிகள் எல்லாம் எவருக்கும் ஒரு தீங்கும் செய்யாதம்மா!

"சிங்கமும்வெங் களிறுமுடன் விளையாடும் ஒருபால்,
சினப்புலியும் மடப்பிணையும் திளைத்திடுமங் கொருபால்
வெங்கரடி மரையினொடும் விளையாடும் ஒருபால்
விடஅரவும் மடமயிலும் விருந்தயரும் ஒருபால்
அங்கணமர் நிலங்கவிக்கும் வெங்கவிகை நிழற்கீழ்
அம்பொன்முடி சூடுமெங்கள் அரியதமிழ்ச் செல்வி
செங்கமலப் பதம்பரவும் கும்பமுனி பயிலும்
தென்பொதிய மலைகாண்மற் றெங்கள்மலை யம்மே!"

தேவி:—எயினி! உங்கள் மலையின் பெருமை எங்கள் மனத்தில் பெருவியப்பை உண்டாக்கி விட்டது. உங்கள் உணவு, செயல் முதலியவற்றைக் கூறுவாயாக.

குறத்தி.—அவ்வாறே கூறுகின்றேன் கேளுங்கள்.

"கொழுங்கொடியின் விழுந்தவல்லிக் கிழங்குகல்லி
[எடுப்போம்
குறிஞ்சிமலர் தெரிந்துமுல்லைக் கொடியில்வைத்துத்
[தொடுப்போம்
பழம்பிழிந்த கொழுஞ்சாறுந் தேறலும்வாய் மடுப்போம்
பசுந்தழையும் மரவுரியும் இசைந்திடவே உடுப்போம்
செழுந்தினையும் நறுந்தேனும் விருந்தருந்தக் கொடுப்
[போம்
சினவேங்கைப் புலித்தோலின் பாயலிற்கண் படுப்போம்
எழுந்துதமிழ்த் தாய்காலில் விழுந்துவினை கெடுப்போம்
எங்கள்குறக் குடிக்கடுத்த இயல்பிதுகாண் அம்மே!"

தேவி :—எயினி! நன்று! நன்று!! இருக்கட்டும் குறி பார்க்கத் தெரியும் என்றாயே; நீ தக்கவர் எவருக் கேனும் குறி சொல்லியதுண்டா ? குறி எப்படிச் சொல்லுவாய. கைக்குறி பார்ப்பாயா? அன்றி முகக்குறி பார்ப்பாயா? அல்லது முறக் குறி பார்ப்பா யா ?

குறத்தி :—எல்லாக் குறியும் பார்ப்பேன் அம்மா.

" முன்னொருநாள் தமிழன்னை முகக்குறிபார்த் தவட்கு
முத்தமிழ்தேர் புலவர்களைப் பெறுவையென்று சொன் [னேன்
பின்னொருநாள் உமைபாகன் பெயரினைக்கொள் பெரியான்
பிறந்துவிளைக் கரந்தையிலே புரந்திடுமென் றுரைத்தேன்.
இன்னும்அவன் துணையாக இசைந்துபணி புரிவோர்
இருமொழிதேர் கதிரேசன் முதற்பலரென் றுரைத்தேன்.
சொன்னகுறி எல்லாம்என் சொற்படியே பலிக்கும்
தொகுத்துநீ நினைத்தகுறி இனிச்சொலக்கேள் அம்மே!"

தேவி:—நல்லது எயினி! எங்கள் தலைவியின் முகத்தைப் பார்த்துக் குறி சொல்லு பார்ப்போம்.

குறத்தி :—அம்மா இந்தக் குறத்திக்கு ஒரு பிடி சோறும் ஒரு சிறு துணியும் கொடுங்கள். இந்தத் தலைக்குக் கொஞ்சம் எண்ணெய் வாருங்கள்.

"நன்றெல்லாம் உடையதிரு நாச்சியரே இந்த
நாயினுக்குப் பிடிசோறும் சிறுதுணியும் நல்காய்!
உன்றன்பேர் வாழ்வாக உறுகணவன் அம்மே!
உனைப்பிரிந்தே மதிமயங்கி உணர்வுஅழிந் திட்டான்.
குன்றினில்வாழ் இக்குறத்தி கொடுக்குமையின் திறம்பார்
குறித்துமுகம் தனிலிடுவாய் கொண்டகுறை தீரும்
இன்றிந்தப் பொழுதிலவன் இங்குவரக் காண்பாய்
எக்குறிதப் பினும்தப்பா திக்குறிபார் அம்மே!"

**நங்கை :**—ஏ குறத்தி! மிக நன்று! இதை ஏற்று மகிழ்வாய்!

**குறத்தி :**—நீங்கள் நீடுவாழ்க! நான் போய் வருகிறேன். இன்னும் எப்பொழுதாவது என் உதவி வேண்டியிருந்தால் சொல்லி அனுப்புங்கள். உடனே வருகிறேன்.

கூடைமுறங் கட்டலையா! அம்மே! கூடை!
பச்சை குத்தலையா! அம்மே! பச்சை!
குறிகள் கேட்கலையா! அம்மே! குறி!
(குறத்தி செல்லல்.)

**தேவி:**—அம்மா! இக்குறத்தி, தங்கள் கணவர் விரைவில் தங்களைச் சார்வார் எனக் கூறிய நற்குறிகளைக் கேட்டீர்களா?

**கண்ணகி:**—என்னடி தேவி இத்தகைய விளையாட்டுக்களெல்லாம் என்னிடம் புகலாதே என முன் கூறியது நினைவில் இல்லையா?

**தேவி:**—அம்மா! பொறுத்தருள்க! (சற்று அப்பால் நோக்கல்) யாரது அங்கே வருபவர்? (உற்று நோக்கல்) அம்மா! அம்மா!! நம்புலவர் பெருமான் அரிசில் கிழாரும், பிறரும் வருகின்றனர் அம்மா.

**கண்ணகி :**—(விரைந்து எழுந்து நின்று) ஆ அப்படியா! வரட்டும். (புலவர்கள் உள்ளே நுழைதல்) புலவர் பெருமக்களே! வருக! வருக! இவண் அமருக. தங்கள் வரவால் நலம் பெருகுக! தாங்கள் இவண் எழுந்தருளினமைக்கு என் உளமார்ந்த வணக்கம் தங்கட்கு உரியதாகுக!

**கபிலர்:**—வாழி! நங்காய்! வாழி! அரிசில் பெரும இவண் அமருங்கள். (அரசியை நோக்கி) அன்னாய்

யான் ஊரில் இல்லாத காலத்து நிகழ்ந்த நிகழ்ச்சிகள் யாவும் அறியப் பெரிதும் வருந்துகின்றேன். ஊர் வந்ததும் செய்தி யுணர்ந்து, நேரே இங்கு வந்துள்ளேன். யான் கூறும் மொழிகட்குத் தாங்கள் செவி சாய்த்தருளவேண்டும். கழிந்தது கருதி வருந்துவது அறிவீனமாகும். ஆனால் நமக்கு நேர்ந்த இன்ப துன்பங்களை நெடிது சிந்தித்து, அவ்வின்பதுன்பங்களால் நாம் எப்பொருளை அறிவுறுத்தப் பெற்றிருக்கின்றோமோ அவற்றின்வழி நின்று நாம் நம்மைச் சீர்திருத்திக் கொள்ள வேண்டுமேயன்றிக் கவலையுற்று வருந்துவதால் என்ன ஆகும்? கற்பின் நடுநாயகமாய் விளங்கும் நினக்கும் தக்காரினத்தனாய் எச்செயலையும் ஊன்றி நோக்கி வினைப்படுத்தும் நின்கணவர்க்கும், நேர்ந்த இப்பிரிவை எம்மனோர் ஆற்றுதற்கில்லோம். ஆதலால் நீ எங்களது வேண்டுகோட் கிணங்கி, இன்னே எங்களுடன் போந்து நின் கணவனுடன் கூடி வாழ்வாயாக! நீ, நின் கணவன் நின்னை ஏற்கும் முறையில் முரண்படுவான் என ஐயுறவேண்டாம். எங்கள் முன்னிலையில் நின்னை அவன் கண்டபொழுதே, மிகு மகிழ்ச்சியுடன் வரவேற்பான். மேலும், நின்னைக் காணாது நின் குடிமக்களும், மழையின்றி வாடி நிற்கும் பயிரைப் போன்று வாடி இருக்கின்றார்கள் என்பதையும் அறியவேண்டும்.

**அரிசில்கிழார்:**—கற்பின் நங்கையாம் கண்ணகி! நின் வருகையைக் குறித்து யான் மிகுதியும் கூற விரும்பவில்லை. நினக்குத் தெரியாதன ஒன்று மில்லை. எத்தகைய துன்பம் வரினும், துயரம் வருத்தினும், கவலையால் மனம் வாடினும், இல்வாழ்க்கையை நடாத்தும் காதல்மனையாளும் காதலனும், அற்ற குளத்தின்

ஆம்பலும் கொட்டியுமன்ன, ஒட்டி நிற்றலைவிட்டுத் தட்டி நடக்கலாகாது என்பது நீ அறியாததன்று. ஆதலால் அன்னாய்! நீ இப்பொழுதே நின் கணவன் பாற் சேருவாய்.

**கண்ணகி:**—பெரியீர்! தாங்கள் கூறும் மொழிக்கு மறு மாற்றங் கூறும் வலிமை எளியாளிடம் இல்லை. என் தலைவர் என்னை வெறுத்ததோடமையாது அன்று என்னைக் கைப்பற்றிய காலத்து ஆன்றோர் முன்னிலையில் இன்றுபோல் என்றும் இடையறா அன்புடன் இருப்பேன் என்று கூறிய உறுதிமொழி யையும் மறக்க நேர்ந்ததே என்றுதான் என் உள்ளம் எரியின் இழுதெனை உருகுகின்றது. எனினும், பேரறி வும் பெருந்தகைமையும் எம்போன்றாரின் நலத்தையு மே நாடும், தங்களது திருமொழியின் வழியே நின்று, என் குறையைப் போக்குவேன்.

**கபிலர்:**—(தேவியை நோக்கி) தேவி! விரைவில் நகர் செல்லத் திட்டஞ் செய்வாய். நாங்கள் சென்று மங்கை நல்லாள் செல்லுதற்குற்ற மணி நெடுந்தேர் கொணர்வோம். (செல்லல்.)

**தேவி:**—பெரும! அவ்வாறே விரைவில் ஆவன வெல்லாம் திட்டம் செய்கின்றேன்.

(காட்சி முடிவு.)

## காட்சி 11

[தமிழ்ப்பெருந் தலைவர்கள் பேகனிடம் இல்வாழ்க்கையின் நலத்தை விளக்கி, கண்ணகிபால் அவன்கொண்ட வெறுப்பை நீக்கி, இருவரையும் நல்லறம்படுத்தி, புகழுடன் அவர்கள் நீடுவாழத் தமிழன்னையின் தாள்களைப் பரவுதல்.]

இடம் :—அரசவை.

காலம் :—பிற்பகல்.

உறுப்பினர் :—பேகன், காவலன், கண்ணகி, தேவி, அரிசில் கிழார், கபிலர், பரணர்.

(பேகன் தனித்திருத்தல்.)

காவலன்:—ஆவியர் குடியின் ஆண்டகையே! நின் திருவடித் தாமரை என் முடிக்கு அணியாகுக. நம் கோயிற் கடைவாயிலின்கண் புலவர் பெருமான் அரிசில்கிழார், கபிலரும் பரணரும் சூழ நின்று உள்ளே வர, தங்களது ஆணையை எதிர்நோக்கி யுள்ளார்.

பேகன்.—ஆ! அப்படியா! நம்புலவர் பெருமக்களா! இன்னே தடை கூறாது பணிந்து, உள்ளே அழைத்து வருவாய்! விரைந்து செல்க.

காவலன்:—தலைவ! அவ்வாறே அடியேன், அழைத்து வருகின்றேன். (காவலன் விரைந்து சென்று புலவர் பெருமக்களை அழைத்துவரல்)

பேகன்:—வருக! புலவீர்! வருக! வருக!! இவண் அமர்க! (புலவர்கள் அமர்தல்.) நீவிர் மூவரும் ஒன்று கூடி முரசுடரை யொப்ப, ஈண்டு எழுந்தருளிய மைக்கு யான் யாது புரியவல்லேன். தங்களது வரவு நல்வரவாகுக!

**அரிசில்கிழார்:**—அன்பின் வழியே அவனியை அடிமை கொண்டு, கொல்லும் போரில் வெல்லும் வலிமைமிக்க பேக! நல்வாழ்வு பெறுக. எவர் இரப்பினும், அவர்க்குவேண்டும அரிய அணிகலனும், பிறவும் கொடுக்கும பெற்றிமையன் நீ யல்லவா? ஆதலால் நீ மனமுவந்தளிக்கும் பொருளைப் பெற்றுச் செல்ல இவண் யாம் வந்தேம் அல்லேம்! சிறிய யாழில் செவ்வழிப் பண்ணுடன் நின் பெருமையை யாம் விரும்பிப் பாட நீ மனங் கொள்வாய் என்ருல் இன்று யாம் விரும்பியதை நீ மனமுவந்து தருதல் வேண்டும்.

**பேகன்:**—பெரும! தாங்கள் ஏன் என்பால் அத்தகைய ஐயங் கொள்ளவேண்டும்! யானே தங்களது அடிமையல்லவா.

**அரிசில்கிழார்:**—தலைவ! அவ்வாருயின், யான் சொல்லுவதை நீ செவி சாய்த்தருளவேண்டும். நின்னரும் மனைவியாய, கற்பின் கொழுந்தாம் கண்ணகிதேவி நீ அருளாமையால், கண்டவர் இரங்க, மெலிவுற்றுப் பொலிவற்று வருந்துகிருள் என்பதை, குளிரால் நடுங்கிவாடும் எனக் கருதி ஒரு மயிலுக்கு நாகநீலக் கலிங்கத்தை நல்கிய நின்மனம் உணரா திருத்தல் அழகாகுமோ? பெரும! நீ இன்னே நின் மனைவியின் கூந்தலில் குளிர்ந்த மலர்களைச் செருகி அனபுடன் அழைத்துவர நினது குதிரைகளை நின் தேரிற் பூட்டுவாய்.

**கபிலர்:**—சினத்தோடுபுரியும் போர்த்தொழிலும், மறுமைப் பயன்கருதாது அளிக்கும் கொடைத்திறனும, காற்றெனக் கடிது செல்லும் தேரிற் பூட்டிய குதிரைகளும், முருகவேளை வழுத்தும் நெஞ்சமும்,

கொண்ட பேக! நின்புகழ் நெடிது ஓங்குக! புலவ ளுகிய யானே ஒரு அந்தணன் ஆவேன். அந்தணர் ஆவோர் எவ்வுயிர்க்கும் தண்ணளி சுரக்கும் தன்மை யராதலால் அவரது சொல்வழி நிற்றல் அறமுடைத் தாகும். ஆதலின் என் சிறு மொழியை நின் கருத்தில் கொண்டருளவேண்டும். நீயோ இம்மலைநாட்டின் தலைவன்; இங்குள்ள வேட்டுவ மக்கள் மழை வேண்டு மெனக் கருதினுல், தங்களது வழிபடு தெய்வமாம் முருகவேளை வழிபடுகின்றனர்; அவனதருளினுல் மழை பொழிகின்றது; அவர்களும் நீர்வளம் பெற் றமையால் தேனும் தினைமாவும் மிகுதியாகப் பெற்று மகிழ்கின்றனர்; ஆதலால் நின் குடிமக்கள் வானம் சுரக்க முருகவேளை வழிபடுவதையொபப, அக்குடி மக்களினும் சிறந்த நின் இல்லக் கிழத்தியும் நின் னருளையே நாடி வரங்கிடக்கின்ருள். நெருநல், யாம் எம் சுற்றத்துடன் அவளிருப்பிடம் சென்றபோழ்து, நின்னையும், நின் மலைவளத்தையும் பாடினேம். அக் காலை துன்பம் மிகுதியினுல், அடக்க முடியாத நிலை யில் அவளது கண்கள் ஓர் அருவி என நீரைச் சொரிந் தன. அக்கண்ணீர் அவளது மார்பகம் எல்லாம் வழிய, மேகக் கூட்டங்கள் கருத்துக் கனைப்பதை யொப்ப, அவள் நின் அருளையே நினைந்து நெஞ்சடைக்கத் துயர முற்று வாடிக் கதறி நின்ருள் என்பதை நினக்கு உணர்த்தும் கடப்பாடு உடையேம்.

பரணர்:—வள்ளால்! யாம் கூறுவதைத் தடை கூருது ஏற்றுக்கொள்வாய்! நீ; பூங்கொம்பனைய நின் மனைவிக்கு, அருளொழுகு உள்ளத்தனுய்த் தண்ணளி செய்யாதிருப்பது மிகவும் கொடியதாகும். மணமிக்க நீல நிறமுடைய நெய்தல் மலரை யொத்த அவளது

கண்கள் கலங்கியுள்ளன. அருவியே என நீரைச் சொரிகின்றன. அந்நீர் அவளது மார்பை நனைத்து வழிந்தோடுவதால் அவள் அதனைத் தனது காந்தள் மலரனைய கரங்களால் துடைத்துக்கொண்டு நின் திசைநோக்கித் தொழுது நின்று நனிமிக வருந்துகின்றாள். அவளுடன் சில தோழியரும் இருக்கின்றனர். அவர்கள் எவ்வளவோ முயன்று தேற்றியும் அவள் தேறாதிருக்கின்றாள். நாங்கள் அவளைப் பார்த்து எங்கள் நட்பையே விரும்பும் தலைவன் பேகனுடன் நீ உறவு கொள்வாயா, என்று கூறினோம். அதற்கு அவள் தோழிகள் ஒரு முகமாக நின்று, "யாம் கண்ணகிக்கும் பேகனுக்கும் உறவினரல்லேம், பேகன் எம் போன்ற நங்கை ஒருத்தியை விழைந்து பழிச் சொல்லுக்கு ஆளாகி, இப்பூங்கொம்பனையாளையும் நீக்கினான். இக்கண்ணகியோ, அவனது குற்றத்தைப் போக்குவதற்காகப் பசியால் வருந்தி உடலை வாட்டி நோன்பு நோற்றுத் தன் கணவனது தாள்களையே அல்லும் பகலும் மனத்தால் சிந்தனைசெய்து அறப் போர் தலைநின்று வருகின்றாள். இனியேனும் பேகனது அருட்டிறம் இவள்பாற் படாதொழியின் விரைவில் இவளது ஆவி வேறு நல்லுலகை நாடும்; இவளது இறப்பினால் வரும் பழியும் அவனையே சாரும் என்பது திண்ணம்" எனக் கூறியதைக் கேட்ட நான், நெஞ்சம் மிக நைந்தேன். நீ பழியினின்று நீங்கியவனாய் வாழ வேண்டின், அவளை அன்புடன் ஏற்றுப் பண்டுபோல் என்றும் நல்லறமாம் இல்லறத்தை நடாத்துவாயாக.

பேகன்:—புலவர் பெருமக்களே! நீவிர் கூறும் மொழிக்கு மாற்றுமொழி கூறும் ஆற்றல் எளியேனிடம் இல்லை. புலனழுக்கற்ற பொய்யில் புலவராம்

8

உங்களது பிணக்கம், எம்போன்ருர்க்கு மீளா இடுக்கணைத் தருமென்பது ஒருதலை. மூத்தோர் சொல் வார்த்தை அமுதம்; மேலாயவர் வாய்ச்சொற்கள் கேட்டல் இனிது, என்பன வெல்லாம் நம் ஆன்ருேரின் அறவுரைகளன்ருே? ஆதலால், பெரியீர்! தங்கள் விருப்பினபடியே யான் நடப்பதற்குப் பெரிதும் உடன்படுகின்றேன்.

அரிசில்கிழார்:—மாபெரும் பேக! நன்று! இதோ நின் மனைவியை இவண் அழைத்து வருவேன் காண்பாய்; இன்னே அவளை மனமகிழ்வுடன் ஏற்பாய் (வெளிச்சென்று உள்நுழைதல்) அம்மா கண்ணகி இவண் வருக! (கண்ணகி பேகன் பக்கல் சென்று தலை வணங்கி நிற்றல்) தலைவ! இதோ இருக்கின்ருள் நின் காதலி. ஏற்று மகிழ்வாய் (கண்ணகியை நோக்கி) நங்காய்! நின் கணவர் இனி என்றும் நின்னைப் பிரியார் என்பதைத் திண்மையாக உணர்வாய். நினக்கு நின் கணவனே உற்ற தெய்வமாதலால் அவன் சொல்லும் சொற்களுக்கு மறுமாற்றம் உரையாது, அவன் அனபின்வழி நின்று புகழ்பெறுவாய். அவன் ஏதாவது பிழை புரிந்திடினும், இனிய சொற்களாலும், அமைந்த செயலினுலும், அவனது உள்ளத்தை நின் வயப்படுத்துவதே நின் அணிகலனகக் கொள்வாய்! (பேகனை நோக்கி) பேரன்புடைய பேக! நீயும் அவளது உண்மையை அறிந்து, மகளிர்க்குக் கொண்டானிற் சிறந்த தெய்வமும், சுற்றமும் வேறில்லையாதலால் அவளுடன் ஒன்றுபட்ட மனத்தினனய் என்றும இருந்து காகத்தின் இருகண்ணிற் கலந்து நின்ற ஒருமணியை ஒத்து உங்கள் இருவரது அகத்தும் ஓர் உயிராய்த் தழைத்து வளரும் ஒப்பறற அன்

புப் பயிரை வளம்பெற வளர்த்து, நீடிய ஆயுளும், நிறைந்த செல்வமும், தக்க அறிவும், தனிமுதற் பெரு மானின் அருளும்பெற்று இல்லறம் நடாத்தி இன்பம் துய்த்துப் பல்லாண்டு புகழுடன் வாழ்வாயாக! பெரும, இதோ யான் தரும் இம்மாலையை, நினது மனைவியும் எங்கள் கற்பரசியுமாய கண்ணகிக்குச் சூட்டி அவ ளது நிறைந்த அன்புடன் நினது சிறந்த அன்பைப் பொருத்தி இனிது மகிழ்ந்து தண்டமிழ்த்தாயின் தாளிணைப் பரவுவாய். (மாலையை அளித்தல்; பேகன் அம்மாலையைப் பெற்றுக் கண்ணகிக்குச் சூட்டிக் களிப் புறுதல்; யாவரும் தமிழ்த்தாயின் தண்ணருளைப் பராவுதல்.)

வாழிபல ஊழிதொறும் வாழிதமிழ் அன்னாய்!
மைந்தரொடும் தொண்டரொடும் வாழிதமிழ் அன்னாய்!
வாழிதிரு வார்கரந்தை மேவுதமிழ்ச் சங்கம்,
வாழிபல ஊர்களினும் தாவுமிதன் அங்கம்.

வாழியருளோருருவாய் வாழுமாமகேசன்,
வாழிகலை சேர்மதியன் மாசில்தமிழ் நேசன்.
வாழிகலைக் கூடமதில் நாடியபல் லோரே!
வாழிதமிழ்த் தாயருளைத் தேடியநல் லோரே!
வாழிபல ஊழிதொறும் வாழிதமிழ் அன்னாய்!

PUBLICATION No 425

# SANGA KALA VALLALGAL

## Book I

By
SIVA KUPPUSWAMY PILLAI

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS
:: PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD ,::
TIRUNELVELI MADRAS.
NOVEMBER 1946.

Price Rs. 1/8